V211,31 N57
N57.2.8
64764

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 5th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Recruitment of Government servants*

* 61 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Chief Minister be pleased to state the number of Government servants recruited in the Kanyakumari district through the Employment Exchange from 1st November 1956?

THE HON. SRI C. SUBRAMANIAM: The number of persons recruited through the Employment Exchange from 1st November 1956 to 30th April 1957 is 47.

SRI T. T. DANIEL: The erstwhile Travancore-Cochin Government have passed an order that the age-limit for backward communities for Government employment is 28. But according to the Madras Government Order, the age-limit is 25. As the rule regarding the age-limit of 28 is not followed now, a number of people belonging to the backward communities have been affected. Therefore will the Government be pleased to enquire into the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have information about that aspect of the matter now. A separate question may be put.

SRI T. T. DANIEL: The erstwhile Travancore-Cochin Government have prepared a list of backward communities but after 1st November 1956 some of the communities included in that list are not now included in the list prepared by the Madras Government and that has affected some communities in the Kanyakumari district. Will the Government be pleased to enquire into this matter also?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir, I shall look into it.

SRI M. JAGANNATHAN: If the information is available with the Hon. Minister, may I know out of 47 persons recruited through the Employment Exchange, how many of them could be brought under the category of persons belonging to the technical cadre?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have that break-up figure.

[5th July 1957

**Sri K. SATTANATHA KARAYALAR** : பழைய திருவாங்கூர்-கொச்சி எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் இந்தப் பகுதிக்குப் பதிவாகியிருந்த பேர்களுக்கும் இந்த எம்ப்ளாய்மெண்டில் 'செலெக்ஷன்' கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கன்னியாகுமரி ஜில்லாவில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவாகியிருக்கும் நபர்களிலிருந்து 148 பேர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

Sri K. VINAYAKAM : Sir, when once a particular area is merged with another State, is it not the constitutional right that the people in that area should be governed by the rules and regulations of the State concerned, that is, the Kanyakumari district having merged with this State, the people in that area should be governed by the rules and regulations of our State. So, is it right on the part of hon. Members to be always harping on the point that they were enjoying certain facilities in the Travancore-Cochin State and that we should adopt the rules and regulations of that State?

The Hon. Sri C. SUBRAMANIAM : We are always inclined to say that we were enjoying certain facilities forgetting the sufferings undergone there. But apart from that, as far as the rules and regulations are concerned, the rules and regulations obtaining in the Travancore-Cochin State would be applicable there till we adopt or extend the Madras Acts to the Kanyakumari district or make any change.

Sri T. T. DANIEL : The erstwhile Travancore-Cochin Public Service Commission prepared a Waiting List for filling up vacancies as and when they arose. But now certain appointments have been made in the Kanyakumari district from the list furnished by the Employment Exchange by the officers on their own choice. So, will the Government be pleased to enquire into the matter and see that those persons who have been appointed from the list of the Employment Exchange are now replaced by persons whose names have been included in the list prepared by the erstwhile Travancore-Cochin Public Service Commission?

The Hon. Sri C. SUBRAMANIAM : Appointments through the Employment Exchange are made on a temporary basis. As a matter of fact, even out of the 47 persons, ten of them have been replaced by the candidates selected by the former Travancore-Cochin Public Service Commission.

### *Cheap Grain Shops*

* 62 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether any licences have been issued to open cheap grain shops in Kangayam, Coimbatore district during 1957?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It is presumed that the hon. Member wants information regarding the number of fair price shops that were permitted to be opened in Kangayam



5th July 1957]

sub-taluk in Coimbatore district. Up to the end of January 1957 two Fair Price Shops were functioning one in Kangayam town and another in Vellakoil. The fair price shops were closed at the beginning of February 1957 as there was low offtake from the Fair Price Shops on account of the good harvest and consequent large arrival of rice and paddy in the open market. On the Collector's advice a new Fair Price Shop was ordered to be opened in Kangayam town last month.

**Sri N. K. PALANISAMI** : யாருக்கு லைஸென்ஸ் கொடுக்கப் டிருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

**Sri N. K. PALANISAMI** : 1953-ம் வருஷம் இப்போது லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கும் அதே நபருக்கு கள்ளமார்க்கெட் செய்த காரணத்திற்காக அவருடைய 5,000 ரூபாய் மதிப்புள்ள டெபாஸிட்டை அங்குள்ள கலெக்டர் பறிமுதல் செய்தார். இப்போது அதே நபருக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை. ஆகவே தனிக் கேள்வி கேட்டால் பிறகு பதில் சொல்லலாம்.

(Sri N. K. Palanisami rose.)

Mr. SPEAKER : To the first question of the hon. Member the Hon. Minister has stated that he has no information. As regards his second question, he wants notice. He is entitled to say so.

**Sri K. VINAYAKAM** : May I know whether these fair price shops are opened by taking into consideration the population of each area? For instance, in the Madras City, there is one shop opened for every 8,000 people. But is the Hon. Minister not convinced of the fact that the population has been rising from year to year in the Madras City?

Mr. SPEAKER : This supplementary question has nothing to do with the original question. But if the Hon. Minister is willing to answer it, I have no objection.

Sri K. VINAYAKAM : That is why I have modified the question.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that it is not practicable to open fair price shops according to the population of the area. Only a few fair price shops are opened now and then. So far there are about 970 fair price shops opened in the State. These shops are opened mainly with a view to enable the poor people to get rice at a cheaper price.

**Sri A. GOVINDASAMY** : நியாய விலைக் கடைகளுக்கு லைஸென்ஸ் வழங்குகிற நேரத்தில் சிவில் ஸப்ளைஸ் இலாகாவிற்குப் பேப்பர் வருகிறது. ஆகவே நேரடியாகக் கலெக்டர்களே லைஸென்ஸ் வழங்குவதற்கு அவர்களுக்கு அரசாங்கம் அதிகாரம் அளிக்குமா ?

[5th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : லைசென்ஸ் வழங்குவது கலெக்டர்கள்தான். எவ்வளவு நியாய விலைக் கடைகள் திறப்பது என்று சிவில் ஸப்ளைஸ் இலாகா முடிவு செய்யும். அதற்குப் பிறகு யாருக்கு லைசென்ஸ் கொடுப்பது என்பதுபற்றி கலெக்டர்கள் முடிவு செய்து லைசென்ஸ் கொடுப்பார்கள்.

*Memorial in honour of Kattabomman*

* 63 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received recently any representation from the people of Ramanathapuram district for the erection of a memorial in honour of Kattabomman at the place of his martyrdom; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) No, Sir. But a representation was received in 1955 in this regard. As it is the policy of the Government not to undertake such works directly, no action was taken in the matter. If any private agency comes forward to undertake the work, the Government will consider rendering such assistance as is possible.

SRI M. JAGANNATHAN: Sir, will the Government consider the desirability of appointing a Committee of officials and non-officials from the Ramanathapuram district to raise public subscriptions for the erection of a memorial in honour of the late Kattabomman?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think that such a Committee is necessary.

SRI N. K. PALANISAMI : சுதந்திர தின விழாவையொட்டி ஸ்ரீ வ. வே. சு. ஐயர் போன்றவர்களின் ஞாபகார்த்தத்திற்கு சர்க்காரே ஏற்பாடு செய்வது போல், பெரிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய கட்டபொம்மனின் ஞாபகார்த்தத்திற்கு சர்க்காரே ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சுதந்திர தினத்தைக் கொண்டாடும் முறையில், 1857-லிருந்து 1957-வரையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கட்டபொம்மனின் சரித்திரம் அதற்கு முற்பட்டது. ஆகவே கட்டபொம்மனின் ஞாபகார்த்தமாகக் கொண்டாட்டம் நடத்துவது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

SRI A. GOVINDASAMY : இந்த சர்க்கார் அரசியல் தியாகிகளுக்குப் பலவிதமான சௌகரியங்கள் செய்துகொடுக்கிறது. அப்படி இருக்கும்போது, ஏன் வெள்ளையனை வெளியேற்றுவதற்கு அடிகோலிய கட்டபொம்மனுக்கு ஒரு சாதாரண ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதற்குத் தயங்கவேண்டும் ? யாராவது இந்தக் காரியத்தை எதிர்ப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்டபொம்மனுக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதால் கட்டபொம்மனுக்கோ, அவருடைய வம்சத்தினருக்கோ எந்தவிதமான நலனும் ஏற்படப்போவதில்லை. இப்போது 1857-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரையில் சுதந்திரப் போராட்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்காகச் சின்னங்கள் ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தனிப்



5th July 1957]

பட்டவர்கள் கட்டபொம்மனுக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்திக் கொண்டாட்டம் நடத்துவதற்கு முன்வந்தால் அரசாங்கம் அனுமதி அளிக்கும்.

SRI K. VINAYAKAM: Sir, it is popularly believed in South India, especially in Tamilnad, that Jagaveera Pandya Kattabomman was one of the earliest chieftains of the land who opposed the British rule in those days when it imposed taxes on the poor. Of course, as pointed out by the Hon. Minister, it was in the period earlier to the one under review. Will the Government consider the possiblity of honouring such early chieftains who showed us the way how to revolt against the foreigners? I understand even the records in *Fort St. George* make mention of the revolt carried on by Jagaveera Pandya Kattabomman in those days. By way of honouring such a national leader who showed us the way in those days, will the Government, in their own humble way, consider the possibility of commemorating his memory by erecting a small memorial at the place where he was hanged?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, whether he was a national leader or not is not under dispute at all now. The question is whether a memorial should be erected at that place. My own view is this. More than a memorial, what we should do is, we should spread his history and his heroic deeds. It is more important than merely erecting a small, humble memorial at a far off place. I attach great importance to that than to merely erecting a small memorial.

*Grant of Travelling Allowance to Village Officers*

* 64 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have passed orders regarding the grant of travelling allowance to village officers as indicated in the Budget speech made on 17th December 1956 in the Assembly; and

(*b*) if so, whether a copy of the concerned Government Order will be placed on the table of the House?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) Yes, Sir. A copy of G.O.* Ms. No. 4732, Revenue, dated 31st December 1956 is placed on the table of the House.

*Service conditions of village officers*

* 65 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Cabinet Sub-Committee constituted by the Government to go into the conditions of village officers in this State has submitted its recommendations; and

(*b*) whether it will be placed on the table of the House?

---

* Printed as Appendix on page 516 infra.

[5th July 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government consider it not desirable to place copies of the report on the table of the House. A gist of the recommendations of the Cabinet Sub-committee will, however, be found incorporated in G.O. Ms. No. 4732, Revenue, dated 31st December 1956, copies of which have been placed on the table of the House in connection with Legislative Assembly Question No. 64.

MR. SPEAKER : Both Question Nos. 64 and 65 have been answered together. Hon. Members can put supplementaries on both of them.

SRI N. K. PALANISAMI : கன்னியாகுமாரி ஜில்லாவில் இருக்கக்கூடிய வில்லேஜ் ஆபீசர்களுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI. M. A. MANICKAVELU : அங்குள்ள விஷயங்கள் எல்லாம் வேறுமாதிரி. அவர்கள் இப்பொழுதுதான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். இதை எல்லாம் பரிசீலனை செய்து ஒரு ஒழுங்குக்கு கொண்டுவரப்படும்

SRI P. G. MANICKAM : கோயம்புத்தூர் ஜில்லா கிராம சிப்பந்திகள் சங்க ஆதரவின் கீழ் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கிராம சிப்பந்திகள் சர்க்கார் அலுவலாகச் சென்றால் அவர்களுக்கு பிரயாணப்படி கொடுக்க வேண்டுமென்றும், தலையாரிகளுக்கு உடுப்புகள் தரவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மந்திரி சபையின் உபகமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. சங்கப் பிரதிநிதிகளும் நேரில் மந்திரிகளைக் கண்டு விஷயத்தை தெரிவித்து இருக்கிறார்கள். இதுவிஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை எல்லாம் கவனித்துத்தான் இப்பொழுது ஆர்டர் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்தால் எந்தெந்த வகையிலே இந்த பிரயாணப்படி கொடுக்கப்படுகிறது என்பது தெரியவரும்.

SRI S. B. ADITYAN : அச்சடித்து வைத்திருக்கக்கூடிய பதிலில் " that a consolidated annual travelling allowance be given to all village officers "

என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலே வெட்டியான், தலையாரி முதலியவர்களுக்கு இந்த பிரயாணப்படிக் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வில்லேஜ் ஆபீஸர்களுக்கென்று ஒரு பிரயாணப்படி விதியிருக்கிறது. கூடுதல் விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAKAM : In order to vindicate their stand and in order to gain certain privileges from the Government of Madras, these village officers have struck work recently. Now that the Government have conceded their request, will the Government consider the possibility of waiving the disciplinary action which they have taken.

MR. SPEAKER : I would like the hon. Member to confine his supplementary to the subject of the main question.

SRI K. VINAYAKAM : Will the Government waive the disciplinary action that they have taken against some of these people?



5th July 1957]

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, is it in order for an hon. Member to put the question even after the Chair has refused its admission?

MR. SPEAKER : I had not given any ruling then. I wanted to be convinced whether the supplementary that hon. Member Sri Vinayakam was putting had any relation to the original question or not. I now rule that it has no relation to the original question.

SRI R. SRINIVASA IYER : அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த தாளில்,

" that the village headmen of estate villages taken over by the Government may be granted travelling allowance for each journey, including the journey for jamabandi on the basis of actual bus-fare . . ."

என்று இருக்கிறது. சில பேர்கள் 8, 10 மைல்கள் நடந்துவரவேண்டியிருக்கிறது. அப்படி நடந்துவருவதற்கு மைலுக்கு கால் அணா, அரை அணா கூடக் கொடுப்பதில்லை. சாப்பாடு சாப்பிட்டால் ஒரு ரூபாய் தினப்படியாய் கொடுக்கப்படுமென்று போட்டிருக்கிறது. ஆகவே, பஸ், ரயில்வே இல்லாத இடங்களுக்கு இப்படி நடந்து வருகிறவர்களுக்கு மைல் ஒன்றுக்கு இவ்வளவு என்று ஏதாவது கொடுக்க சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு முன்னே இதுமாதிரி பிரயாண சலுகை இல்லை. இந்த உத்தரவு போட்டு ஒரு வருஷம்கூட ஆகவில்லை. அதற்குள்ளே மேலும் மேலும் எப்படிப் போடுவது. சில தினங்களுக்கு முன்னால்தான் அவர்களுடைய சம்பள விகிதாசாரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் மேலும் மேலும் இன்னும் கொடுக்கவேண்டுமென்றால் அது யோசனை பண்ண வேண்டியதுதான்.

SRI N. K. PALANISAMI : இன்னும் இங்க், பேனா, காகிதம் இவைகளுக்காக ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா ? இதற்காக ஏதாவது அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER : How is it relevant to the original question. I rule it out of order.

SRI V. K. KOTHANDARAMAN : தங்களுடைய நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காகவேண்டி போராடிய காரணத்தைக் காட்டி பிடித்திருக்கக்கூடிய சம்பளத்தை திருப்பிக் கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

MR. SPEAKER : முதல் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை. மெம்பர்கள் தயவு செய்து முதல் கேள்விக்கு சம்பந்தமாய் உள்ள சப்ளிமெண்டரிக் கேள்விகளைத்தான் கேட்கவேண்டும். சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டு என்ன பிரயோஜனம்.

SRI A. GOVINDASAMY : அதிகாரிகள் கிராமங்களுக்கு வரும்போது சாப்பாடு வசதி, வண்டி வசதி செய்யவேண்டியது மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளை இவர்களின் கடமையாய் இருக்கிறது. அதற்கு ஏதாவது அலவன்ஸ் ஒதுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தமாதிரி சாப்பாடு வசதி செய்யவேண்டுமென்று நிர்பந்தமில்லை. மணியக்காரர் கிராமத்தில் பெரிய ஆளாக இருப்பதினால் சாப்பாடு போடுகிறார்கள்,

MR. SPEAKER: As the hon. Member who gave notice of the question, namely, Sri M. S. Selvarajan is not in his seat, the answer together with the question will be printed in the Official Proceedings.

*Lime-stones deposits in Pannamparai village, Tiruchendur taluk*

* 66 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Archæological Department has brought to the notice of the Government the existence in large scale of lime-stones which could be used for the production of cement in and around Pannamparai village in Tiruchendur taluk?

THE HON. SRI R. VENKATARAMAN: The area around Pannamparai village in Tiruchendur taluk, Tirunelveli district was surveyed by the Department of Geological Survey of India during the field season 1946–47 but no occurrence of lime-stone has been reported from that village.

MR. SPEAKER: Questions are over.

SRI S. M. ANNAMALAI: **On a point of order Sir,** ஜாதி பெயரைச் சொல்லாதிருக்கும்போது ஜாதி பதத்தைப் போட்டு சில பத்திரிகைகளில் பிரசுரித்திருப்பது இந்த சட்ட மன்றத்தின் உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பதாகாதா ?

MR. SPEAKER: அங்கத்தினர் அவர்கள் என்னிடம் அதைப்பற்றிச் சொன்னார்கள். பத்திரிகை ஆசிரியரிடம் பேசி வேண்டியது செய்கிறேன் என்று சொன்னேன். தெரியாமல் செய்திருந்தால் அது பாதிக்காது. எதற்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் எனது ரூமில் வந்து பேசுவது நல்லதென்று கருதுகிறேன்.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—STATEMENT OF A MEMBER *RE* ALLEGATIONS AGAINST GOVERNMENT ON ADMISSIONS TO PROFESSIONAL COLLEGES.

MR. SPEAKER: Every hon. Member has a right to speak in this House provided there is time and opportunity. Every Member has freedom of speech. He can talk what he wants in this House and the Chair is there to give him protection. The other day, hon. Member Sri T. S. Ramasamy Pillai made some statement to which exception was taken by the Hon. the Chief Minister. (Sri K. Vinayakam was seen speaking to another Member.) As I am giving a ruling on an important matter, will the hon. Member please allow the proceedings to go on. Exception was taken by the Chief Minister and the Hon. the Finance Minister to a statement made by Sri T. S. Ramasami Pillai. According to the rules of debate, Sri T. S. Ramaswami Pillai need not answer the points raised by the Hon. the Chief Minister and the Hon. the Minister for Finance. But if he does not, Hon. Ministers may not reply to the charges. I gave him that opinion and he stated that he would like to make a statement. Under the Rules of this House (Rule 80) every Member can make a personal explanation with regard to some statement he made earlier even though that is not before the House on that day





The hon. Member shall confine his statement to the point of explanation with regard to the particular matter. It should be short and there can be no debate on that matter afterwards. I shall now request Mr. Ramaswamy Pillai to make a personal explanation in as short a time as possible.

SRI T. S. RAMASWAMY PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய தினம் அதாவது பட்ஜெட் விவாதத்தை ஆரம்பித்து வைத்த அடுத்த நாள் எனது மதிப்பிற்குரிய நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் திரும்பவும் அந்த பிரச்சினையை எழுப்பினார்கள். நான் அன்று பேசியபோது . . .

MR. SPEAKER: The hon. Member is going beyond the point of explanation. Let him confine to the answer he wants to give. The hon. Member is trying to explain the circumstances which led him to make such a statement. That is not necessary.

SRI T. S. RAMASWAMY PILLAI: அன்று என்னுடைய பேச்சில் இங்குள்ள தொழிற் கல்லூரிகளில் மாணவர்களை சேர்ப்பதில் **loophole** இருக்கிறது, **foolproof** ஆக இருக்க வேண்டும் என்று சொன்னேன். தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைப்பதற்காக, சிபாரிசுகள் செய்வதற்காக ஒவ்வொரு தினமும் மாணவர்களும், அவர்களுடைய ஆட்களும், எம்.எல்.ஏ.க்களிடம் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். என்னை பொறுத்த வரையில் சட்டசபை நடவடிக்கைகளின்போது நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுப் பேசுவதில்லை, பேசக்கூடாது என்ற பழக்கத்தில் வந்திருக்கிறேன். அப்படி ஒரு தனிப்பட்ட நபரைக் குறிப்பிட்டுப் பேசி விவாதம் நடத்தினால் சபையினுடைய விவாதத்தின் தரம் "ஸ்டாண்டர்ட்" மிகவும் மோசமாகிவிடும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இருந்தபோதிலும்கூட, பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தில் இருக்கக்கூடிய மந்திரி அவர்கள் இந்த விபரங்களை குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அதன் பின்னாலும் நான் சொல்ல வேண்டாம் என்றுதான் நினைத்தேன். இருந்தாலும் பொது மக்களுடைய நன்மையை கருதி இதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். தலைவர் அவர்களும் சொல்லும்படி கட்டளையிட்டார்கள்.

MR. SPEAKER: நான் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. சொல்லாமலும் இருக்கலாம் என்றுதான் சொன்னேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI: மதிப்பிற்குரிய நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் இராமசாமி இந்த சபைக்குப் புதிது, அவர் நவம்பர் ஒன்றும் தேதிக்குப் பின்னால்தான் வந்திருக்கிறார்கள், அதற்கு முன்னுள்ள சங்கதி அவருக்கு ஒன்றும் தெரியாது என்றும் தொழிற் கல்லூரிகளுக்கு இந்த வருடமுள்ள 'ரிக்ரூட் மெண்ட்' முடிவாகவில்லை என்றும் சொன்னார்கள். நான் கூறுவது இதற்கு முன்னாலும்கூட தொழிற் கல்லூரிகளில் நடந்த ரிக்ரூட்மெண்டுகளில் சென்னை ராஜதானியிலுள்ள கல்லூரிகளில், என்னை பொறுத்தவரை எங்கள் தொகுதியிலிருந்து பலருக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். நான்காம் தரத்திலுள்ள மாணவர்கள், இரண்டு தடவை, மூன்று தடவை தோற்று பின்னால் தேறின மாணவர்கள் எத்தனையோ பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியை பொறுத்த அளவில், ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு இரண்டு வாக்குறுதிகள் தரவேண்டும், ஒன்று அந்த மாணவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்கூடாது. இன்னொன்று கடந்த வருடத்தில் யார் யாரெல்லாம் மனு செய்திருந்தார்கள், அப்படி மனு செய்திருந்தவர்களில் இடம்

[Sri T. S. Ramaswamy Pillai] [5th July 1957

கிடைத்த மாணவர்களுடையவும் கிடைக்காத மாணவர்களுடையவும் மார்க்குகளை எல்லாம் இந்த சபையில் முன்னல் (டேபிளில்) வைக்க முடியுமா என்று கேட்கிறேன். சென்ற ஆண்டிலும் அதற்கு முன்னலும் 4-வது **rank**-லுள்ள மாணவர்கள் இங்குள்ள கல்லூரிகளில். . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : I want to know whether it happened in any Government college?

SRI T. S. RAMASWAMY PILLAI : I was referring to professional colleges generally irrespective of the fact whether they are Government Colleges or private colleges.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member need not make any distinction between Government colleges and private colleges. I wish to know whether the instances referred to by the hon. Member happened in both Government and private colleges or only in private colleges?

SRI T. S. RAMASWAMY PILLAI : நான் குறிப்பிடுகிற தொழிற் கல்லூரிகளில் அரசாங்கத்தின்கீழ் உள்ளவைகளும் உண்டு, தனிப்பட்ட கல்லூரிகளும் உண்டு. . . .

MR. SPEAKER : In order to avoid such frequent disturbances, I should like the hon. Member to finish his statement. If it affects Government Colleges, the Hon. Minister may reply to the points; otherwise he may not make any answer.

SRI T. S. RAMASWAMY PILLAI : நான் எனது நண்பர் சுப்பிரமணியம் அவர்களுக்கு சொல்லுகிறேன். . . .

MR. SPEAKER : Will the hon. Member please address the Chair? Otherwise I will have to stop the discussion? The hon. Member will please ignore the disturbances and address the Chair and finish his reply.

SRI T. S RAMASWAMY PILLAI : ஸார், கவர்ன்மெண்ட் கல்லூரியிலும் ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது; இதில் ஆர்டர் இருந்தது என்ருல் சரி, இல்லையென்ருல் இல்லை. உதாரணமாக காரைக்குடி இன்ஜினியரிங் கல்லூரியில். . . .

MR. SPEAKER : The hon. Member is trying to make a second speech. That is not allowed.

SRI T. T. DANIEL : On a point of order, Sir. May I know whether this Assembly has got jurisdiction to go into the selections made by non-Governmental professional colleges in our State?

MR. SPEAKER : Mr. Ramaswamy Pillai made a general allegation about admissions to the professional colleges in the State and he did not make a distinction between Government and non-Government colleges. I wish to know, in what way, does hon. Member Mr. Daniel think that it is objectionable, because private Colleges also receive grants from Government. I think it is in order but nobody can take action as a result of such disclosures.



5th July 1957]

SRI A. CHIDAMBARANATHA NADAR : Sir, I rise on a point of information . . .

MR. SPEAKER : If it is a point of information, the hon. Member must wait. But if he wants to raise a point of order, he can do so.

SRI K. VINAYAKAM : On a point of order, Sir. Did the Chair allow the hon. Member to make a personal explanation or a statement? A statement is absolutely different from personal explanation. There can be no debate over personal explanation—not even a passing remark by Hon. Members of the Cabinet. So, the hon. Members can make a personal explanation and be done with. There can be no discussion or expatiation over these matters.

MR. SPEAKER : I am permitting him to make a personal explanation.

SRI T. S. RAMASWAMY PILLAI : நம்முடைய பட்ஜெட்டில்கூட தனியார் தொழில் கல்லூரிகளுக்கு சுமார் 12 லட்ச ரூபாய் கொடுக்கிறோம். அந்தக் கல்லூரிகளுக்கு 'அட்மிஷன்' பொறுத்தவரை சரியான விதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் கல்லூரிகளைப்பற்றி பொதுவாக குறிப்பிடுவதற்குக் காரணம் கன்னியாகுமாரி ஜில்லாவிலுள்ள காங்கிரஸ் அட்ஹாக் கமிட்டியின் கன்வீனரின் மகன், மருமகன், மைத்துனன் இவர்கள் எல்லோருக்கும் இடம் கிடைத்திருக்கிறது. போன வருஷம், அதற்கு முந்திய வருஷம் அவருடைய தூர பந்துக்களுக்கும் இடம் கிடைத்திருக்கிறது.

MR. SPEAKER : How is the Government responsible for this action?

SRI T. S. RAMASWAMY PILLAI : They give grants and have allotted Rs. 12 lakhs. We must see that admission is done on principles only.

MR. SPEAKER : I am afraid that the personal explanation is again descending to the level of charges and counter-charges. I am afraid I cannot allow any discussion on that point. I rule that further discussion on these things cannot take place, if it is going to be allegations against individuals or against groups of individuals. So, if Mr. Ramaswamy Pillai is prepared to confine himself to a personal explanation . . .

SRI T. S. RAMASWAMY PILLAI : I have finished.

MR. SPEAKER : So, the hon. Member has finished. We shall now proceed to the next item.

SRI K. K. MUTHIAH : On a point of order, Sir, காங்கிரஸ் ஆட்களுடைய பிள்ளைகளெல்லாம் முட்டாள்களாக இருக்கவேண்டும் என்று அங்கத்தினர் கருதுகிருர்களா?

MR. SPEAKER : It is not an allegation. He stated certain facts. You can make a statement when you get a chance.

[5th July 1957

### III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957-58—*cont.*

MR. SPEAKER: The hon. the Leader of the Opposition is going to make his speech to-day. The practice is for, the Hon. the Finance Minister only to reply. But I have received notice that two Ministers want to make a statement, besides the Finance Minister and they are entitled to do it. After the hon. Leader of the Opposition makes his speech, I shall call upon the two Ministers concerned to make their statements. Then, I shall call upon the Hon. Finance Minister to make his speech.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்
-35 m. களே, நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் இந்த ஆண்டில் ஒரு பற்றுக்குறை பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அநேகமாக ஒவ்வொரு வருஷத்திலும் நமக்கு பற்றுக்குறை பட்ஜெட்டே வந்துகொண்டிருக்கிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்கது. வரவுக்கு மேல் செலவு ஒவ்வொரு வருஷமும் அதிகரித்துக்கொண்டே போகிறது. வரவையும் செலவையும் சரிக்கட்டி புது வரிகள் இல்லாமல் இருப்பதற்கு ஒரு மார்க்கத்தையும் காணோம். சமீப காலத்திலே மத்திய சர்க்கார் அநேக புதிய வரிகளை போட்டிருக்கிறார்கள். முக்கியமாக செலவின் மீது வரி, வருமான வரி இவைகளெல்லாம் போடப்பட்டிருக்கிறது. ஜனங்களை இது எவ்வளவு தூரம் பாதிக்கும், ஜனங்கள் எவ்வளவு தூரம் உத்தியோகஸ்தர்களால் துன்பப் படுத்தப்படுவார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. எங்கு பார்த்தாலும் வரி, மத்திய சர்க்காரிலும் வரி, ராஜ்ய சர்க்காரிலும் வரி. இம்மாதிரியான நிலையில்தான் நாம் இருந்து கொண்டு வருகிறோம். முக்கியமாக துண்டு விழுகின்ற இந்த நமது ராஜ்ய பட்ஜெட்டுக்கு புது வரி மாறுதல்கள் அவசியமா என்பதுதான் பெரிய பிரச்னை. ஆந்திரா, மைசூர் போன்ற பக்கத்து ராஜ்யங்களை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால் இம்மாதிரி துண்டுவிழும் பட்ஜெட்டைத் தான் ஒரு வித வரியையும் புதிதாகப் போடாமல் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அது ரொம்பவும் பாராட்டத்தக்கது. அப்படியில்லாமல் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் புது வரி போடவில்லை என்றும், ஆனால் இருக்கும் சில வரிகளில் மாற்றம் ஏற்படுத்தி சமாளிக்க வேண்டியிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். மைசூரில் இப்பொழுது இருக்கின்ற வரி இனங்களை உயர்த்தி 3 கோடி ரூபாய் இந்த வருஷமே வசூலிக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். அதற்கான மசோதாக்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பேப்பரிலும் பார்த்திருக்கலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இருந்தபோதிலும், மற்ற ராஜ்யங்களில் துண்டு விழுந்தபோதிலும் அவர்கள் புது வரி போடவில்லை என்பதைப்பற்றியே அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பார்க்கப்போனால் உலகத்திலேயே இந்தியாவில்தான் வரி அதிகமாக இருக்கிறது. பெரிய பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்துப் பார்த்ததில் மற்ற தேசங்களைவிட இந்தியாவில்தான் வரி அதிகம் என்று சொல்லியிருக்கிறார்கள். வரி போடும் விஷயத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களெல்லாம் இந்தியாவுக்குப் பிறகுதான் வருகின்றன. முன்னதாகவே இந்தியாவில் அதிக வரி போடப்பட்டிருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள். முக்கியமாக இந்த வரவு செலவு திட்டத்தில் சுமார் ரூ. 4,83,00,000 தான் துண்டு விழுகிறது. இந்த வரி மாற்றம் அவ்வளவு அவசியமா என்பதை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. இந்த பட்ஜெட்டை சரிக்கட்டுவதென்றால் ஒருவிதமாக சரிக்கட்டியிருக்கலாம்.



5th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அரசாங்கத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு பெரிய உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். அந்த உத்தியோகஸ்தர் சில காலம் லீவில் இருந்ததால் இன்னும் தீவிரமாக வேலையை ஆரம்பிக்கவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டால், ஒரு உத்தியோகஸ்தர் மட்டும் இந்த விஷயத்தை விரைவாக பரிசீலனை செய்ய முடியாது. அதற்குப் பதிலாக அவரையும் வைத்துக்கொண்டு வேறு சில முக்கியமான " செக்ரடேரியட் " உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகப் பற்று அற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு கமிட்டியை . அமைக்க வேண்டும். நான் இதற்கு முன்பே சட்டசபையில் பேசும்போது இம்மாதிரி ஒரு பொறுப்புள்ள கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேன். வரவு செலவு திட்டங்களை சரியாக பரிசீலனை செய்து செலவு இனங்களை எவ்வளவு தூரம் குறைக்கமுடியுமோ அவ்வளவு தூரம் குறைக்கவேண்டும் என்று அநேக தடவை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இம்மாதிரியான சில அங்கத்தினர்களும் சேர்ந்த ஒரு பொறுப்புள்ள கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆந்திரா, தென்கன்னடம், மலபார் முதலிய பகுதிகள் நம் ராஜ்ஜியத்திலிருந்து பிரிந்து போன பிறகும் அதிகமான ஆபீஸர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வளவு ஆபீஸர்களும் தேவையா என்பதைப்பற்றி சிந்தித்துப்பார்க்கவேண்டும். உதாரணமாக நம் ராஜ்யத்திற்கு அவ்வளவு போர்டு மெம்பர்கள் அவசியமா ? அம்மாதிரி அவ்வளவு செக்ரடரிகளும் இலாகாக்களும் அவசியமா? நம் ராஜ்ஜியத்திலிருந்து கணிசமான பகுதிகள் பிரிந்துபோன பிறகும் இலாகாக்கள் பெருகிக்கொண்டே இருக்கிறதே தவிர குறையவில்லை. அது ரொம்பவும் வருந்தத்தக்கது. உதாரணமாக, பொது மராமத்து இலாகாவை எடுத்துக்கொண்டால் மூன்று பிரதம என்ஜினியர்கள் இருக்கிறார்கள். நமது அணைக்கட்டுத் திட்டங்களெல்லாம் கூடிய சீக்கிரம் பூர்த்தியாகும் தருணத்தில் இருக்கின்றன. மூன்று, நான்கு பிரதம என்ஜினியர்கள் ஒரு இலாகாவுக்கு தேவையா என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். நீர்ப்பாசன வசதி, ரோடு, கட்டிடம் முதலிய இலாக்காக்களுக்கு சேர்த்து ஒன்று, இரண்டு பிரதம என்ஜினியர்களை போட்டால் போதாதா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். சிக்கனக் கமிட்டி எல்லா முக்கியமான இலாகாக்களிலும் இது போன்று பரிசீலனை நடத்தி, முன்பு சமர்ப்பித்த விஷயங்களையெல்லாம் நன்றாக யோசனை செய்யவேண்டும். சில காலத்திற்கு முன்பு அதாவது இருபது வருஷத்திற்கு முன்பு இருக்குமென்று நினைக்கிறேன். ராஜ்யப் பிரிவினைகளுக்கு முன்பு 17 கோடி ரூபாய்தான் வருமானம் வந்து கொண்டிருந்தது என்று ஞாபகம். இப்போது சுமார் 60 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. நிறைய வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் பற்றுக்குறை இருப்பதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதாய் இருக்கிறது. எவ்வாறு செலவினங்களைக் குறைக்கலாம் என்பதைப்பற்றி ஒவ்வொரு இலாகாவிலும் பரிசீலனை செய்யவேண்டியதாய் இருக்கிறது. ஜீப்புகளைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. ஜீப்புகள் ஒவ்வொரு இலாகாவிலும் கையாளப்படவில்லை. சில இலாகாக்களில்தான் இருக்கின்றன. என்றாலும் அவைகள் எல்லாம் துர்விநியோகம் செய்யப்பட்டு அதனால் எவ்வளவு செலவாகிறது என்பதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டியது இல்லை. அதைப்பற்றியும் உயர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவரைப் போட்டு சர்க்கார் விசாரணை நடத்தியதாக நான் கேள்விப்பட்டேன். அவருடைய ரிப்போர்ட்டையும் சட்டசபை முன்பாக வைக்கும்படியாக நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேமாதிரியாக ஒவ்வொரு இலாகாவிலும், முக்கியமாக அமைச்சர் முதலியவர்களுக்காக என்று உயர்ந்த ரகக் கார்கள் எல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன. இரண்டு, மூன்று, நான்கு வருஷங்களுக்குள்ளாக அதிக விலையுள்ள கார்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை சரியாக உபயோகிக்கப்படவில்லை. இவ்வினத்தில் ஏராளமான ரூபாய்கள் விரயம் ஆகியிருக்கின்றன. முக்கியமாக அமைச்சர்கள் எல்லோருக்கும்

[Sri V. K. Ramaswamy Mudaliyar,] [5th July 1957

நான் சொல்வது என்னவென்றால் செலவினங்களைக் குறைக்கவேண்டும். செலவினங்களைக் குறைக்கவேண்டுமென்று அவர்களே சொல்லுகிறார்கள். 'அவர்களுடைய சம்பளத்திலும் வெட்டு செய்ய வேண்டும். அதாவது பத்து சத விகித சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும்' என்று வெளியில் பலர் சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டாம். இன்னும் கொஞ்சம் அதிக ஊதியம் வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்ளட்டும். ஆனால், கார்கள் வாங்குவது, டூர்கள் போவது முதலியவற்றால் ஆகும் வீணை பண செலவைக் குறைக்க முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் ஒருவர் ஒரு இடத்திற்கு போகிறார் என்றால் அங்கே பல ஆபீசர்கள் போக வேண்டியதாக இருக்கிறது. மற்ற வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு இந்த உத்தியோகஸ்தர்கள் அங்கே போய்விடுகிறார்கள். அதனால் வேலை தாமதப் படுகிறது. பணமும் விரயமாகிறது. அமைச்சர் அவர்கள் இவ்விஷயங்களில் எல்லாம் கவனம் செலுத்தி வீணாகப் பணம் விரயமாவதைத் தடுத்து சிக்கனம் செய்தாலே போதும்.

அதேமாதிரியாக தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம் முதலிய பிராந்தியங்களில் செய்கின்ற செலவுக்கேற்றபடி அங்குள்ள மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை என்பது என்னுடைய குறை. இவற்றினாலும் பணம் விரயம்தான் ஆகிறது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஒவ்வொரு இலாகாவுக்குமிடையே "கோஆர்டினேஷன்" இல்லை, என்று சொல்வது உண்டு. இவை எல்லாம் ஒரு ஜில்லா அதிகாரியின் கீழ் வேலை செய்யும்படியாகச் செய்யவேண்டும். அதில் குற்றங்குறைகள் இருந்தால் அந்த ஜில்லா அதிகாரி அதைப் பார்த்து தக்கபடி சீர்திருத்த வேண்டும். இவற்றில் உண்டாகின்ற வீணை பணவிரயத்தையும் கட்டுப்படுத்திச் சிக்கனம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது கிராம சேவக் என்று சில அதிகாரிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வேலை என்ன என்பதை அங்கத்தினர்களுக்கு அமைச்சர்கள் சொல்லவேண்டும். இம்மாதிரியாக இவர்கள் இருப்பது அவசியமா? அவர்கள் இருப்பதனால் எந்த விஷயத்தில் நன்மை ஏற்படுகின்றது என்பதை அமைச்சர்கள் சொல்லவேண்டும்.

அதுமாதிரி சட்டசபைகளைப்பற்றி ஒரு வார்த்தை. சட்டமன்றக் காரியாலயம் மவுண்டுரோடில் இருந்து இங்கே வந்ததனால் அதிகமான செலவு ஏற்பட்டு இருக்கின்றன. அங்கத்தினர்களுக்கும் கஷ்டம். அவ்விடத்திலேயே சட்டமன்றம் இருந்திருக்கலாம். இதைப்பற்றி பின்னிட்டு வெட்டுப் பிரேரணை வரும்போது விஸ்தாரமாகப் பேச விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் நமக்கு சரிவர உதவி கொடுப்பதில்லை. அதனால் அநேக இடங்களில் முக்கியமாக தமிழ்நாட்டில் பலருக்கு வருத்தம் உண்டாகியிருக்கிறது. மற்ற மாகாணங்களோடு நம் ராஜ்யத்திற்கு மத்திய சர்க்கார் செய்து வருகின்ற உதவியை ஒப்பிட்டுப் பார்த்தால் நம் ராஜ்யத்திற்குக் கொடுக்கப்படும் சலுகை ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். கைத்தொழில்கள் எல்லாம் நம் ராஜ்யத்தில் அதிகம் நிருவப்படவில்லை. அமைச்சர்கள் நம் ராஜ்யத்தில் அதிகம் ஏற்படுத்த வேண்டுமென்று சண்டை போட்டுக்கொண்டு வருகிறோம் என்று சொன்ன போதிலும் நமக்கு மத்திய சர்க்கார் நம்முடைய வேண்டுகோளைக் கவனித்தே சலுகை அளிக்கவில்லை. முக்கியமாக மின்சார இலாகாவை எடுத்துக் கொண்டால் இறக்குமதி லைசென்ஸ் கொடுப்பதில்லை. பம்பு செட்டுகள் மோட்டார் முதலியவைகளை இறக்குமதி செய்ய அனுமதிக்கவில்லை. அநேகம் பேர் கருப்பு மார்க்கெட்டில் புதுச்சேரி முதலிய இடங்களுக்குப் போய் அங்கே வாங்கிக் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்கிறார்கள். சிறு கைத்தொழில்களுக்கு வேண்டிய கருவி கரணங்களை மத்திய சர்க்கார் கொடுப்பது இல்லை. அதன் காரணமாக ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள் ஜனங்கள்.



5th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar] 1479

இப்பொழுது நம்முடைய பட்ஜெட்டிலே, நல்ல விதைகளைத் தயார் செய்வதற்காக விதைப் பண்ணைகள் (**Seed Farms**) வைப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அது ரொம்பவும் வரவேற்க வேண்டிய விஷயம். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றி அவர்கள் பார்க்க வேண்டும். பெரிய பண்ணை வைத்திருப்பவர்களைக் கொண்டே இம்மாதிரி விதைகளை உற்பத்தி செய்வதற்கு வழி செய்யலாம். விதைப் பண்ணைகளுக்காக என்று பெரிய ஆபீசர்களைக் காயமாக வைக்காமல், அவ்வப்போது வந்து பெரிய பண்ணை வைத்திருப்பவர்கள் தயாரிக்கக் கூடிய விதைகளை மேற்பார்வை செய்தால் நலமாக இருக்கும். பெரிய பண்ணை வைத்திருப்பவர்களையே விதைப் பண்ணைகள் வைக்கும்படி செய்து, சர்க்கார் சொல்கிறபடி யார் யாருக்கு எந்த விலையில் அவ்விதைகளை விநியோகிக்க வேண்டுமோ, அம்மாதிரி விற்கக் கூடிய முறையில், பெரிய பண்ணைகள் வைத்திருப்பவர்கள் மூலமாகச் செய்தால், நம்முடைய சர்க்காருக்கு செலவு குறையும். ஆனால் இம்மாதிரி பெரிய பண்ணை வைத்திருப்பவர்கள் இல்லாத இடங்களில் சர்க்காருடைய நேரடிப் பார்வையில் விதைப் பண்ணைகளை வைக்கலாம் என்பதும் என்னுடைய அபிப்பிராயம்.

பஞ்சாப் மாகாணத்தையும் நம்முடைய மாகாணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. அங்கே அவர்கள் நம்மை விட நாலரை மடங்கு அதிகமாக உணவு உற்பத்தி செய்கின்றார்கள். நம்முடைய மாகாணத்தில் முக்கியமாக வருஷத்தில் மூன்று லட்சம் டன் தானிய உற்பத்தியில் குறைவாக இருக்கிறது. ஆனால், தானிய உற்பத்தி முன்னைவிட அதிகமாக இருந்தாலும் விலைவாசி குறையவில்லை. தானிய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக, நம் ராஜ்யத்தில், பருவ மழை சரியாக இல்லாதது ஒரு பக்கம். சர்க்காருடைய விவசாய டிபார்ட்மெண்டார் அமோனியம் சல்பேட் முதலிய உரங்களை நல்ல முறையில் விவசாயிகளுக்கு விநியோகிக்காதது இன்னொரு காரணம். தவிர, பூச்சியினால் எங்கு பார்த்தாலும் நஷ்டம். பூச்சித் தொல்லையைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் கொஞ்சம் உதவி செய்திருந்தபோதிலும், பூச்சித் தொல்லை ஏற்படும் பிராந்தியங்களில் வருஷம் பூராவும் தாராளமாக மருந்துகள் விநியோகிக்கப்பட்டு, தடுப்பு முறைகளைத் தீவிரமாகக் கையாளவேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒவ்வொரு பிராந்தியத்திலும் எந்த முறையில் செய்யலாம் என்பதற்காக அந்தந்த பிராந்தியத்தில் கமிட்டிகளைப் போட்டு, அங்கே ஆபீசர்களைப்போட்டு காரியங்களைச் செய்யலாம். எப்படிப் பற்றாக்குறையைப் போக்கலாம் என்பதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலனை செய்து நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீர்ப்பாசன வசதி சம்பந்தமாகப் பேசும்போது, நம்முடைய பிராந்தியத்தில், அதாவது தமிழ் நாட்டில் இருக்கும் திட்டங்களெல்லாம் அநேகமாகப் பூர்த்தியாகிவருகின்றன. நேற்று நமது திருவாளர் அண்ணாத்துரை அவர்கள் பாலாற்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது விஷயத்தைச் சர்க்கார் மறுபடியும் பரிசீலனை செய்யவேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிறு நீர்ப்பாசன விஷயமாக (**Minor Irrigation Works**) அநேக ஏரிகள் பழுது பார்க்கப்படாமலிருக்கின்றன. பழுது பார்க்கப்பட்டபோதிலும் அவைகளுடைய **Full Tank Level (F.T.L.)** வரையில் கரைகள் நன்றாகப் பழுது பார்க்கப்படவில்லை. பழைய நாள் திட்டப்படி ஒரு ஏரியானது மராமத்து செய்யப்பட்டு, ஐந்து வருஷம் ஆவதற்குள் மறுபடியும் மராமத்துக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது. அந்த முறையில் கலெக்டர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த மனப்பான்மை மாற வேண்டும். மராமத்து செய்யப்பட்டு, இரண்டு மூன்று வருஷங்கள் ஆன

வுடனே அநேக ஏரிகள் மறுபடியும் கேவலமான ஸ்திதியில் இருக்கின்றன. மண் கறை ஆனபடியால், தண்ணீர் சரியாக தேக்கப்படவில்லை. **Full Tank Level**-ஐத் தூக்கி, கறையைப் பழுது பார்த்து, வரவு கால்களையும் நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஏரியிலும் குறைந்தது ஒரு போகம் சாகுபடிக்காவது தண்ணீர் கிடைக்கும்படியான ஏற்பாட்டை சர்க்கார் கவனிக்க வேண்டும். அதற்காக ஸ்பெஷல் டிபார்ட்மெண்ட் ஒன்றை ஏற்படுத்தி, ஒவ்வொரு ஏரியினுடைய வரவு காலையும் பழுது பார்க்க என்ன செய்யவேண்டுமென்பதில் அவர்கள் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இம்மாதிரி அநேக "மைனர் இரிகேஷன்" ஏரிகள் பழுது பார்க்கப்படுவதன் மூலமாக விவசாயம் நல்ல முறையில் பெருகும். பெரிய பிராஜெக்டுகளின் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறதோ, அதற்குச் சமமாக இவை மூலம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. இதைச் சர்க்கார் சற்று சீக்கிரமாக கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவிர, அநேக இடங்களில் மனுக்கள் போட்டும் சில ஏரிகள் சரிவர பரிசீலனை செய்யப்படாமல் இருக்கின்றன. ஒரு சில கிராமத்தில் இருக்கும் கட்சிகளுடைய கொள்கையினாலும், மற்ற விதக் கொள்கையினாலும் தாமதம் ஏற்படுவதை சர்க்கார் எப்படியாவது தீர்த்து, எந்தக் கட்சி எப்படி இருந்தபோதிலும், நீர்ப்பாசன வசதிக்காக சர்க்கார் ஒரு தனி சட்டமாவது ஏற்படுத்தி, இதைக் கையில் எடுத்துக்கொண்டு, சிறு நீர்ப்பாசன வசதிகளுக்கான ஏரி முதலியவைகளைக் கூடிய சீக்கிரம் மராமத்து செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காட்டு இலாக்காவைப் பற்றி இரண்டொரு வார்த்தை. முக்கியமாக, நமக்கு இருந்த பெரிய காடுகள் மலபார் ஜில்லாவிற்கும், மற்ற பிராந்தியத்திற்கும் போய்விட்டன. அதாவது மைசூருக்கும் மலபாருக்கும் போய்விட்டன. நமக்கு எஞ்சியிருக்கும் காடுகள் மிகக் குறைவு. அவைகளை நல்ல முறையில் விருத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்குச் சில இடங்களில் சவுக்கு பயிரிடுகிறார்கள். அப்படிச் சவுக்கு வைப்பதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது, வரவுக்கும் செலவுக்கும் எவ்வளவு இருக்கின்றது என்பதைப் பற்றி விளக்கும் ஒரு "ஸ்டேட்மெண்ட்" தயார் செய்து ஜில்லாவாரியாக புள்ளி விவரங்களைக் கொடுத்து, நம்முடைய சட்டசபை முன்பு அமைச்சரவர்கள் சமர்ப்பித்தால் நன்றாக இருக்குமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது முந்திரி சாகுபடி செய்துவருகின்றார்கள். இதனால் நமக்கு அன்னியச் செலவாணி கிடைக்கும். இருந்தபோதிலும் இது எவ்வளவு லாபகரமாக இருக்கிறது என்பதைப் பற்றி நன்றாக யோசித்துச் செய்ய வேண்டும். அதிலும் முக்கியமாக, நம்முடைய பிராந்தியங்களிலிருந்த பழப் பண்ணைகள் எல்லாம் ஆந்திர தேசத்திற்குப் போய்விட்டன. சேலத்தில் சில இடங்களில் ஏற்பாடு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் இரண்டொரு ஜில்லாக்களில் பழப் பண்ணை வைப்பதைப் பற்றி பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவிர காட்டு இலாகா சில மரங்களை அவ்வப்போது ஏலத்திற்கு விடுகிறது. ஆயிரக்கணக்கான ஏக்கரிலுள்ளவைகளை சர்க்கார் ஏலத்திற்கு விடுகிறார்கள். அப்படி விடுவதினால் (**middle class**) எளியவர்கள் ஏலம் கேட்க முடியாமல் சர்க்காருக்குக் கிடைக்கக் கூடிய வருமானங்கள் எல்லாம் குறைந்து விடுகின்றன். பெரிய ஆசாமிகளெல்லாம் மொத்தமாகப் போட்டு எடுத்துக்கொள்வதினால் சர்க்காருக்கு நஷ்டம். சிறு சிறு ஆசாமிகள் போய்க் கேட்க சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, சிறு சிறு துண்டாகப் பிரித்து ஏலம் போட்டால் அதிலிருந்து நல்ல வருமானம் சர்க்காருக்குக் கிடைக்கும். இதை சர்க்கார் யோசனை செய்து இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





சுகாதார இலாகாவைப் பற்றிச் சில வார்த்தை. இப்பொழுது நம் ராஜ்யத்தில் இன்புளுயன்ஸா ஜுரம் வந்திருக்கிறது. நிறையப் பரவியிருக்கிறது. கிராமங்களில் பரவியிருப்பதைத் தடுக்க சர்க்கார் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். **Mobile van**-ஐ அனுப்பி நிறைய டாக்டர்களை அனுப்ப வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்பு சில கிராமங்களுக்குப் போயிருந்தேன். சில ஜில்லாக்களில் இன்னும் அநேக ஊர்களில் மக்கள் இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். சரியான டாக்டர்கள் அவ்விதம் இல்லாத காரணத்தால், அவர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டு வருகிறார்கள். அதற்காக சர்க்கார் **Mobile van** ஏற்படுத்தி, டாக்டர்களையும், நர்சுகளையும், தேவையான மருந்துகளையும் வைத்து, கிராமங்களுக்கும், சேரிகளுக்கும் முக்கியமாக போக்கு வரத்து சாதனங்கள் குறைவாக இருக்கும் கிராமங்களுக்கும் அனுப்பி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர, இந்த டிபார்ட்மெண்ட்களில் **Post graduate study**, அதாவது **Special Department**-ல் அளிக்கப்படும் பயிற்சி, பெருக்கினால் நல்லது. பிரசவ ஆஸ்பத்திரி, ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குத் தகுந்த டாக்டர்களைப் போடவேண்டும். **M.D.** அல்லது **M.S.**, போன்று பாஸ் செய்தவர்களையெல்லாம் அந்த ஆஸ்பத்திரிக்குப் போடவேண்டும். இவர்களை மேல்நாட்டுக்கு அனுப்பி ஒவ்வொரு ஜில்லாக்களிலும் பெரிய, படித்த டாக்டர்களைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக காலேஜ் அட்மிஷன். இப்போது சென்னையில் நடந்து வரும் மெடிகல் காலேஜ், என்ஜினீரிங் காலேஜ் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் மாகாணப் பிரிவினைக்கு முன்பு திருவிதாங்கூர் ஸ்டேட்டில் ஒரே ஒரு மெடிகல் காலேஜ் இருந்தது. அப்போது அந்த டயத்தில் மதராஸ் ஸ்டேட்டிலிருந்து மலபாருக்கு 32 ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டு வந்தது. மாகாணம் பிரிந்த பிறகு, திருவிதாங்கூர் மெடிகல் காலேஜ் அப்படியே இருக்கிறது. மலபாரில் கோழிக்கோடில், இப்போது கோழிக்கோடு ஜில்லா என்று நினைக்கிறேன், ஒரு மெடிகல் காலேஜ் ஆரம்பித்திருக்கிறார்கள். (**THE HON. SRI C. SUBRAMANIAM**: ஆரம்பிக்க வில்லை) யாரோ ஆரம்பித்ததாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது, 27 ஸ்தானங்கள் நம்முடைய மெடிகல் காலேஜிலிருந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று ஒரு கட்டளை பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. அதே மாதிரி மைசூர் பிராந்தியத்தில் 3 மெடிகல் காலேஜுகள் இருக்கின்றன. அதாவது பங்களூர், மைசூர், மணிபால்; சுமாராக 200 ஸீட்டுகள் இருக்கின்றன. நம் மாகாணத்திலிருந்து 11 ஸீட்டுகள் கொடுக்க வேண்டுமென்று உத்திரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆந்திராவிற்கு ஒரு ஸீட்டும் இல்லை. வேண்டாம் என்று சொன்னார்களோ, நாம் கொடுக்கவில்லையோ தெரியாது. அது அவசியமில்லை. அது தவிர, மலையாளிகளும், தென் கன்னடத்தவரும் நம் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் நம் தமிழ் நாட்டிலே சேர்ந்தவர்கள். அவர்களும் இடத்துக்குப் போட்டி போடுகிறார்கள். இம்மாதிரி இருக்கும்போது கேரள ராஜ்யத்திற்கும் மைசூர் ராஜ்யத்திற்கும், ஏன், நாம் ஸீட் கொடுக்க வேண்டுமென்று தெரியவில்லை. கொடுக்கவேண்டுமென்றாலும் **Population basis**-ல் தான் கொடுக்க வேண்டுமேயொழிய அப்படிக் கொடுக்கக் கூடாது. மத்திய சர்க்காருக்கு நாம் சரியான ஆட்சேபணைகள் செய்து எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யவேண்டும். தமிழ்நாட்டினருக்கு போதுமான ஸீட் இல்லாமல் நாம் கஷ்டப்படும்போது மற்றவர்களுக்குக் கொடுப்பது வருந்தத்தக்கது. நம் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்து மற்ற மாகாணத்தாருக்கு ஒருவிதமான ஸீட்டும் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். மத்திய சர்க்கார் **direction** கொடுக்க நியாயம் கிடையாது. **Home Minister** சென்னைக்கு வருவதாகத் தெரிகிறது. நம் அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரோடு சண்டைபோட்டு அதோடு ஒருவிதமான ஸீட்டுகளும் மற்ற மாகாணத்தாருக்குக் கொடுக்காத ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது நடப்பது ரொம்ப வருந்தத்தக்க விஷயம்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [5th July 1957

கைத்தறி நெசவாளர் பிரச்னை இப்போது ஒருவாராகத் தீர்க்கப்பட்டு வந்த போதிலும் குறைகள் நிறைய இருக்கின்றன. அது, கூட்டுறவு சங்கத்தில் இருப்பவர்களுக்கு சலுகை காட்டப்படுகிறது. தனியாக இருப்பவர்களுக்கு ஒருவித சலுகையும் காட்டப்படவில்லை. இதை சர்க்கார் தீவிரமாக யோசிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடை இலாகா. இப்போது நம்முடைய சென்னைக்கு அருகே இந்தக் கால்நடைப் பண்ணை வைத்து, இவ்விடத்தில் இருக்கும் பசுக்களை கொண்டு வைத்து பால் உற்பத்தி செய்வது ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் சொல்லுகிறார். ரொம்ப சந்தோஷப்படவேண்டிய விஷயம். ஆனால், கால்நடை ரகத்தை விருத்தி செய்வது பற்றி அவர்கள் கவனிக்க வேண்டும். கால்நடைகள் க்ஷீணதசையில் இருக்கிறது. **Milk problem**, ஒரு பக்கம் இருக்க, உயர்ந்த ரகக் கால்நடைகளை விருத்தி செய்வதைப் பற்றியும் தீர்க்க யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை முக்கியமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பண்ணை வீதம் வைக்க வேண்டும். முக்கியமாகச் சென்னையைச் சுற்றிலும், செங்கல்பட்டுக்கு அருகாமையிலே ஒரு பண்ணையை நிறுவவேண்டும். அதற்குக் காட்டிலாகாவிலிருந்து நிலத்தை ஒதுக்கச் செய்து ஒரு பால் பண்ணையை வைக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பால் ரொம்ப முக்கியம்.

இப்போது மின்சார வசதி. அதில் தீவிரமாக வேலைகள் நடந்து வருகிறது. ஒன்றும் சொல்வதற்கில்லை. இப்போது மின்சார போர்ட் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் பெரிய உத்தியோகஸ்தர்களையே போட்டிருக்கிறது. அதில் **non-officials**-ஐ போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று தான் என் எண்ணம். சர்க்கார் இதை யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது மத்திய சர்க்காருடைய உத்திரவைப் பொறுத்து நடந்ததாகத் தெரிகிறது. இருந்தாலும் **non-officials** இருக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோர்ட்டுகள் சம்பந்தப்பட்டவரையில் கேஸ்கள் துரிதமாக தீர்ப்பளிக்கப்படுவதில்லை. அநேக பழைய கேஸ்கள் **pending** ஆக இருக்கிறது. இன்னும் தீர்ப்பாகவில்லை என்று புகார்கள் வந்துகொண்டிருக்கிறது. அவைகளையும் சர்க்கார் பார்த்து கவனிக்க வேண்டும். நீதிபதிகளுக்கு உத்தரவு அனுப்பி பழைய கேஸ்களை தீர்ப்பு செய்ய வேண்டுமென்று ஒரு **direction** கொடுக்க வேண்டும்.

**Prohibition**, அதாவது மதுவிலக்கைப் பற்றி இப்போது தீவிரமாக வேலைகள் நடந்துவருகிறது. ஆனால் எங்கு பார்த்தாலும் குற்றங்கள். குடியினால் குற்றங்கள் ஒரு பக்கம் இருக்கிறது. தவிர திருடர்கள் பயமும் வேறு விதக் குற்றங்களும் அதிகரித்திருப்பதாக வதந்தி இருக்கிறது. போலீஸ் இவைகளில் கவனம் செலுத்துவதில்லை என்றும் **prohibition**-ல்தான் கவனம் செலுத்துகிறார்கள் என்றும் வதந்தி. அப்படி இல்லாமல் மற்ற குற்றங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று சொல்லுகிறேன்.

இப்போது பஞ்சாயத்து போர்டுகள் சரியான முறையில் நடக்கவில்லை. எலெக்ஷன் ஆகி அநேக வருஷங்கள் ஆகிறது. எலெக்ஷன் இல்லாமல் பஞ்சாயத்து எலக்ஷனைத் தள்ளிவைப்பது நல்லதல்ல. நல்ல முறையில் பஞ்சாயத்து போர்டுகள் இருக்கவில்லை. சரியான கண்காணிப்பு இல்லை. பஞ்சாயத்து போர்டு எலெக்ஷனைக் கூடியசீக்கிரம் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்குமேல் தள்ளி வைக்கக் கூடாது. ஜில்லா போர்டு எலெக்ஷனையும் தள்ளி வைக்கக் கூடாது. ஒன்று ஜில்லா போர்டு வைத்திருப்பதா, அல்லது தாலுக்கா போர்டு கொண்டுவருவதா என்று ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஜில்லா போர்டுகளை வைத்திருக்க வேண்டுமானால், நல்ல முறையில் அவைகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். பணம் கொடுக்க வேண்டும். தாலுக்கா போர்டு வேண்டுமானால், அதற்கு என்ன செய்யவேண்டுமென்று யோசித்து ஒரு முடிவுக்கு சீக்கிரம் வரவேண்டும்.



5th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

எந்த காரணத்தாலும் ஜில்லா போர்டு எலக்ஷன்களைத் தள்ளி வைக்கக் கூடாது. முக்கியமாக நிதிக் குறைவு காரணமாக ரோடுகளை அவர்கள் சரிவரக் கவனிப்பது இல்லை. மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோட் என்று சொல்லப்படுபவைகளை எல்லாம் சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த பட்ஜெட்டில் 470 மைல் ரோடுகளை மட்டும் எடுத்துக்கொள்ளப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அது போதாது. பிரயோஜனம் இல்லை. முக்கியமாக பஸ் போக்கு வரத்து உள்ள இடங்களில், ஜில்லா போர்டு இந்த ரோடுகளைச் சரிவர பழுதுபார்ப்பது இல்லை. ஆகையால் மேஜர் டிஸ்டிரிக் ரோடுகளை எல்லாம் சர்க்காரே உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

**District Administration**-ஐப் பற்றி கன்னியாகுமரி ஜில்லாவிலே நாங்குனேரியை உடனடியாகச் சேர்க்கப்போவதாகச் சொன்னார்கள். இப்போது போர்டு மெம்பர் சமர்ப்பித்த ரிப்போர்ட்டை உடனடியாகப் பரிசீலனை செய்து டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றி கவனம் செலுத்தி, ஜில்லாக்களை எவ்வளவு சீக்கிரம் பிரிக்க வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கலெக்டர்களுக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிக வேலை இருக்கிறது. உதாரணமாக செங்கல்பட்டு கலெக்டருக்கு அடிக்கடி மீனம்பாக்கம் போய் அங்கு வருகிறவர்கள் போகிறவர்களைக் கவனிப்பதைத் தவிர மற்ற வேலை செய்ய அவகாசம் இல்லை. இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலும் வேலை அதிகரித்துவிட்டது. இவைகளையெல்லாம் யோசித்து கூடிய சீக்கிரம் போர்டு மெம்பர் ரிப்போர்ட்டின் அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் ரிஆர்கனேசேஷனை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

லஞ்சங்கள் அதிகமாக இருக்கின்றன. எங்கு பார்த்தாலும், முக்கியமாக கிராமங்களில், ரெவின்யூ டிபார்ட்மெண்ட், போலிஸ் டிபார்ட்மெண்ட் இவைகளில் அதிகமாக இருக்கின்றன என்று பேசப்படுகிறது. பஸ்காரர்களிடம் லஞ்சம் கேட்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு நல்ல ஆபீசர்களைப்போட்டு பரிசீலனை செய்து லஞ்சத்தை ஒழிக்க வழி செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புதிதாகப் போடப்பட்ட வரிகளில், ஸ்லாப் சிஸ்டம் என்று சொல்லப்படும் அடிப்படையில் தோட்ட வருமானத்தின் பேரில், வரி போட்டு இருக்கிறார்கள். ரப்பர், டீ, போன்றவைகள் நமக்கு அன்னிய செலவாணியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. இப்போது போட்டிருக்கும் அதிக வரியைக் குறைக்க வழி செய்ய வேண்டும். இப்போதே அவர்கள் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். இதைப் பற்றியும் சர்க்கார் நன்றாக யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவுப் பொருள்கள மீது வரியைப் பூராவாக எடுத்திருக்க வேண்டும். முக்கியமாகப் பால் போன்ற சீக்கிரம் கெட்டுப்போகும் வஸ்துக்கள் மீது வரியைப் போடக் கூடாது. உணவு தானியத்தின் மீது வரியைக் குறைத்தது போதாது. வரி பூராவையும் எடுத்திருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றி சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்.

பட்ஜெட்டில் கண்டிருக்கும் பல விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்தால் புது வரியைப் போட்டிருக்க வேண்டியதில்லை. இரண்டாவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு அவ்வளவு வரி வேண்டியதில்லை. பிளானை தள்ளி வைக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்து இப்போது போடப்பட்டிருக்கும் வரிகளை எல்லாம் எடுக்க முயற்சிக்க வேண்டும். மேலும் மேலும் வரி விதிக்க எவ்வித முயற்சியும் எடுக்கக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். முக்கியமாக இந்த பட்ஜெட்டை பற்றுக்குறையில்லாமல் சமர்ப்பித்து இருக்கலாம். இந்த வரிகள் போடுவது அவசியம் இல்லை. போடுவதால் மக்கள் கஷ்டப்படுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இவைகளை எல்லாம் யோசித்து, நிதி அமைச்சர் அவர்கள் மறுபடியும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்ன—அநேக முக்கியமான சொற்பொழிவுகள் ஆற்றியிருப்பது—எல்லாவற்றையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

11-16 a.m. **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் சபா நாயகர் அவர்களே, மதிப்பிற்குறிய என் சகா கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த விவாதங்களுக்கெல்லாம் பதில் கூறுவார்கள். என் இலாகா சம்பந்தப்பட்ட வரை சில விஷயங்களைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளைப்பற்றியும் விரிவாக விளக்கம் கூறுவதற்கு டிமாண்டுகளை விவாதிக்கும் போது எனக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்று நம்புகிறேன். இருந்தாலும் இப்போது குறிப்பிட்ட இரண்டொரு விஷயங்களைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கு மும்முரமாக அமல் நடத்திவைப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்கு குற்றங்கள், திருட்டுச் சாராயம் காய்ச்சும் குற்றங்கள் குறைந்தால் மற்ற குற்றங்கள் அதிகரிக்குமோ என்று அச்சம் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்; அவர்களும் உணரக்கூடியது, மதுவிலக்கு குற்றங்கள் குறைந்தால் அதன் விளைவாக மற்ற குற்றங்கள் தானாகக் குறையும். மற்ற குற்றங்கள் அதிகரிப்பதற்கு ஒரு முக்கிய காரணம் மதுவிலக்கு குற்றங்கள் போதிய அளவு கவனிக்கப்படாமல் இருப்பதுதான் என்று அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு குற்றங்களைப் பற்றி போலீசார் கவனம் செலுத்தும்போது மற்ற குற்றங்களையும் தவிர்க்க தங்கள் கவனத்தைக் குறைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உறுதி கூறுவேன்.

மதுவிலக்கைப்பற்றி எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர் ஒருவர் பேச்சைக் கேட்டு திடுக்கிட்டேன். சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த. இந்த சபை அங்கத்தினர், தொழிலாளர் தலைவர், அவர்கள் "ஓரளவு மதுபானம், முக்கியமாக தொழிலாளர்களுக்கு நலம் தருவது" என்று சொன்னது எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. வைத்திய முறையில் கூட அவர் ஒரு அபிப்ராயத்தைத் தெரிவித்தார்கள்; வேறு அபிப்பிராயங்களும் கேள்விப்படுகிறோம். க்ஷயரோகத்திற்கு கள் நல்லது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் நான் சமீபத்தில் ஐரோப்பா நாட்டிலுள்ள பல டாக்டர்கள், நிபுணர்கள், இவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள நேர்ந்தது. அவர்கள் உறுதியாக குறிப்பிட்டது "மது எந்த அளவிலோ, எந்த வகையிலோ இருந்தாலும், அது விஷம் விஷம்தான். உடல் நிலையை பாதிக்கத்தான் செய்யும்". இந்த உறுதியான அபிப்பிராயத்தை, இந்நாட்டிலுள்ள டாக்டர்கள் அல்ல, ஐரோப்பாவிலுள்ள டாக்டர்கள், பல நிபுணர்கள் சொல்வதைத் தெரிந்து கொள்ள நேர்ந்தது. இதுபற்றி விரிவாக பேசுவதற்கு எக்ஸைஸ் டிமாண்டு விவாதிக்கும்போது சந்தர்ப்பம் நேரும் என்று நம்புகிறேன்.

காட்டிலாகாவைப்பற்றிக் குறிப்பிட்டு, காடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். சவுக்கு மரமோ, முந்திரியோ, ஆவேரியோ ஏதாக இருந்தாலும், எது எது எந்த எந்த பிராந்தியத்தில் அதிகப் பலனை அளிக்கக்கூடும் என்பதை கவனித்துத்தான் காடுகள் அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டும் நிறைவேற்றப்பட்டும் வருகின்றன. முக்கியமாக முந்திரிச் செடிகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. சில இடங்களில்தான் முந்திரிச் செடி வளர்ந்து சிறந்த பலனைக் கொடுக்கும். எந்த இடங்களில் அவை சிறந்த பலனை அளிக்கின்றன என்பது ஆராய்ந்தறியப்பட்ட பிறகுதான் அவைகளை அங்கே வளர்க்கும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இப்போது முந்திரிச் செடிகளை வளர்ப்பதுபற்றி எதிர் கட்சி அங்கத்தினர்கள் ஒன்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன்.





முந்திரி பயிர் செய்யும் திட்டம் தேர்தலுக்குப் பிறகு ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்ல. எதிர் கட்சியினர் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்குவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே, அதாவது சென்ற அக்டோபர் மாதத்திலேயே, 8,700 ஏக்கர் வரையில் முந்திரி பயிரிடப்பட்டது. அந்த மாதத்தில் முந்திரி நடப்பட்டது. அது நன்றாக வளருகிறது; 90 அல்லது 95 சத விகிதம் பலனளிக்கக்கூடியதாக இருக்கிறது.

விவசாய உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகாரிகளையும் மற்றவர்களையும் சேர்த்துக் கூட்டங்கள் போட்டு, இப்போது கிடைக்கக்கூடிய விளைவை இன்னும் கணிசமான முறையில் அதிகப்படுத்துவதில்—முக்கியமாக தேசீய வளர்ச்சித் திட்டங்களும் சமுதாய நலத் திட்டங்களும் நிறைவேற்றப்படும் பிராந்தியங்களில் விசேஷ கவனம் செலுத்தி விளைவை அதிகப்படுத்துவதில்—கவனம் செலுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதுபற்றி விவாதிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிகாரிகளும் மற்றவர்களும் கூடும் அம்மாதிரியான கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. அந்தக் கூட்டங்களில் ஆங்காங்கே விவசாயத்தில் உள்ள குறைகளும், அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளும், உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிகளும் விவாதிக்கப்பட்டு, அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்படுகிறது. அவசியமான நடவடிக்கைகளுக்கு சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

முக்கியமாக உணவுப் பிரச்னையைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் இந்த சமயத்தில் உங்களுடைய காலத்தில் சிறிதளவு எடுத்துக்கொள்ள விரும்பினேன். கனம் அங்கத்தினர்கள் "விலைவாசிகள் அதிகரித்து வருகின்றன என்று ஒரு புறமும், உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று மற்றொரு புறமும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்" என்று குறிப்பிட்டார்கள். உணவு உற்பத்தி பெருகிக்கொண்டுதான் வருகிறது. கனம் அங்கத்தினர்களுக்கு ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே உணவுக் கட்டுப்பாடு இருந்த காலத்தில், மற்ற இடங்களிலிருந்தெல்லாம்—நமது நாட்டில் மாத்திரமல்லாமல் அன்னிய நாடுகளிலிருந்தெல்லாம்—அரிசியை வாங்கினோம். அப்போது அவ்வளவு அரிசிப் பற்றாக்குறை இருந்தது. அப்படி அன்னிய நாடுகளிலிருந்து அரிசியை வாங்கியும் மக்களுக்கு நாம் போதிய அளவு அரிசி கொடுக்க முடியவில்லை, ரேஷன் செய்துதான் கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது எங்கும் ரேஷனும் 'ப்ரொக்யூர்மெண்டும்' இருந்தது. அந்த நிலை இன்று எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது என்பதை உணர்ந்தால், இன்று உணவு உற்பத்தியும் ஓரளவு பெருகியிருக்கிறது என்பது சுலபமாகப் புரியும். ஆனால் இவ்வளவு பெருக்கம் போதாது. நமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமின்றி நமது பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் விவசாயம் நமது நாட்டில் ஜீவதாரமானதாக இருக்கிறது. மேலும், கைத்தொழில் துறையில் வளர்ச்சியடையும் நாடுகளும் விவசாயத் துறையில் விசேஷ கவனம் செலுத்தி வரும்போது, நமது நாட்டில் விவசாயம் எவ்வளவு முக்கியமானது என்பதை நன்கு உணர்ந்துதான் நாங்கள் வேண்டிய கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இன்று உற்பத்தி ஓரளவு பெருகியிருக்கிறது; இன்னும் எவ்வளவோ அதிகம் பெருக வேண்டும்; பெருக்குவதற்கு வழி தெரிகிறது; பெருக்க முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்று விலைவாசிகளும் ஓரளவு அதிகமாகித்தான் இருக்கின்றன.

நாம் ஒரு விஷயத்தை உணர வேண்டும். இப்போது இங்கே உணவுக் கண்ட்ரோல் அடியோடு இல்லை. எந்த அங்கத்தினரும் கண்ட்ரோலை விரும்பமாட்டார்கள். இப்போது கண்ட்ரோல் இல்லாமல் நாம் சமாளித்துக் கொண்டு வருகிறோம். நமது நாடு பூராவிலும் அரிசி சாப்பிடுபவர்களுக்கு அரிசி வேண்டியிருக்கிறது. மேலும், முன்பு பற்றாக்குறை இருந்த காலத்தில் வேறு வழியில்லாமல் ஓரளவு கோதுமை சாப்பிடும் பழக்கம் இருந்தது. அது கூட இன்று மாறி வருகிறது என்பதுதான் நான் கவனித்த

வரையிலும் நான் உணர்வது ஆகும். அரிசி கிடைக்கிறது என்பதால், முன்பு கோதுமையைச் சாப்பிட்டு வந்தவர்கள் கூட இப்போது அரிசியே சாப்பிட முற்பட்டிருக்கிருர்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆனுல் இன்றைய நிலேயில் அரிசிப் பற்ருக்குறை இல்லே, அரிசி கிடைக்கவில்லே என்ற புகார் இல்லே. அரிசி விலே அதிகமாக இருக்கிறது என்ற புகார் தான் இருக்கிறது. ஒரு இடத்தில் போதிய அளவு உற்பத்தியாளுலும், அது எங்கும் தாரளமாகக் கொண்டுபோகப்படலாம் என்ற நிலே இருக்கும் வரையில்—கண்ட்ரோல் வேண்டாம் என்ருல்—அப்படித்தான் இருக்கும்.

விவசாய அபிவிருத்திக்காக, உற்பத்தி செய்பவர்கள் விளேபொருள்களே தாராளமாக எங்கு வேண்டுமாளுலும் விற்பதை அனுமதிக்க வேண்டும். இன்று விவசாய அபிவிருத்தி ஏற்படாவிட்டாலும் நாளடைவில் விவசாய அபிவிருத்தி ஏற்படும் நிமித்தமாக, உற்பத்தி செய்பவர்கள் தங்கள் மனம்போல் தங்களுக்குச் சாதகமான இடங்களில் விளேபொருள்களே விற்பதை அனுமதிக்க வேண்டும். இன்றைய நிலேயில்—கண்ட்ரோல் இல்லாத நிலேயில்—தஞ்சாவூரில் உபரியாகத்தான் உற்பத்தியாகிறது. ஆகவே அந்த உபரியான விளேபொருள் வெளியே சென்றுதான் ஆக வேண்டும். அப்படி அது வெளியே செல்லும்போது, வேறு ராஜ்யங்களுக்கும் செல்கிறது. நமது ராஜ்யத்தில் பற்ருக்குறை ஓரளவு இருந்தாலும் சில ரக அரிசிகள் வேறு ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதியாகின்றன. கனம் அங்கத்தினர்களுக்கு ஒன்று நினேவுபடுத்த விரும்புகிறேன். சென்ற 1955-ம் ஆண்டில் அரிசியின் விலே குறைந்துகொண்டே போயிற்று. எதிர் கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் அதுபற்றிக் கவலே தெரிவித்தார்கள். விலே குறைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறிஞர்கள். நடவடிக்கை எடுத்துக்கொள்கிருேம் என்று நாங்களும் அப்போது கூறிேேம். " அரிசியை வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு அரிசியின் விலே குறைந்தால் நல்லது தான். இருந்தாலும், விவசாயிக்குக் கட்டுப்படியாகாத அளவிற்கு அரிசியின் விலே குறைந்தால் அரசாங்கம் விலேக்குறைவைத் தவிர்ப்பதற்கு வேண்டிய கவனம் செலுத்தும் " என்று சொன்ஞேம். அப்போது அப்படிப்பட்ட நிலேமை இருந்தது. அப்போது விலே குறைந்து கொண்டே வந்தது. " அரிசியை அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் ; சென்னேயிலிருந்தும் ஏற்றுமதி செய்ய வேண்டும் " என்று கனம் அங்கத்தினர்கள் அப்போது வற்புறுத்திஞர்கள். நாங்களும் அவ்வாறே ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்தோம். இன்றுள்ள நிலே வேறு. வருஷா வருஷம் நிலே மாறுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும். அந்தந்த வருஷத் தேவைக்கு மட்டும் அரிசி உற்பத்தியாளுல் போதாது. ஒரு buffer stock நம்மிடம் இருக்க வேண்டும். " ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதற்கு முன்பு எப்படி சமாளித்தார்கள் ? " என்ருல் அப்போது buffer stock இருந்தது. Buffer stock ஐயும் எடுத்துச் சாப்பிட்ட பிறகு ஒரு பெரும் பரிதாபகரமான பற்ருக்குறை ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதற்கு முன்பே ஏற்பட்டது, கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்பது ஒரு புறம் இருக்க, இன்றுள்ள நிலேயை எவ்வாறு சமாளிப்பது என்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிருேம். விலே அதிகரிப்பைத் தடுக்க வேண்டுமாளுல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதுதான் உருப்படியான திட்டம். அது ஒரு நாளில் ஏற்படக்கூடியது அல்ல.

நியாய விலேக் கடைகள் ஆங்காங்கு திறக்கப்பட்டிருப்பது பற்றி இன்று காலேயில் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டேன். " நியாய விலேக் கடைகளே ஜனத்தொகை விகிதாசாரப்படி அமைப்பது சாத்தியமல்ல. எங்கே ஏழை மக்கள் அதிக விலே கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிருர்களோ, அங்கே அவர்களுக்கு நிவாரணமாக ஓரளவு நியாய விலேக் கடைகள் திறக்கப்படுகின்றன " என்று நான் சொன்னேன். இதன் காரணமாக, அந்த இடங்களிலுள்ள ஏழை மக்கள் மலிவான விலேக்கு அரிசி வாங்க முடிகிறது. மற்றக் கடைகளில் 15½ அணுவுக்கு ஒரு படி அரிசி விற்கப்பட்டால்



நியாய விலேக் கடைகளில் 14 அணுவுக்கு ஒரு படி அரிசி விற்கப்படுகிறது. இதன் விளேவாக பல குடும்பங்களில் நாள் ஒன்றுக்கு சுமார் 5 அணு லாபமாகிறது. எவ்வளவு ஸ்டாக் இருக்கிறதோ அதைப் பொறுத்து நியாய விலேக் கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இன்ஞென்று சொல்ல விரும்புகின்றேன். அரிசி ஒரு இடத்திலிருந்து எங்கும் போகலாம் என்ருல், வெகு தூரத்திற்குக் கூடப் போகிறது. வங்காளத்திற்குக் கூட தமிழ் நாட்டிலிருந்து அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது ; சொற்ப அளவில் வங்காளத்திற்கு அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆந்திர ராஜ்யத்திலிருந்து அரிசி அதிகமாக வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுகிறது. எங்கு வேண்டுமாளுலும் அரிசி போகலாம் என்ருல் வியாபாரிகளும் அதைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிருர்கள். எங்கிருந்து அனுப்பப்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் வியாபாரிகளுக்குக் கவலே இல்லே. அத்தகைய ஒரு வியாபாரத்தில் ஈடுபடுகிருர்கள். வேறு இன்னும் கூடச் சில புகார் சொல்லப்படுகிறது. வங்காளத்திற்குச் சென்ருல் அங்கிருந்து பாகிஸ்தானுக்கு மறைமுகமாக, திருட்டுத்தனமாகப் போகிறது என்று வேறு புகார் சொல்லப்படுகிறது..

நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இப்போது மதிப்பிடப்படுவது, மழை குறைவு இல்லாமல் பாதிக்கப்படாமல் பயிர் நன்ருக விளேந்தால் 1½ லட்சம் டன் முதல் 2 லட்சம் டன் வரையில்தான் பற்ருக்குறை இருக்கும். இந்தப் பற்ருக் குறையை ஈடு செய்ய அரிசி ஆந்திர நாட்டில் இருந்து வருகிறது. வேறு இடங்களில் இருந்தும் வருகிறது. இதை வைத்துச் சமாளிக்க வேண்டும். ஆனுல் நம் நாட்டில் உற்பத்தியாகின்ற அரிசியையே வியாபாரிகள் வாங்கி வேறு ராஜ்யத்திற்கு அனுப்பி விட்டால் பற்ருக்குறை அதிகமாகத்தான் இருக்கும். சென்ற ஆண்டில் ரயில்வே கணக்கின் மூலம் பார்த்ததில் சுமார் 2½ லட்சம் டன் வரையில் நம்முடைய நாட்டில் இருந்து கேரள நாட்டுக்கு அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது. அது இல்லாமல் லாரிகளிலும் போகிறது. அப்படிப் போய் விட்டால் இங்கு அரிசி விலே அதிகமாவதற்கு ஒரு காரணமாகவே அது அமையும். விலே ஏற்றத்திற்கு இது முக்கியமான காரணம். தஞ்சாவூர் ஜில்லாவில் அறுவடை காலத்தில் விலே குறைவதுபோல் இருக்கிறது. உடனே ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு எல்லாம் விலே மறுபடியும் ஏறிவிடுவதற்கும் இதுதான் காரணம். இப்போது அங்குள்ள விலே சென்ற ஆண்டில் இதே காலத்தில் இருந்ததைவிட ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கூடவேதான் இருக்கிறது.

ஆகவே விலேயைக் குறைப்பதற்கு கண்டிரோலேக் கொண்டுவராமல் வேறு என்ன செய்வது என்பதைப் பற்றித்தான் இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும், இதர அரசாங்கங்களும் சேர்ந்து யோசித்தன. பல யோசனேகள் கூறப்பட்டன. அவ்வாறு பல யோசனேகளேக் கூறும்போது அதைப்பற்றி தப்பான அபிப்பிராயம்கூட வெளிவந்து விட்டது என்பதைப் பத்திரிகையில் கண்டேன். கனம் அங்கத்தினர்களும் அதைக் கண்டிருப்பார்கள்.

முக்கியமாக ஒரு யோசனே. கேரள நாட்டில்தான் அதிகமான பற்ருக்குறை இருக்கிறது. அவர்களுடைய தேவை 14 லட்சம் டன் அரிசி. ஆனுல் உற்பத்தி செய்வது ஏழு லட்சம் டன் தான். பாக்கியுள்ள ஏழு லட்சம் டன் அரிசி வெளியில் இருந்துதான் வரவேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஒன்றரை லட்சம் டன் அல்லது இரண்டு லட்சம் டன் அரிசிதான் பற்ருக்குறை இருக்கலாம் என்று சொன்னேன். எப்படியும் கேரளநாட்டு மக்களுக்கு அரிசி வேண்டும். அவர்களுக்கு அரிசி அனுப்ப வேண்டாமென்று யாரும் சொ்லலவில்லே. ஆனுல் அதை வியாபாரிகள் கையில் விட்டு விட்டால் சரியாகாது. காரணம் அரிசி தேவைப்படுகிற இடங்களுக்கு உபரியாக இருக்கிற இடங்களில் இருந்து கொண்டு போகவேண்டுமென்ற அக்கறை வியாபாரிகளுக்கு இல்லே. அவர்களுடைய நோக்கம் எல்லாம் " எதுடா நல்ல சமயம் ? எப்படி லாபம் சம்பாதிப்பது ?" என்கிற ஒன்றுதான். ஆகவே, எங்கே அரிசி விலே குறைவாக

[Sri M. Bhaktavatsalam] [5th July 1957

இருக்கிறதோ அங்கே அரிசியைப் பிடித்து, அதிக லாபம் வரக்கூடிய இடத்திற்கே கொண்டுபோய்விடுவார்கள். அந்த இடத்திற்கு வேறு இடங்களில் இருந்தும் அரிசி வரலாம். இந்தப் பிராந்தியத்தில் அரிசி கிடைக்காமல் கஷ்டப்படக்கூடிய பிராந்தியங்களும் இருக்கலாம். இங்கே ஒரு ரூபாய் குறைவு, அங்கே அதிகம் என்றால் வியாபாரிகள் அரிசி இல்லையே என்பதற்காக இங்கே சப்ளை செய்ய மாட்டார்கள். ஒரு ரூபாய் லாபத்திற்காக அங்கேதான் கொண்டுபோவார்கள். இதற்காகத்தான் ஸோணல் யோசனை சொல்லப்பட்டது. கேரள நாட்டில் அதிகமான பற்றாக்குறை இருக்கிறது. அதைத் தனியாகப் பிரித்துவிட்டால் அரிசி உபரியாக உள்ள மாகாணங்களில் இருந்து அந்தப் பிராந்தியத்திற்கு அரிசி அனுப்ப வசதியாக இருக்கும் என்று சொன்னேனே தவிர கேரளா எக்கேடு கெட்டாவது போகட்டும் என்கிற மனோபாவத்தோடு அல்ல. அப்படிப்பட்ட தப்பு அபிப்பிராயம் வந்துவிட்டது. இப்போது ஆந்திர நாட்டில் ஆறு லட்சம் டன், ஏழு லட்சம் டன் அரிசி உபரியாக கிடைக்கிறது. அதோடு ஒப்பிட்டால் மைசூரில் அதிகம் இல்லை. இதைப் பற்றியெல்லாம்தான் யோசனை செய்தோம். சமீபத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பாக ஹைதராபாத்தில் இதைப்பற்றி யூனியன் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் கூடிப் பேசினோம். மற்ற ராஜ்ய அமைச்சர்களும் வந்திருந்தார்கள். அங்கே நடந்த விவாதம் மிகவும் திருப்திகரமாக, இருக்கக்கூடிய நிலைமையை வைத்துக்கொண்டு பார்க்கிறபோது அமைந்தது. சென்னை, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய இந்த நான்கு ராஜ்யங்களையும் சேர்த்து ஒரு ஜோன் ஆக வைத்திருப்பது. இங்கிருந்து வேறு ராஜ்யங்களுக்கு அரிசி போக முடியாது என்பதாக எல்லாம் யோசித்தார்கள். தஞ்சாவூரில் இருந்து கேரளாவுக்கு அரிசி போகலாம். ஆனால் கேரளாவுக்கு அரிசி போவதனால் தஞ்சை போன்ற இடங்களில் அரிசி விலை மிகவும் உச்சமாக ஏறிற்று என்றால் அதைக் கட்டுப்படுத்தவும் நமக்கு அதிகாரம் உண்டு. வியாபாரிகள் லாபம் அடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எதுவும் செய்யாத வகையில் கட்டுப்படுத்த இது வசதியாக இருக்கும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி பரிசீலனை செய்து அவ்வப்போது அவரவர்களுடைய தேவையைக் குறிப்பிட்டு எந்த இடத்திலிருந்து தருவித்துக் கொள்வது என்பதும் முடிவு செய்யப்படும். இன்னும் சென்னையில் இருந்து கேரளநாட்டுக்குப் போவதால் இங்கு பாதிக்கப்படும் என்றால் அதைத் தடை செய்யவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த வகையில் ஒரு ஜோண் சீக்கிரத்தில் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இதிலே மற்றொன்று. விலைவாசி இப்போது கொஞ்ச காலமாக அதிகம் ஏறவில்லை. கொஞ்சம் ஏறுவது இறங்குவது ஆக இருக்கிறது. போன வருஷத்தைவிட அதிகம்தான். விலைவாசியைக் குறைப்பதற்கு வேறு தாற்காலிக ஏற்பாடுகளையும் அரசாங்கம் யோசித்துக் கொண்டுதான் வருகிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக சமீபத்தில் பார்லிமெண்டு சபையில் "எஸென்ஷியல் காமாடிடி" சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தச் சட்டத்தின் பிரகாரம் உணவு தானியங்களை யாராவது அதிக விலைக்கு விற்கவேண்டுமென்பதற்காகவே ஸ்டாக் பண்ணியிருப்பதாகத் தெரிந்தால் அதை அரசாங்கமே உடனே விலைக்கு வாங்கிக் கொள்ள • அந்தச் சட்டத்தினால் அதிகாரம் உண்டு. அதாவது சென்ற ஜூன் மாதம் 6-ந்தேதிக்கு முன்பில் இருந்து ஒரு மூன்றுமாத காலம் வரையில் உணவு தானியத்தின் சராசரி விலை என்ன என்று பார்த்து அந்த விலைக்கே அவ்வளவு தானியத்தையும் சர்க்காரே வாங்கிக் கொண்டுவிட முடியும். இம்மாதிரி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்போது அவசியம் ஏற்படுகிறதோ அப்பொழுது எல்லாம் இந்த அரசாங்கம் அந்தச் சட்டத்தை உபயோகிப்பது என்று முடிவு செய்திருக்கிறது. ஜூன் மாதம் 6-ந் தேதிக்கு முன்பு மூன்று மாதங்களின் சராசரி விலைக்கு ஒரு ரூபாய்க்கு மேல் போகாதவாறு பார்த்துக் கொண்டிருப்போம். அதிகமாயிற்று என்றால் உடனே அரசாங்கம் கையிட்டு யார்



5th July 1957] [Sri M. Bhaktavatsalam]

யார் ஸ்டாக் பண்ணியிருக்கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள முடிவு செய்திருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகள் தயாராகிவிட்டன. அரிசி வியாபாரம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை. விலையைக் குறைப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அவசியம் ஏற்பட்டால் இந்தச் சட்டத்தை உபயோகித்துக் கொள்ள தயங்கக் கூடாது என்பதே இந்த அரசாங்கத்தின் எண்ணம். இதைச் செய்வதில் மத்திய அரசாங்கம் நிதிப் பொறுப்பை பரிபூர்ணமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நமக்கும் இந்த அதிகாரம் கொடுத்து இருக்கிறார்கள். எவ்வப்போது தேவையோ அவ்வப்போது நாம் கையாண்டு கொள்ளலாம். விலைவாசி அதிகப்படாமல் இருப்பதற்காகவே அரசாங்கம் எல்லா வகையிலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உணவு தானியங்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. விலையை நிர்ணயிக்கவும் அரசாங்கம் தயாராய் இருக்கிறது. ஆனால் இப்போது விலை நிர்ணயிப்பது சரியானதாக காரணம் விலைவாசிகள் இப்போது மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. விலைவாசிகள் ஒரேயடியாக அதிகப்பட்டு இருக்கும் இந்தச் சமயத்தில் விலையை நிர்ணயிப்பது அவ்வளவு உசிதமாகாது என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. இதைத்தான் நான் இந்தச் சமயத்தில் உணவுப் பிரச்சனையைப் பற்றி அவ்வளவாகச் சொல்ல விரும்பியது. மற்றப்படி விவசாய அபிவிருத்தி பற்றிப் பல குறைகள் சொல்லப்பட்டன. நல்ல பொறுக்கு விதைகள் போதிய அளவுக்கு கிடைப்பது இல்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. அதற்கு பதில் விவசாய மானியம் விவாதத்திற்கு வரும்போது விவரமாகப் பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அப்போது பல விவரங்கள் கொடுக்க முடியும் என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

* THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 11.40 a.m.
நிதிமந்திரி அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏழை ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்காக எவ்வாறு எந்த வகையில் அவர்களின் சமுதாயத்தை முன்னேற்றுவதற்காக, அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு, கல்வித் துறையில் முன்னேறுவதற்கு என்னென்ன வழிவகைகள் எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி விவரமாக சொல்வதற்கு முன்பாக பொதுவாக, தேசப் பிதா மகாத்மா காந்திஜி ஹரிஜன மக்களுக்காக பாடுபட்ட பாட்டினை எப்பொழுது எல்லாம் ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றி பேசுகிறோமோ அப்பொழுதெல்லாம் அவர்களை குறிப்பாக ஹரிஜன மக்கள் மறக்க முடியாது. மகாத்மா காந்திஜி இந்த நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டது மட்டும் அல்ல. பல்லாண்டுகளாக தாழ்த்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு சமுதாயத்தில் அமுக்கப்பட்டுக் கிடந்த ஹரிஜன மக்களுக்கு ஒரு தைரியத்தையும் புத்துணர்ச்சியும் ஏற்படுத்தி மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாக நிற்கச் செய்தவர் மஹாத்மா காந்திஜி என்பதை யாராலும் மறுக்க முடியாது. அவர் செய்த தியாகத்தின் பயனாகத்தான் நமக்கு சுதந்திரம் கிடைத்தது. அதன் வாயிலாகத்தான் ஆளும் கட்சியினருக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குக்கூட சுதந்திரம் கிடைத்தது. மானம் கிடைத்தது. மரியாதை கிடைத்தது. அவர் செய்த சேவையின் பயனாகத்தான் ஹரிஜன மக்களுக்கு மரியாதை கிடைத்தது, மதிப்பு கிடைத்தது.

ஏழை மக்களின் வாழ்வுக்காக, அவர்களின் உயர்விற்காக வாழ்ந்த தேசப் பிதா மஹாத்மா காந்திஜி செய்துள்ள சாதனைகளை நாம் ஞாபகம் ஊட்டக் கடமைப் பட்டுள்ளோம். நமது தேசப் பிதா, ஹரிஜன மக்கள் போகாத எந்தக் கோவில்கள் உண்டோ அந்தக் கோவில்கள் பாம்பும், பிசாசும் இருக்கிற இடம் என்று காந்திஜியைத் தவிர வேறு யாரும் சொல்லவில்லை. ஆனால் இன்று ஹரிஜன மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று சிலர் சொல்லலாம். அடுத்தாற்போல், இந்த நாட்டை ஆள ஒரு ஹரிஜன பெண்தான் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று சொல்லிய பெருமை அவருக்குத்தான். ஹரிஜன மக்களின் பொருளாதார முன்னே

னேற்றத்திற்காக எந்தெந்த வகைகளில் உதவி செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம் தேசப் பிதா ஏற்கெனவே திட்டம் வகுத்து மக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். தொழில் துறையில் எவ்வாறு அவர்களுக்கு வழி வகை செய்ய வேண்டும், கல்வித் துறையில் அவர்களுக்கு என்னென்ன செய்யவேண்டும், சமுதாயத்தில் அவர்கள் என்னென்ன வசதி வாய்புகள் பெறவேண்டுமென்றும் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர் சொல்லாததை யாரும் சொல்ல முடியாது. சமுதாயத் துறையில் சென்னை அரசாங்கம் அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்திருக்கிறது என்று பார்க்கலாம். இந்த மாகாணத்தை எடுத்துக் கொண்டால் மனிதன் மனிதனாக மதிப்போடு வாழ வேண்டும். அதற்காக சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்கள் என்று இருக்கக்கூடாதென்ற அந்தக் கருத்தை மனதில் வைத்துக் கொண்டு எந்தெந்த கோவில்களில் ஹரிஜனங்கள் போக முடியாமல் இருக்கின்றதோ அங்கெல்லாம் போவதற்கு, சட்ட மூலம் போகும்படிச் ஏற்பாடு செய்த பெருமை இந்த மாகாணத்திற்குத்தான் உண்டு. குறிப்பாக இந்தியாவிலேயே இந்த மாகாணம்தான் அந்தப் பெருமைக்குரியது. (கரகோஷம்). ஆலயப்பிரவேசன சட்டத்தால் ஹரிஜன மக்கள் ஆலயங்களில் மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாக ஆண்டவனைத் தொழுவதற்கு உள்ள நிலைமையை உண்டு பண்ணியது இந்த சென்னை அரசாங்கமே.

**Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, on a point of order. When it is a well known fact that in the whole of India it was in the Travancore State that the Temple Entry Proclamation was first issued and it had been praised by no less a person than Mahatma Gandhi himself, is it in order for the Hon. Minister to refer to an erroneous fact ?**

DEPUTY SPEAKER : It is not an erroneous fact. **Perhaps he might not have known it. It is not a point of order. The Hon. Minister may continue his speech.**

The Hon. Sri P. KAKKAN : திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலே மக்கள் ஆட்சி இல்லாதபோது அங்குள்ள ராஜாவே அதுவும் மஹாத்மா காந்தியுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி செய்தாரே யொழிய அவராக ஒன்றும் செய்யவில்லை. மக்களே சட்டம் இயற்றி செய்தது முதலாக சென்னை அரசாங்கம்தான் என்பதை அங்கத்தினர்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக பொருளாதாரத் துறையில் ஹரிஜன மக்களுக்கு சென்னை அரசாங்கம் செய்த சாதனைகளை நாம் அறிவோம். கள்ளுக்கடை இருந்த காலத்தில் இந்த மாகாணத்தில் வாழ்கிற மக்கள் பட்ட படிப்பினையை மறக்க முடியாது. ஹரிஜன மக்கள் வாழ்கிற காலனிகளில் அமைதியை அன்று நாம் பார்க்க இல்லை. இன்று நம்முடைய சகோதரிகள், தங்கமே காணாத நம் சகோதரிகள் இன்று தங்கத்தைக் காண்கிறார்கள். வெள்ளிப் பாத்திரத்தைக் காணாதவர்கள் இன்று வெள்ளிப் பாத்திரத்தை காண்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. அடுத்தபடி, கள் அரக்கனை ஒழித்து ஹரிஜன மக்களை பொருளாதாரத் துறையில் இன்று இந்த அரசாங்கம் உயர்ந்த நிலையில் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. உள்ளதை உள்ளவாறு சொல்கிறேன். ஒளிக்காமல் சொல்கிறேன். காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்குத் திட்டத்தை கொண்டு வராவிட்டால் ஹரிஜன மக்களின் நிலை இன்றைக்கு எவ்வாறு இருக்கும் என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஜகன்னாதன் அவர்கள் ஒரு நாள் கேள்வி போட்டபோது, மதுவிலக்குச் சட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று கேள்வி போட்டார். அதற்காக நான் வருந்துகிறேன். நேற்றையதினம் வரை வெற்றி பெற்றது என்று சொன்னவர் இன்று வெற்றி பெறவில்லை என்று சொல்கிறார்.(கரகோஷம்). பாட்டாளி மக்களும், ஹரிஜனங்களும் இந்த மதுவிலக்குச் சட்டத்தால் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். அதை செய்ய





வேண்டிய பொறுப்பும் கடமையும் ஆளும்கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டும் அல்ல. எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கும் உண்டு. இந்த மதுவிலக்குச் சட்டத்தால் பொதுவாக நன்மை அடைந்தவர்கள் ஹரிஜனங்களே என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அடுத்தபடியாக, தீவிர கட்சியைச் சேர்ந்த ஒரு சோஷியலிஸ்ட் மெம்பர் சொன்னார், கள்ளு குடிக்க லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று. பக்கிரிஸ்வாமி பிள்ளை அவர்கள்தான் அதைச் சொன்னார்கள். தீவிரக் கட்சி என்று சொல்கிறார்களே, கள் குடிக்க லைசென்ஸ் கொடுக்க வேண்டுமாம். இதற்காகத்தானா அவர்கள் மக்களிடம் வோட் வாங்கி இங்கு வந்திருக்கிறார்கள். ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஹரிஜன மக்களுக்கு எவ்விதம் உதவி செய்யவேண்டும் என்பதைப் பற்றி சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். வட சென்னையில் வாழ்கிற மக்களின் குறைகளை அவர்கள் அறிவார்கள். அவர்களின் குறைகளைத் தீர்க்க, அவைகளை நிவர்த்திக்க நல்ல காரியங்களைச் சொல்வார்கள் என்று எதிர்ப்பார்த்தேன். ஆனால் அம்மையார் அவர்கள் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

Sri K. ANBAZHAGAN: இதற்கு முன்னால் இந்த அவையில் பேசப்பட்ட கருத்துக்கள் பட்ஜெட்டைப் பற்றிய பொது கருத்துக்களே தவிர ஒவ்வொரு துறையைப்பற்றிய முடிவான கருத்துக்கள் அல்ல. அவைகளைப் பற்றி நாங்கள் பேசுவதற்கு முன்னால் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அதைப்பற்றி பேசவில்லை என்று கூறுவது சரியல்ல என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The Hon. Minister is replying to the speech of the hon. **Member, Srimathi Sathiyavanimuthu.**

Dr. (Srimathi) SATHIYAVANIMUTHU : **On a point of order, Sir.** உதவின் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் நான் ஏதோ குறிப்பட்ட பொருளைப்பற்றி பேசவில்லை என்று வருத்தப்படுவதாக கூறினார்கள். நான் இந்த சபைக்கு புதிய உறுப்பினர் என்றிருந்த போதிலும் கூட எனக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பில் முதல் தேதியிலிருந்து 5-ம் தேதி வரைக்கும் பட்ஜெட்டின் மீது பொது விவாதம் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி நான் பொதுவாக பேசினேனே தவிர தனிப்பட்ட இனங்களைப் பற்றி பேசவில்லை. அதற்கென்று ஒதுக்கப்படும் நேரத்தில் இந்த இனத்தைப் பற்றி அப்போது வரும் மான்யத்தின் மீது ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றி விரிவாக எங்கள் கட்சியின் சார்பில் நானே விளக்கங்களை வழங்கவிருக்கின்றேன், என்பதை ஆளும்கட்சியில் இருப்பவர்களுக்கு சொல்லிக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER : It is not a point of order. It is only a point of information. The hon. Member has stated that she did not refer to it. So the Hon. Minister need not raise that point.**

The Hon. Sri P. KAKKAN : ஏனென்றால் வரவு செலவு திட்டத்தின் பொது விவாதத்தின் மீது பேசும்போது தான் கனம் அங்கத்தினர்கள் அதிகமாக பேச முடியும். அதில் ஹரிஜனங்களின் குறைகளை பலர் எடுத்துச்சொல்லியிருக்கலாம். அதில் ஹரிஜனமக்களுக்கு வீடு கட்டி கொடுக்கப்பட வில்லை என்றும் பொருளாதாரத் துறையில் சரியான வழியில் அவர்களுக்கு திட்டம் வகுக்கப்படவில்லை என்று சிலர் கூறினார்கள். நான் சொல்லுகின்றேன். முதலாவது வீட்டை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு தான் மற்ற காரியங்களைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு கூடுதலான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டுமென்றுதான் அரசாங்கம் பல திட்டங்களை வகுத்து அதன்படி செயலாற்றி வருகிறது என்று கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். **(Mr. Speaker in the Chair.)** மேலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் பல திட்டங்களை செய்துகொண்டிருப்பதோடு மட்டு

மல்லாமல், விவசாயத் துறையிலும் அவர்களுக்கு பல உதவிகள் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது எல்லா இடங்களிலும் கூடுதல் உற்பத்தியை பெருக்குவதற்காக அதாவது 10 கலம் விளைந்து கொண்டிருக்கின்ற இடத்தில் 15 கலம் விளைவிப்பதற்காக பல முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையில் அவர்களுக்கு மேலும் ஊக்கமளிப்பதற்காக பல திட்டங்களையும் அரசாங்கம் வகுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய அண்ணாத்துரை அவர்கள், நாங்கள் மட்டும் குறைகளை சொல்ல வில்லை, காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும் குறைகளை சொல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டார். ஆம், அது தான் காங்கிரஸ் கட்சியின் லட்சியம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். உள்ளதை உள்ளபடி சொல்லுவது தான் காங்கிரஸ் கட்சியின் லட்சியம். இதல்லாமல் தேர்தல் காலத்தில் வெளியில் மக்களிடத்தில் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்கு போனால் கட்சிக்கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வெறும் வாய்பேசா பொம்மைகளாகத்தான் இருப்பார்கள், நாங்கள் போனால் வானத்தை வில்லாக வளைப்போம் என்று சொல்லி பிரசாரம் செய்து இங்கு வந்தவர்களுக்கு இவைகளை பார்த்தால் காங்கிரஸ்காரர்களும் சும்மா இருக்க மாட்டார்கள் என்பதை இனிமேலாவது அறிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (ஆரவாரம்) இந்த வரவு செலவு திட்டத்தில் அதிகமாக பங்கு கொண்டவர்கள் ஹரிஜன அங்கத்தினர்கள். அவர்கள் சொன்ன குறைகளை நன்கு கவனித்து அந்த குறைகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக புறம்போக்கு மனைகளில் ஹரிஜனங்கள் இருந்தால் அவர்களை அங்குள்ள நிலச்சுவான்தார்கள் அப்புறப்படுத்தக்கூடாது என்று ஹரிஜன மக்களுக்கு பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லா போன்ற இடங்களில் அரசாங்கம் இதற்காக பல திட்டங்கள் வகுத்திருக்கிறது. சமுதாயத்துறையில் ஹரிஜனங்களுக்கு பல இக்கட்டான நிலைகள் உண்டு, பல தொல்லைகள் உண்டு என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. மிகவும் மோசமான, இழிவான சமூக நிலை இருக்கிறது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படையாக நாட்டிலே யுள்ள ஜாதி கட்டுபாடு ஒழிய வேண்டும். சமூக கட்டுப்பாடுகள் ஒழிய வேண்டும். இந்த கொடுமைகளை ஒழிப்பதற்காக அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஜாதி கட்டுப்பாட்டை ஒழிப்பதின் மூலந்தான் ஹரிஜன மக்கள், மற்ற மக்களோடு சரிநிகர் சமமாக வாழ முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதை நிறைவேற்றுவதற்குத் தான் அரசாங்கம் இருக்கிறதே தவிர வெறுமனே இங்கு வந்து இருப்பதற்கு அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக நகரசுத்தி தொழிலாளர்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஏதோ அவர்களுடைய நிலைமைப்பற்றி இந்த அரசாங்கம் ஒன்றும் கவனிக்கவில்லை என்று சொல்லுபவர்களைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. கனம் அங்கத்தினர் கே. பி. எஸ். மணி அவர்கள் முனிசிபல் தொழிலாளர்களைப் பற்றி சொன்னார்கள். ஆனால் இப்போது முனிசிபல் தொழிலாளர்களுக்கு முனிசிபாலிட்டியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. கார்ப்பரேஷன் தொழிலாளர்களை பெர்மனண்டாக்க வேண்டுமென்று பலர் கூறினார்கள். அவ்விதம் பலரை பெர்மனண்டாக்கப்பட்டிருக்கிறது. பெர்மனண்டாக்குவது நகரசபைகளைப் பொறுத்தது. ஹரிஜனங்களை முன்னேற்றுவதற்கு நான்கு திட்டங்கள் மூலம் அரசாங்கம் வேலை செய்து இருக்கிறது. அதாவது ஒன்றுசட்டத்தின் மூலம், அதாவது சட்டத்தைக் கொண்டு அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவது, இச்சட்டங்களுக்குப் புறம்பாக யாராவது நடந்தால் அரசாங்கம் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கின்றது. அடுத்தபடியாக சமூக கல்வியைப் பரப்பி தீண்டாமையைப் போக்குவது. அதாவது இது தீண்டாமை என்பதே ஹிந்து மதத்திலுள்ள மாசு தான், அருகில் வரக்கூடாது என்ற தன்மையெல்லாம் இன்னும் சிறிது காலத்தில் போய்விடும். ஆகவே அரசாங்கம் சமூக கல்வியை பரப்புவதின் மூலம் சமுதாயத்திலே ஹரிஜனங்களின் நிலைமையை உயர்த்துவதற்கு அதிகம் பாடுபட்டு வருகிறது. மூன்றாவது ஜனநாயக வழியை கடைப் பிடித்து இந்த தீண்டாமையை போக்குவதற்கு பாடுபட்டு வருகிறது. உதாரணமாக



சொல்லப்போனால் ஜனநாயகம் பேசுகின்ற நண்பர்கள் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக தீண்டாமை ஒழிப்பு விஷயத்திற்காக அதிகமாக அக்கரைப்படுவதாகத் தெரியவில்லை. ஜாதியின் பெயரால் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் என்னவெல்லாமோ சொல்லி தாங்கள் அரசியல் வளர்ப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் ஜனநாயக வழியை பின்பற்றி மக்கள் தங்களது உரிமைகளை பெறுவதற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாதென்று இன்று அரசாங்கம் வேலை செய்துவருகின்றது. நான்காவது திட்டம் ஹரிஜன மக்களுக்கு கல்வி வசதி அளிப்பதாகும். அதுமட்டுமல்ல அவர்களை உயர்ந்த நிலைமைக்கு கொண்டு வர வேண்டுமென்ற முறையிலே அவர்களுக்கு இதர தொழில் வசதிகளும் செய்துகொடுக்கப்படுகிறது. இம்மாதிரி அரசாங்கம் பின்தங்கிய வகுப்பு மக்களின் முன்னேற்றதிற்கு பாடுபட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ அண்ணாதுரை அவர்கள் நேற்று சொன்னார்கள், முன்பு சாதித்ததைச் சொல்லிவிட்டு இப்பொழுது சாதிக்கப்போவதைச் சொல்லவேண்டும் என்று. முன்பு சாதித்ததையும் இப்பொழுது சாதிக்கப்போவதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை அரசாங்கம் மத்திய சர்க்கார் உதவியில்லாமல் பின்தங்கிய உறரிஜன மக்களுக்கு கல்விவகையிலே 1956-57-ல் ரூ. 58,68,416 செலவழித்தார்கள். 1957-58-ல் ரூ. 69,89,100 செலவிடப்போகிறார்கள். சுகாதாரத்திற்காக 1956-57-ல் ரூ. 8,48,306 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 7,49,300 செலவிடப்போகிறார்கள். கள்ளர் "ரெக்லெமேஷனுக்காக" 1956-57-ல் ரூ. 7,37,542 செலவிட்டார்கள். 1957-58-ல் ரூ. 8,58,200 செலவிடப்போகிறார்கள்.

மத்திய சர்க்கார் பாதியும் ராஜ்ய சர்க்கார் பாதியும் செலவழிக்கின்ற திட்டத்தின் கீழே தீண்டாமை ஒழிப்பு வேலைக்காக மட்டும் 1956-57-ல் ரூ. 17,54,895 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 47,18,800 செலவிட்டிருக்கிறார்கள். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் என்பதை அண்ணாதுரை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக பின்தங்கிய குற்றபரம்பரையினர் முன்னேற்றத்திற்காக 1956-57-ல் ரூ. 7,38,487 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 6,70,900 செலவிடப்போகிறார்கள். இதர பின்தங்கிய வகுப்பினர்களுக்காக 1957-58-ல் ரூ. 1,29,162 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 11,91,600 செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். ஆதிவாசிகளுக்காக 1956-57-ல் ரூ. 2,01,688 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 2,57,100 செலவிடப் போகிறார்கள். மத்திய சர்க்காரே பூராவும் செலவிட இருக்கும் திட்டத்தின் பிரகாரம் தீண்டாமை ஒழிப்புக்காக மட்டும் 1956-57-ல் ரூ. 3,82,689 செலவிட்டிருக்கிறார்கள் மத்திய அரசாங்கம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லிய நண்பர்களுக்கு இதை எடுத்துக்கூற விரும்புகிறேன். 1957-58-ல் ரூ. 29,400 செலவிடப்போகிறார்கள். குற்ற பரம்பரை சமுதாயத்தினருக்காக 1956-57-ல் ரூ. 3,03,257 செலவிட்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்த விவரங்களை பொதுவாகக் சொன்னேன். மேலும் பின்தங்கிய வகுப்பினர்களுக்காக கல்வி, கைத்தொழில் முதலிய பல்வேறு இனங்களுக்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்ற விவரங்களையெல்லாம் வெட்டுப் பிரேரணை விவாதத்தின்போது விரிவாக எடுத்துச் சொல்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பின்தங்கிய மக்கள் முன்னேற்றத்திற்காகவும், உறரிஜன மக்கள் முன்னேற்றத்திற்காகவும் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் அரசாங்கம் 5 கோடி ரூபாய் அள்ளிக் கொடுத்திருக்கிறது. ரூ. 5 கோடி செலவழிக்க திட்டமிட்டுள்ள அரசாங்கம் சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்தை கண்ணும் கருத்துமாக கவனித்துவருகிறது என்பதை அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். சோஷலிஸ் பாணியிலுள்ள சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று திட்டமிட்டுள்ள மக்கள் சர்க்கார் இனிமேல் சும்மா இருக்க முடியாது. மேல்தட்டில் இருப்பவர்கள் சிறிது கீழே இறக்கவேண்டும்.

[Sri P. Kakkan] [5th July 1957

கீழ்த்தட்டில் இருக்கும் பாட்டாளி மக்களை மேலே உயர்த்தி அவர்களுக்கு பாதுகாப்பும் வசதிகளும் அளிக்கக்கூடிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்திற்கு அதிகமாக இருக்கிறது. அதோடு மற்ற மக்களுக்கும் நியாயமாக வேண்டிய வசதிகளையும் செய்துகொடுப்போம் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI M. JAGANNATHAN : A point of personal explanation, Sir.** கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது கேள்வி நேரத்திலே நான் மதுவிலக்கு திட்டம் திருப்திகரமாக நடைபெறவில்லை என்று குறிப்பிட்டதாகவும், சமீபகாலம் வரையில் வெற்றிகரமாக நடந்துகொண்டிருந்த திட்டம் இப்பொழுது நன்றாக நடக்கவில்லை என்று நான் சொன்னதாக இங்கு சொல்லி அவர்களுடைய கட்சி அங்கத்தினர்களின் . . .

**MR. SPEAKER : Point of explanation** தன்னைப்பற்றி இருந்தால் சொல்லவேண்டியது. பாக்கி பேர்களைப்பற்றி சொல்லக்கூடாது.

**SRI M. JAGANNATHAN :** . . . கைதட்டலை பெற்றார்கள். நான் மாத்திரம் மதுவிலக்கு திட்டம் திருப்திகரமாக நடைபெறவில்லை என்று சொல்லவில்லை. மத்திய அரசாங்கத்தில் நீண்ட காலமாக அமைச்சராக இருந்த அமிர்த கௌர் அம்மையார் அவர்கள் மதுவிலக்குத் திட்டம் அவ்வளவு திருப்திகரமாக நடைபெறவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (கரகோஷம்).

அடுத்தபடியாக, கனம் அமைச்சர் அவர்கள் நான் கூறுவது உண்மை அல்ல என்பதை எடுத்துக்காட்டி அந்த மட்டிலே வெற்றிபெற்றதாக எண்ணம் கொண்டு அதோடு நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்களையும் அவர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க தாங்கள் சர்க்கார் கட்சியில் இருக்கின்ற காரணத்தினாலே தகுந்த நடவடிக்கை எடுத்து ஏழ்மையிலே வாழ்கின்ற லட்சக்கணக்கான உறரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு சேவை செய்து அந்த மக்களுடைய கைதட்டுதலையும் வாழ்த்துதலையும் மந்திரி அவர்கள் பெற்றால், நான் அதை வரவேற்று அவரை மனமாரப் பாராட்டுவேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் 101 அங்கத்தினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். 101 அங்கத்தினர்கள் பேசும்பொழுது முன்பு எல்லாம் சில பேர்களுக்கு 5 நிமிஷம்தான் காலவரை இருக்கும். ஆனால் பொதுவாக ஒவ்வொருவரும் 10 நிமிட நேரம் பேசினார்கள். அதற்கு பிற்பாடு என்னுடைய சகாக்கள் இருவர் இதிலே பங்கெடுத்துக்கொண்டு, என்னுடைய பாரத்தை ஓரளவுக்குக் குறைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை 101 கனம் அங்கத்தினர்கள் இவ்விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். என் பக்கத்தில் இருந்தவர்களில் பலரும், எதிரில் இருக்கின்றவர்களில் சிலரும் கூட, இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டியும், அதற்காக என்னைப்பற்றி ஒரு சிறிது அளவு பாராட்டியும் பேசினார்கள். இந்தப் பதிலிலே அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்துவதைத் தவிர, அதற்குமேல் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. இங்கு நான் எழுந்து நிற்பது வரவு செலவு திட்டத்தை எதிர்த்தவர்களுக்கு அதிலே குற்றங்குறை கூறினவர்களுக்கு பதில் சொல்வதற்காகத்தான்.

அதிலும் முக்கியமாக எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இந்த பட்ஜட்டிலே இருக்கக் கூடிய குறைகளை வெகுவாக எடுத்துச் சொன்னார்கள். அதனாலே நாங்கள் ஏதோ மனத்தாங்கல் அடையலாம் என்ற சந்தேகம் பல அங்கத்தினர்களுடைய மனதிலே இருப்பதாகத் தெரிகிறது. (எதிர் வரிசையில் சில அங்கத்தினர்கள் : கிடையாது).

குறைகளை எடுத்துச் சொல்வது மிகவும் அவசியம் என்று நாங்கள் உணருகின்றோம். நாங்கள் போடுகின்ற திட்டமாக இருந்தாலும் சரி,



5th July 1957] [Sri C. Subramaniam]

நாங்கள் செய்கின்ற வேலையாக இருந்தாலும் சரி, அவைகள் குற்றங்குறைகள் அற்றவை என்று நாங்கள் எந்த நாளும் கருதியது இல்லை. அதில் இருக்கும் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்வது மிகவும் அவசியம். அப்பொழுது தான் நாம் எல்லோரும் விரும்பும் மக்களின் நலத்திற்காக நாம் நல்ல முறையிலே பாடுபட முடியும். ஆகையால், பாராட்டுதலை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளும்போது, குற்றங்குறைகளை இன்னும் அதிக நன்றியுடன் வரவேற்கின்றேன்.

ஆனால், குற்றங்குறைகள் கூறும்போது, அப்படிச் சொல்லும் வாக்குக்கு நாங்கள் மதிப்பு கொடுக்க வேண்டுமானால், அதற்குத் தகுந்த முறையிலே வாதங்கள் இருக்க வேண்டும். நான் பொதுவாக சில விஷயங்கள் சொல்வேன் என்றால், அதற்காக கனம் அங்கத்தினர்கள் என்னைத் தப்பு அர்த்தம் செய்து கொள்ள மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். இதிலே மாறுபட்ட கருத்துக்கள் அவசியம் இருக்கத்தான் வேண்டும். மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லுகின்றவர்களை நாங்கள் அக்கறையுடன் கேட்கவேண்டுமென்று விரும்பினால், விஷயங்களை நன்றாக ஆராய்ந்து, தெரிந்து, அந்த விஷயங்களைப் புரிந்து கொண்டதற்குப் பிற்பாடு, அந்த விஷயங்களையொட்டி அபிப்பிராயங்கள் வேறு விதமாகச் சொல்வதாக இருந்தால், உண்மையிலேயே அந்த அபிப்பிராயங்களை நல்ல முறையிலே கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதிலும் முக்கியமாக, கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், பட்ஜெட்விவாதத்திலே பேசும்போது, மேடையிலே பேசுகின்றோம் என்ற மனப்பான்மையுடன் பேசுவோமேயானால், அதற்கு எந்தவிதமான மதிப்பும் இங்கு ஏற்படாது; அதனால் பயனும் ஏற்படாது. பட்ஜட் திட்டங்கள், நல்ல முறையிலே எல்லோரும் அதனுடைய நுணுக்கங்களையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், பெரிய புத்தகமாக அச்சிட்டு ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதை நல்ல முறையில் அங்கத்தினர்கள் படிப்பார்களானால், பல குற்றங்குறைகள் அதிலே எடுத்துச் சொல்ல முடியும் என்றுதான் நானும் நினைக்கின்றேன். அவைகள் ஒன்றையும் பாராமல், இங்கு வந்து வெறுமனே, பொதுவாகப் பேசுவார்களேயானால், அதிலே பலன் ஒன்றும் ஏற்படாது. ஆகையால், முதன் முதலில் நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது இது தான். என்னுடைய சிறிய அனுபவத்தை, நான் சிறியவனாக இருந்தாலும், சொல்கிறேன். பெரிய அறிஞர்கள் எல்லோரும் மன்னிக்க வேண்டும், அவர்களுக்கு ஏதோ உபதேசம் செய்கின்ற முறையிலே எடுத்துக் கொள்வார்களானால், ஆகையால், நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது, பட்ஜெட் நுணுக்கங்களையும், அதனுடைய அடிப்படைகளையும் நல்ல முறையிலே தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான்.

உதாரணமாக **Revenue expenditure** அதாவது அன்றாடம் ஏற்படக் கூடிய செலவுகள், **Capital expenditure** அதாவது மூலதனச் செலவுகள், ஆகியவைகளிலே அடிப்படையாக இருக்கக் கூடிய வித்தியாசங்கள் என்ன ? **Deficit budget** அதாவது பற்றுக்குறையாக பட்ஜட் போடுவது என்பது ஒன்று ; **Deficit financing**, என்பது மற்றொன்று. இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன ? இதைப் போல இருக்கும் நுணுக்கங்களை யெல்லாம் நாம் தெரிந்துகொண்டால் நம் விவாதத்திலே ஏற்படக்கூடிய குற்றங்கள் பல குறைந்து விடும் என்று நான் நம்புகிறேன். இப்பொழுதுதான் புதிய சபை ஆரம்பித்திருக்கிறது, போகப்போக சரியாகி விடும் என்று நினைக்கிறேன்.

நாங்கள் விரும்புவது—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—இந்த சபையில் இருக்கும் அங்கத்தினர்கள் எல்லோரும் விஷயங்களைத் தெரிந்திருக்கிறார்கள் எல்லோரும் திறமைசாலிகளாக விவாதத்திலே கலந்து கொள்ள முடியும் என்ற ஒரு நல்ல புகழ் ஏற்படவேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஆகையால், இந்த பக்கத்தில் இருக்கும் அங்கத்தினர்கள் மட்டுமல்ல, எதிரில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, எல்லோரும்

நம்முடைய தரத்தை உயர்த்திக்கொள்ளக் கூடிய முறையிலே விஷயங்களைத் தெரிந்துகொள்ளமுற்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படி விஷயங்களைத் தெரிந்து கொண்டு பேச முற்படுவார்களானால், எந்த மந்திரியாக இருந்தாலும், காது கொடுத்துக் கேட்டுத்தான் ஆக வேண்டும். இது பீஷ்வா பட்ஜட், இது பீஷ்வா காலத்து முறை, இது சுரண்டல் பட்ஜட் என்று வாயளவிலே பேசுவார்களானால், "அது அவர்கள் பாணி போல் இருக்கிறது" என்று நினைத்து, மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்பதற்குக் கூட மனத்தூண்டுதல் இருக்காது. அந்த ரகத்தில் பேச்சு இருந்தால், "மற்றதும் இப்படித்தானே இருக்கும்" என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

இன்னும் சில அங்கத்தினர்கள் குறளை மேற்கோள் காட்டி குற்றங் காண முன்வந்தார்கள். "கொடுங்கோன்மை" என்னும் அதிகாரத்திலிருந்து ஒரு குறளை எடுத்துச்சொல்லி, இந்த வரி வசூலைப்பற்றிச் சொன்னார்கள். அப்பொழுது அர்த்தம் என்ன ஆகிறது? இங்கு அப்படிப்பட்ட கொடுங்கோன்மை நடக்கிறது என்றுதானே ஆகிறது? திரு. அண்ணாதுரை அவர்கள்கூட ஒப்புக்கொள்வதாக இல்லை என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், எதையும் யோசிக்காமல், எந்தச் சமயத்தில் எந்தக் குறளை எதற்காக உபயோகப்படுத்துவது என்று தெரியாமல் (ஆரவாரம்) இடையினத்தில் வந்திருக்கிற "ர" வுக்கும் வல்லினத்தில் வரக்கூடிய "ற" வுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஏதோ ஒரு குறளை எடுத்துச் சொல்லி, அப்படிச் சொன்னவுடனே தாம் ஏதோ அலசித் தள்ளி விட்டோம், குறளைச் சொல்லி குற்றங் குறை சொல்லி விட்டோம் என்ற மனப்பான்மை வந்து விட்டால் பலன் ஒன்றும் ஏற்படாது.

அதேமாதிரி, ஏதோ "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று திருப்பித் திருப்பிச் சொல்வதாலும் எந்த விதமான பலனும் ஏற்பட்டு விடாது. இருக்கக் கூடிய புள்ளிகளை வைத்துக்கொண்டு, எந்த எந்த துறையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதை எந்த எந்த முறையிலே மாற்றியமைக்க முடியும், இன்னும் திறமையாகச் செய்ய முடியும் என்று யாராவது யோசனை சொல்வார்களானால், அவர்கள் தான் உண்மையிலேயே நாட்டுக்குச் சேவை செய்கின்றவர்கள், மக்களுடைய நலத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள். அந்த முறையிலும் சில அங்கத்தினர்கள் முயற்சி செய்தார்கள் என்று நான் உணருவேன். எதிர்த்தாற்போல் இருக்கும் திரு. ப. உ. ஷண்முகம் அவர்கள் சில புள்ளி விவரங்களைக் காட்டி, இருக்கக்கூடிய குறைகள் என்ன, என்று எடுத்துச் சொல்லியபோது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி ஏற்பட்டது. இதில் இருக்கும் குறைகள் என்ன என்பதைத் தெரிந்திருக்கிறார், சமாதானம் கேட்கிறார் என்பதைப் பார்க்க, அவர் விஷயத்தைத் தெரிந்திருக்கிறார் என்று எனக்கு இன்னும் உற்சாகம் ஏற்படுகிறது. இவர்களுக்குச் சமாதானம் சொல்லவேண்டும் என்ற எண்ணமும் தோன்றுகிறது. அதே போல, திரு. சட்டநாத கரையாளர் அவர்கள் பேசும்போது, "நமக்கு இந்த Revenue deficit இருப்பதால் அவ்வளவு கவலை இல்லை; மூலதனச் செலவுக்காக குறைவு இருக்கிறது. Ways and Means-க்கு என்ன செய்யப்போகின்றோம் என்பது தான் நாம் இன்றைக்கு ஆழ்ந்து யோசிக்க வேண்டியது" என்று சொன்னபோது, உண்மையிலேயே இருக்கக் கூடிய பிரச்னைகளை அவர்கள் உணர்ந்திருக்கின்றார் என்று கண்ட போது எனக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆகையால், நான் விரும்புவது சக அங்கத்தினராக இருக்கும் ஒவ்வொருவரும் விஷயங்களைத் தெரிந்து, ஆழ்ந்த ஞானத்துடனே புள்ளி விவரங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு, இங்கு விவாதத்திலே கலந்து கொள்வாரானால் உண்மையான பலன் ஏற்படும். அப்படியில்லாமல், நாம் சமீபத்தில் தானே தேர்தலிலிருந்து வந்திருக்கிறோம் என்ற முறையிலே அதே பாணியில் பேசுவதினாலும் பலன் இல்லை. இது முதல் பட்ஜட். பரவாயில்லை. இனிமேல் வரும் பட்ஜட்டின் போது விஷயங்களை இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ளக் கூடும். ஐந்து வருஷங்கள் கழித்துத்தான் தேர்தல் வரப் போகிறது என்பதை மனதில் கொண்டு, இதற்குள் நாம் எப்படி காரியங்களைச் செய்வது, இருக்கக் கூடிய



வசதிகளை எப்படி நன்றாகப் பயன்படுத்தமுடியும், அதற்கு நாம் எப்படி யோசனை சொல்ல வேண்டும் என்ற அக்கறையுடன் ஒவ்வொருவரும் பேச முன் வரவேண்டும், அக்கறையுடன் படித்து விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆகையால், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள், தாங்கள் பேசுகின்ற பேச்சுக்கு மதிப்பு ஏற்பட வேண்டுமென்று விரும்பினால், உண்மையிலேயே விஷயம் தெரிந்து, நன்றாகக் குறைகளை எடுத்துச்சொல்லி, மாற்று யோசனைகளையும் எடுத்துச் சொல்ல முன்வருவார்களானால், அவற்றிற்கு என்றைக்கும் மதிப்புக் கொடுக்க சர்க்கார் தயாராக இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், அந்தப் பேச்சுக்கு அதிகம் மதிப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நியாயமான குறையெல்லாம் கேட்டார்கள். எடுத்துச் சொல்வது அவசியம். அது இல்லாமல் ஒரு கட்சி வாதம் என்ற முறையிலே நம்முடைய பட்ஜெட் விவாதத்தை நடத்திக்கொண்டு போவோமானால் நாம் நல்ல முடிவுகளைப் பெற முடியாது. கட்சி உணர்ச்சி தான் மற்றவர்களிடத்திலும் வந்துவிடும். நாம் கட்சி சார்பாகப் பேசி விட்டு, மற்றவர்கள் கட்சியைப் பற்றி நினைக்கக்கூடாது என்பது தவறான எண்ணம். நாம் எந்த உணர்ச்சியோடு பேசுகிறோமோ அந்த உணர்ச்சிதான் பிரதிபலிக்கிறது மற்றவர் மனதிலும். குறிப்பாக பட்ஜெட் விவாதத்திலே இந்த விஷயங்களில் நன்றாக யோசித்துப் பார்த்து நியாய்மான முறையில் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்ல முன் வரவேண்டும். ஆகையால் இந்த சபையில் விவாதங்கள் நல்ல முறையில் நடக்க சர்க்கார் மட்டுமல்ல, எதிர் கட்சியிலே இருக்கிறவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு திறமையாகவும் நியாயமாகவும் சபை விவாதத்திலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்த சபையின் தரம் உயரும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் குறிப்பிட்டார் "நாங்கள் நல்ல முறையிலே, நல்ல எதிர் கட்சியாக, ஒரு காலத்தில் ஆளும் கட்சியாகும் எண்ணத்துடன் தான் இங்கு வந்துள்ளோம்" என்று சொன்னார்கள். ஆகையால் "நாங்கள் பொறுப்புடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறோம்; அதிலே மாறுதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது இந்தப் பக்கத்தில் இருக்கிறவர்களுடைய கடமை" என்று சொன்னார். அதில் உறுதியாக இருக்க வேண்டும். உண்மையாக, வேறு வித்தியாசங்கள் இருந்தாலும் கூட, நியாயமான ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையையும் உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும். சமயத்திற்காக மாற்றிக்கொள்வது என்பது கூடாது. அதே மாதிரி எப்போதும் இந்த உறுதியுடன் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, காங்கிரஸ் அங்கத்தினர்கள் தங்கள் தொகுதியிலே இருக்கிற குறைகளை தெரிவித்தது பற்றி குறிப்பிட்டபோது ஆச்சரியப்பட்டதாக கனம் அண்ணாதுரை அவர்கள் பேச்சிலிருந்து தொனித்தது. "முதல் ஐந்தாண்டுத் திட்டம் மூலமாக குறைகள் நீங்கியது; குறைகள் நீங்கின பிறகு உயர்வைக் கொடுக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம்" என்று நாங்கள் நினைப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம். குறைகளையெல்லாம் ஐந்து வருஷத்தில் தீர்த்து விடலாம் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கலாம். "சுயராஜ்யம் வரட்டும் ஒரு வருஷத்தில் பாலும் ஓட வைத்துவிடுவோம்" என்று எண்ணிக்கொண்டிருந்தேனும் தோம். அந்தக் காலத்தில் அதே மாதிரியான நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரை இப்பொழுது இருக்கிறார். அனுபவம் ஏற்பட்டால்தான் இதில் இருக்கும் சிக்கல்கள் எவ்வளவு என்று தெரியும். இன்றைக்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிவைத்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். இதில் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது? அவர்கள் நினைக்கலாம்; ஆனால் நான் நினைக்கவில்லை. ஆரம்பத்தின் ஆரம்பமாக அமைந்திருக்கிறது இந்த ஐந்தாண்டுத் திட்டம். பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறும்போது தான் பல குறைகள், அத்தியாவசிய குறைகள் நீங்கும், என்று நம்புகிறேன். 20 ஐந்தாண்டுத் திட்டங்கள் நடக்கட்டும் அப்போதும் குறைகள் இருந்துகொண்டுதான் இருக்கும். ஒரு ஐந்தாண்டுத்

திட்டம் ஆனவுடன் குறைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்று நினைத்தால் அவர்கள் உண்மையை உணராதவர்கள். நியூ யார்க் ஸ்டேட் நிதி நிலை மையைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்டேட் டின் ஜனத்தொகை நம்மில் 3-ல் ஒரு பங்கு என்று நினைக்கிறேன்; கொஞ்சம் குறைவாகக்கூட இருக்கலாம். அந்த ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு வருவாய் 550 கோடி ரூபாய். அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறது, நிதி நிலைமை போதாமல் இருப்பதால் சில அத்தியாவசியமான குறைகளை தீர்க்க முடியவில்லை என்று மனிதனுடைய தேவைகள் வளர்ந்துகொண்டே போகும். ஆகையால் இன்னும் குறைகளை சொல்லக்கூடிய நிலையில் இருக் கிறோமே என்று நினைப்பார்களானால் அவர்கள் உண்மையான நிலையை உணராதவர்கள்தான். காங்கிரஸ் அங்கத்தினர்கள் தொகுதியில் குறைகள் இருக்குமானால் அவைகளை எடுத்துச் சொல்லவேண்டியது அந்த அங்கத் தினர்களுடைய கடமை. அப்படி அவர்கள் செய்யாவிட்டால் கடமை தவறி யவர்கள் ஆவார்கள். குறைகள் இல்லை என்று மறுக்க முற்பட்டால் அவர்கள் கடமையை செய்தவர்களாக மாட்டார்கள். ஆகவே, கடமையுணர்ச் சியை நல்ல முறையிலே உணர்ந்து பணியாற்றி இருக்கிறார்கள். குறை சொல்லுவதைப்பற்றி கேலியாகப் பேசுவது, தெரியாதவர்கள் பேசுவரே தவிர தெரிந்தவர்கள் அல்ல. இன்றைக்கு குறைகளை எல்லோரும் சொல்லு கிறார்கள். இரண்டு பேரும் சொல்லுகிறார்கள். குறைகளைத் தீர்க்கவேண்டும் என்று நம் மனதிலே எண்ணம் இருக்கிறது. ஆனால் முடியாமல் இருப்ப தற்கு வசதிக்குறைவுதான் காரணம். இப்போது இருக்கும் வசதிகளை வைத்துக்கொண்டு எல்லாக் குறைகளையும் தீர்த்து விடமுடியாது. குறை வாக இருந்தாலும் சில குறைகளை தீர்த்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டியது அவசியமாகத் தான் இருக்கிறது. ஆகையால், இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் குறைகள் சொன்னால் அது ஒன்றும் இயற்கை விரோதமாக இல்லாததுமட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் விரோதம் இல்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இன்றைக்கு நம் மாகாணத்தில் இருக்கும் பிரச்னை எப்படி நம்முடைய நாட்டில் இருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பது. காங்கிரஸாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, சீர்திருத்தம் செய்கிறவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களாக இருந்தாலும் சரி, சோஷலிஸ்டாக இருந்தாலும் சரி, எல்லாருடைய ஒரே நோக்கமும் நம் மக்களுடைய வாழ்க் கையை எப்படி உயர்த்துவது என்பது தான். அப்படி உயர்த்தும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது நம் நிலைமையையும் உணர்ந்து கொண்டால் தான் நமக்கு ஆற்றலும் சக்தியும் ஏற்படும். ஏதோ கனவு உலகத்தில் இருந்து கொண்டு ஏதோ வட நாட்டிலே பிடிப்பு இருக்கிறது. அதை விட்டுவிட்டால் பாலும் தேனும் ஓட வைத்து விடலாம் என்கிற பாணியில் நினைத்துக் கொண்டிருப்பதனால் நடக்கக்கூடிய காரியமல்ல. இப்போது நமக்கு இருக் கும் சில குறைபாடுகளை இந்த சபையின் முன் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு உணவு இலாகாவைப் பராமரிக்கும் மந்திரி அவர்கள் பேசும் போது சொன்னார்கள், நம்மிடம் உள்ள அரிசியில் 2½ லட்சம் டன் கேரளா வுக்கு போகிறது என்று. ஆந்திராவிலிருந்து வருஷா வருஷம் வருவது வரவில்லை காரணம் நம்மிடம் வாங்கும் சக்தி இல்லை. நம்மிடத்தில் உள்ள அரிசியையும் கூட கேரளா போட்டி போட்டு வாங்கக் கூடிய நிலையில் இன்று நாம் இருக்கிறோம். பலர் நினைக்கிறார்கள் லாப நோக்கோடு கேர ளாவுக்கு விற்று விடுகிறார்கள் என்று. லாப நோக்கமல்ல. வாங்கும் சக்தி இருந்தால் தான் லாபநோக்கம் ஏற்பட முடியும். இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலே வாங்கும் சக்தி மிகவும் குறைவாக இருக்கிறது. கேர ளாவை எடுத்துக் கொள்வோமானால், கனம் ராமசுவாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள், அங்கே இருக்கும் பெரிய பிரச்னைகளை சமாளிக்கிறார்கள் என்று. நம்மிடையே இருக்கும் கருத்து, கேரளப் பிரதேசம் நம் பிரதேசத்தை விட வறுமை மிகுந்தது என்று. ஆனால் அது உண்மை யல்ல. தலை ஒன்றுக்கு எவ்வளவு வரும்படி என்று கணக்குப் போட்டுப் பார்த்தால், அவர்களுடைய வரும்படி தலைக்கு 311 ரூபாய் என்று நிர்ண யிக்கப்பட்டிருக்கிறது. நம் தமிழ் நாட்டிலே, சென்னை ராஜ்யத்திலே வரு





மானம் தலை ஒன்றுக்கு 257 ரூபாய். நாம் யார் வருமையாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறோமோ அவர்களுடைய வரும்படி 311 ரூபாய். இதில் இருக்கக்கூடிய நிலைமையை சொல்கிறேன். நீர்வளம் அங்கு நல்ல முறையிலே பயன்படுத்தக்கூடிய வகையிலே இருக்கிறது. அங்கு வருஷத் திற்கு 100, 125 அங்குலம் வரை மழை பெய்கிறது. ஆறுகள் பல அங்கே இருக்கின்றன. அவைகள் மூலமாக ஏற்படக்கூடிய வளம் அங்கு இருக் கிறது. அங்கே தான் நல்ல விற்பனைப் பொருள்கள் (Commercial products) நிறைய உற்பத்தியாகின்றன. ரப்பர், மிளகு, தேங்காய், தேயிலை, காபி இவைகளைப்போன்ற பல விளை பொருள்கள் அங்கே உற்பத்தி ஆகின்றன. அதன் காரணத்தால் அங்கே வருவாய் உயர்வாய் இருக்கிறது. (குறுக்கீடு) கம்யூனிஸ்ட் கட்சி இப்போது தான் அங்கு பதவிக்கு வந்தது. முன்பே இருந்த நிலையைப்பற்றி நான் சொல்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி வந்ததால் இன்னும் எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை ; என்ன மாறுதல் ஏற்படுமோ தெரியாது. அதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நான் சொல்வது முன்பே இருந்தது. நமக்கு நிலவளம் அவர்களைக்காட்டிலும் அதிகமாக இருந்தபோதிலும், மற்ற ராஜ்யங்களை விடக்குறைவு. அதற்கு வேண்டிய நீர்வளம் நமக்கு இல்லை. இயற்கைப் பொருள் விஷயத்திலும் இப்போது தான் நெய்வேலியைக் கண்டுபிடித்து இருக்கிறோம். மற்ற வளங்களும் இங்கு குறைவு தான். நெய்வேலியில் இப்போது தான் ஆரம்பவேலைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இவை களையெல்லாம் உணர்ந்து நாம் எல்லோரும் ஆலோசனை செய்து எந்த முறையில் பாடுபட்டால் நல்லது என்று ஒரு முடிவுக்கு வந்து அடுத்த பத்து வருஷ காலங்களுக்கு நன்றாக வேலை செய்தால் தமிழ் நாட்டின் முன் னேற்றத்திற்கு நாம் பாடுபட்டவர்கள் ஆவோம். திராவிட முன்னேற்ற கழகம் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபடுவதாய் சொல்வதால், இந்த என் கருத்துக்களை அவர்கள் முன்பும் வைக்க ஆசைப்படுகிறேன்.

இப்போது வளம் குறைந்த நாட்டை அதிக வளப்படுத்த வேண்டியதாய் இருக்கிறது. அதை எப்படிச் செய்வது ? இரண்டு துறைகள் இருக்கின்றன. ஒன்று விவசாயத்துறை. இரண்டாவது தொழில் துறை. இந்த இரண்டு துறைகளிலும் நல்ல முன்னேற்றம், கணிசமான முன்னேற்றம் கண்டால்தான் நாம் ஓரளவு முன்னேற்றம் அடைந்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். விவசாயத்துறையில் எடுத்துக் கொள்ளப் பட்ட முயற்சிகளைப்பற்றி என்னுடைய பட்ஜெட் உரையில் சொல்லியிருக்கி றேன். இதற்கு மேலாக விவசாயத் துறையைப்பற்றி டிமாண்டை விவா திக்கும்போது, அந்த இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சர் அதை எடுத்துச் சொல்லுவார். இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய நீர்வளத்தை நல்ல முறையிலே பயன் படுத்திக்கொண்டு வருகிறோம் என்பதில் சந்தேகமில்லை. ரொம்பவும் குறைந்த அளவு தண்ணீர் தான் சமுத்திரத்தில் போய் விழு கிறது. உலகத்திலேயே எடுத்துக்கொண்டால் நாம் வீணாக்காமல் தடுத்து உபயோகிப்பதைப்போல் வேறு எந்த நாட்டிலும் செய்யவில்லை என்று உறுதியாகக்கூறலாம். அந்த அளவுக்கு நம் முன்னோர்களே ஏற்பாடு செய்து இருந்தார்கள். நாம் இப்போது இன்னும் அதிகமாக உபயோகித்து வருகிறோம். இதில் இன்னும் ஒன்றை யோசிக்க வேண்டும். வேறு பாகங்களிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவதைவிட்டு நம்மிடத்தில் உள்ள தண்ணீரை நல்ல முறையிலே உபயோகிக்கிறோமா என்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டிய அவசியம். ஆற்றுத்தண்ணீரை வைத்து நெல் உற்பத்தி செய்கிறோம். இதில் தண்ணீரை, பரம்பரையாக, பழங்காலத்தில் இருந்து எப்படி உபயோகித்தோமோ அப்படியே இன்றும் செய்து வருகி றோம். இதில் ஏதாவது மாறுதல் செய்வது என்றால், மூட பழக்க வழக்க ங்களை அகற்றுவதில் எப்படி எதிர்ப்பு ஏற்படுகிறதோ அதே மாதிரி இதி லும் எதிர்ப்பு ஏற்படுகிறது. நெல் வேளாண்மைக்கு அவ்வளவு தண்ணீர் அவசியம் இல்லை. குறைந்த தண்ணீர் வைத்து வேளாண்மை செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்து சொல்கிறார்கள். தஞ்சாவூரிலே லக்ஷக்கணக்கான ஏக்கருக்கு தண்ணீர் பாய்கிறது. இப்போது பாயும் தண்ணீரில் 20 அல்லது 15 சத விகிதம் குறைவுபடுத்தி, பலனும் குறையாமல், தண்ணீரை மிச்சப் படுத்தி, இன்னும் 2 அல்லது 3 லட்சம் ஏகாராக்களுக்குத் தண்ணீர்

பாய்ச்ச முடியும். இந்த விஷயத்தில் ஆராய்ச்சி செய்து, நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் முன் வந்து இருக்கிறார்கள் என்பதை உங்கள் முன்னால் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

அங்கத்தினர்கள் சிறிய நீர்பாசனத் திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதை ஸ்ரீ அண்ணாத்துரையும் எடுத்துச் சொன்னார்கள். இதை இன்றைக்கு அல்ல, ஆறு வருஷகாலமாக இதற்கு முக்கிய இடம் கொடுத்து பல காரியங்கள் செய்து வருகிறோம். இதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. ஒரு இடத்திலே அணைக்கட்டு கட்டி தண்ணீரைத் தடுத்து உபயோகப்படுத்துவது நல்லதா அல்லது பரவலாக பல இடங்களில் சிறிய அணைக்கட்டுகள் கட்டுவது நல்லதா என்பதை யோசிக்கவேண்டும். ஒரு ஆற்றின் தண்ணீர் மற்றொரு ஆற்றில் விழுந்து, அந்த தண்ணீர் உபயோகப்படுத்தப்பட்டால் மேல் ஆற்றில் அணைகட்டுவதால் என்ன பிரயோஜனம். தண்ணீர் நல்ல முறையிலே உபயோகிக்கப்படுகிறதா இல்லையா என்பதை, ஆறு சமுத்திரத்தில் விழும் இடத்தில் எவ்வளவு தண்ணீர் வீணாகிறது என்று பார்த்தால்தான் தெரியும். ஆகையால் பார்த்த இடங்களில் எல்லாம் அணைகள் கட்டவேண்டுமானால் அதற்கு அதிகம் செலவாகும். ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2,000வீதம் செலவழித்தால் அணைகள் மூலம் சில ஏக்கர்களுக்கு பயன் ஏற்படும். இம்மாதிரி செலவழிப்பது நல்லதா ? அல்லது அதிகம் செலவில்லாமல் கிணறுகள் வெட்டி 2, 3 ஏக்கர்களுக்கு தண்ணீர் கிடைக்கும்படி செய்வது நல்லதா ? இதைப் பரவலாகச் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தால், அணைகள் அவசியம் இல்லை. இதுதான் நாம் இப்போது யோசிக்கவேண்டிய விஷயம்.

பல அங்கத்தினர்கள் சொன்னார்கள் "இங்கு ஆறு ஓடுகிறது, அங்கு ஓடை ஓடுகிறது. அவைகளில் ஏன் அணை போடக்கூடாது, தண்ணீரைத் தேக்கக்கூடாது" என்று. இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறோம். பெரிய அளவில் செலவு செய்து, அணைகள் கட்டி தண்ணீரைத் திருப்புவதில் பிரயோஜனம் இல்லை. பரவலாக, குறைந்த செலவில் திட்டங்கள் போடுவதுதான் உபயோகப்படும். அந்த முறையிலே நீர்பாசன திட்டங்கள் சிறிய அளவில் எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறோம். சென்ற ஆண்டிலே இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஒரு கோடி ரூபாய். அது இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது, என்று சொன்னார்கள். காரணம் என்ன ? எஞ்சினியர்கள் சென்ற வருஷம் போதிய திட்டங்கள் இல்லை என்று சொன்னார்கள். ஒதுக்கிய அவ்வளவு பணத்தையும் அதனால் செலவு செய்ய முடியாது, செலவு செய்வது ரொம்பவும் கஷ்டம் என்றும் சொன்னார்கள். நீங்கள் செலவு செய்ய முயற்சி செய்யுங்கள் என்றும் சொன்னோம். எவ்வளவு முயற்சி செய்தும் ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயில் 35, 40 லக்ஷம் தான் செலவு செய்ய முடிந்தது. இந்த வருஷத்தில், அதுவும் பற்றாக்குறை இருக்கும் காலத்தில் செலவை அதிகப்படியாக காட்டுவதில் பிரயோஜனம் இல்லை. சென்ற வருஷ அளவுக்கு இந்த வருஷம் இந்த இனத்திற்கு பணம் ஒதுக்காவிட்டாலும் ஒதுக்கப்பட்டதைவிட அதிகம் செலவழித்தால், எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணமும் ஒதுக்கத் தயார். ஆகையால் இஞ்சினியர்களுக்கு மேலும் மேலும் முயற்சி நடந்துகொண்டே போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சென்னை ராஜ்யத்திற்கு மட்டும் சென்ற 3 வருஷத்தில் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறோம். இந்த சிறிய அளவு திட்டங்களுக்காக. அத்துடன் கிணறு வெட்டும் வேலையும், மற்ற வேலைகளும் நடந்து வருகின்றன. இத்துடன் நல்ல விதைகளை வைத்துக்கொண்டு விவசாயத்துறையிலே முன்னேற்றம் காணவேண்டியது அவசியம்.

(The hon. Member, Sri N. Palanisami rose )

**MR. SPEAKER** : The Hon. Minister is not yielding. How can I disturb him.





**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்போது 136 விதைப் பண்ணைகள் ஏற்படுத்தபடும். அதற்கு கூடியவரை சல்லிசாக கிடைக்கும் இடங்களில் நிலங்களை விலைக்கு வாங்குவது என்றும், மற்ற இடங்களில் குத்தகைக்கு எடுத்துக் கொள்வது என்றும் உத்தேசம். அதுவும் ஒரு கட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கு வேண்டிய சட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதில் நியாயவாரச் சட்ட அடிப்படையில் அதிகாரம் எடுத்துக்கொண்டுள்ளோம்.

அதற்கடுத்தப்படியாக முக்கியமாக இருப்பது தொழில் துறை. நாம் இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிப் பேசுகிறோம். இன்று மக்கள் பெரிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகையால் வேலையில்லாதவர்களுக்கு விவசாயத் துறையில் வேலை கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆகவே தொழில் துறையை விரிவுபடுத்துவதன் மூலம் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். விவசாயத் துறையில் முன்னேற்றம் காணுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க முடியுமே தவிர வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியாது. ஆகையால் தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாக இருக்கிறது. தொழில் துறையில் பல பகுதிகள் இருக்கின்றன. Basic Industries என்று சொல்லப்படும் பெரும் தொழில்கள் இருக்கின்றன. எவ்வளவுக் கெவ்வளவு பெரும் தொழில்கள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு மக்களுக்கும் பரவலாகப் பல வசதிகளை அளிக்கமுடியும். அப்பேற்பட்ட பெரும் தொழில்கள் எதை அடிப்படையாகக்கொண்டு ஏற்பாடு செய்யப்படுகின்றன என்பது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். இரும்பு போன்ற உலோகங்களை அடிப்படையாகக்கொண்டுதான் கனரகத் தொழில்களை ஏற்படுத்த முடியும். ஆகவே இன்றைக்கு நமது ராஜ்யத்திலுள்ள முக்கியமான பிரச்னை இரும்பு உற்பத்தி செய்ய வேண்டியது ஆகும். நிறைய இரும்பு உற்பத்தி செய்தால் தான் பெரும் தொழில்களை ஆரம்பிக்க முடியும். சேலத்தில் இரும்புக் கனி இருப்பது நமக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அதைக் கொண்டு பெரிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னபோது, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காலத்தில் இங்கே நிலக்கரிக் கனி இல்லாததால் அதை ஆரம்பிக்க முடியாது என்றும், வடக்கேயிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவது சாத்தியமல்ல என்றும் ஆட்சேபனை கூறப்பட்டு வந்தது. ஆனால், இப்போது இங்கே நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும், சென்ற நவம்பர் மாதம் நமது தேசப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள் என்பதையும் அங்கத்தினர்கள் எல்லோரும் அறிந்திருப்பார்கள். நேருஜீ அவர்கள் அந்தத் திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது, "இந்தப் பகுதிக்கு இருக்கும் பெரும் குறை இந்தத் திட்டத்தின் மூலம் தீரும்" என்று கூறினார்கள். ஆகவே இங்கே உள்ள குறை அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அந்தத் குறையைத் தீர்ப்பதற்கு வழி வகுத்துவருகிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் தொழில்களை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வளவுதான்.

ஆதலால், இங்கே பெரிய தொழில்கள் ஆரம்பிக்கப்படாததற்குக் காரணம் 'வடக்குத் தான் வாழ வேண்டும், தெற்குத் தேய வேண்டும்' என்று மத்திய அரசாங்கத்தார் நினைக்கிறார்கள்' என்பது அல்ல ; 'அங்குள்ளவர்களுக்குத் தென்னாட்டைப்பற்றி அக்கறை இல்லை' என்பது அல்ல ; 'அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளா விட்டாலும், நாங்களும் அக்கறை எடுத்துக்கொள்ளும் சக்தி உடையவர்களாக இல்லை' என்பதும் அல்ல ; இப்போதுள்ள சூழ்நிலையில் காலதாமதம் ஆகிறது என்பதைத் தவிர வேறு காரணம் கிடையாது.

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 70 கோடி ரூபாய் செலவாகும் என்பது நமக்குத் தெரிகிறது. இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அன்னிய நாட்டு இயந்திரங்களும் அன்னிய நாட்டு நிபுணர்களுடைய உதவியும் தேவையாக இருக்கின்றன. அந்த

இயந்திரங்களை நாமே உற்பத்தி செய்துகொள்ள முடியாது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் உருக்குத் தொழிற்சாலையையும் இரும்புத் தொழிற்சாலையையும் நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கும் அன்னிய நாட்டு மூலதனம் வேண்டும். ஆகவே இப்போதுள்ள தொழில் வளர்ச்சி இன்னும் அதிகமாகப் பெருகுவதற்கும் அன்னிய நாட்டு மூலதனத்தை ஓரளவு பெறத்தான் வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். நாம் நோய்வாய்ப்பட்டு விட்டதாக வைத்துக்கொள்வோம். அப்போது நம்மிடம் உள்ள இரத்தம் மிகவும் குறைந்துபோய் விடுகிறது என்றும் வைத்துக்கொள்வோம். இரத்தம் குறைந்துபோய் விட்டால் வேறொரு மனிதனின் இரத்தத்தை எடுத்து நோயாளிக்குக் கொடுக்கிறார்கள். அதன் மூலமாகப் புதிதாகக் கொஞ்சம் பலம் நோயாளிக்கு ஏற்பட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சக்தி நோயாளிக்கு உண்டாகிறது. அதற்குப் பிறகு நமது இரத்தத்தின் மூலமாகவே, வேலை செய்வதற்கு வேண்டிய சக்தி கிடைக்கிறது. ' பிளட் ட்ரான்ஸ்மிஷன் ' போலவே அன்னிய நாட்டு மூலதனம் நமக்கு இப்போது தேவையாக இருக்கிறது ; அது வர வேண்டியிருக்கிறது. அது வரவில்லை என்றால், இன்னும் இளைத்துப் போய், நோயைத் தீர்ப்பது ரொம்பவும் கஷ்டமாகி விடுகிறது.

அன்னிய நாட்டு நிபுணர்களையும், அன்னிய நாட்டு இயந்திரங்களையும் எந்த அடிப்படையில் நாம் பெற முடியும் என்பதைப்பற்றி எதிர்கட்சியிலுள்ள சில அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்னையில்தான் அவர்களுடைய பிரிக்கும் கொள்கையும் நம்முடைய ஒன்றாகக் கூடியிருக்கும் கொள்கையும் வருகின்றன. இன்று அன்னிய நாட்டு மூலதனம் வெறுமனே கிடைப்பதில்லை. உலகத்தில் நமக்கு மதிப்பும் பலமும் இருக்கும் வரையில்தான் அன்னிய நாட்டு மூலதனம் கிடைக்கும். " முக்கியமாகப் பெரிய கன ரகத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதற்கு அன்னிய மூலதனம் வேண்டுமென்றும் நாம் நினைத்தால், இன்றுள்ள சூழ்நிலையில் இந்தியாவுடன் நாம் ஒன்றாக இருந்தால் அன்னிய மூலதனம் நமக்கு சுபலமாகக்கிடைக்குமா, அல்லது நாம் மட்டும் தனி தேசமாக இருந்தால் கிடைக்குமா ? " என்று கேட்க விரும்புகிறேன். இதை எதிர் கட்சி அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். (இந்த சமயத்தில் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி குறுக்கிட்டார்) சிலோனில் தொழிற்சாலைகள் நடப்பது எனக்குத் தெரியும். அங்கே இருப்பதை நேரில் சென்று பார்த்துவிட்டு வர வேண்டும் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். சிலோனைப் பற்றிப் பேசும் அங்கத்தினர்கள், அங்கே போடப்பட்டுள்ள திட்டங்களை நாம் போட்டிருக்கும் திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே எவ்வளவு பெரிய கனரகத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அவைகளை அறிந்த பிறகு புள்ளிவிவரங்களுடன் சிலோனைப்பற்றிப் பேசினால் நானும் பேசுவதற்குத் தயாராயிருக்கிறேன். சிறு உதவிகளுக்கும் அன்னிய நாட்டார் எவ்வளவு நிபந்தனைகள் போடுகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே நாம் நமது ராஜ்யம் தொழில் துறையில் முன்னேற வேண்டுமென்று நினைத்தால்....(இந்த சமயத்தில் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி குறுக்கிட்டார்) கனம் அங்கத்தினரிடமிருந்து பதிலை நான் உடனே கேட்கவில்லை. அவர் நன்றாக யோசித்துவிட்டு பதில் சொல்லட்டும். அவசரமாக பதில் சொன்னால் அது யோசனை செய்து சொல்லப்பட்ட கருத்தாக இருக்காது. ஆகவே, நன்றாக யோசித்த பிறகு பதில் சொல்ல வேண்டும் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவுடன் நாம் ஒன்றாக இருந்தால்தான், இந்தப் பெரிய தேசத்திற்குக் கிடைக்கக்கூடிய சௌகரியங்களை நாமும் பெறமுடியும். அந்த சௌகரியங்களை வைத்துக் கொண்டுதான் நாம் முன்னேற்றம் அடையமுடியும்.

இன்னொரு விஷயத்தையும் எதிர் கட்சி அங்கத்தினர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றுள்ள நிலைமையில் நமக்குத் தேவையாக இருக்கும் அன்னிய நாட்டு உதவியை முழுவதும் சுலபமாகப் பெற்றுவிட முடியாது. நாம் கடனாகவும் உதவி பெறலாம்;



V211,31 N57
N57.2.8



அந்தக் கடன்களுக்கு பதிலாக நம்முடைய சாமான்களைக் கொடுக்கலாம். அதற்கு நம்மிடம் சாமான்கள் ஏராளமாக இருக்க வேண்டும். இன்று நம்மிடம் பல சாமான்களில் மிகவும் பற்றாக்குறை இருக்கிறது. இன்று தமிழ் நாட்டிலுள்ள சாமான்களை மட்டும் வெளி நாடுகளுக்கு அனுப்பி, தேவையான அன்னிய மூலதனங்களையும் அன்னிய நிபுணர்களின் உதவியையும் பெறுவது என்பது, நான் கணக்குப் போட்டுப் பார்த்த வரையில், முடியாது என்று தோன்றுகிறது. மற்ற அறிஞர்கள் கணக்குப்போட்டுப் பார்த்தால் முடியுமோ என்னமோ தெரியாது.

இப்போதுள்ள நிலைமையில் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று பேச வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்று நாம் எல்லோரும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று நினைப்பதால், தேசத்துடன் நாம் ஒன்றாக இருந்து எவ்வளவு அன்னிய மூலதனம் பெறமுடியுமோ அவ்வளவையும் பெற்று நாட்டை முன்னேற்றமடையச் செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஆகையால், இன்று நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்னும், எவ்வளவுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுக்கு மக்களுடைய பலம் இருக்கிறதென்றும், மக்கள் தங்களிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் சொன்னாலும், சமீபத்தில் நாட்டின் பிரிவினை ஏற்படப் போவதில்லை. இன்று நாம் எல்லோரும் நமது ராஜ்யம் முன்னேற வேண்டும் என்று பேசுகிறோம். நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். அப்படி நாம் பாடுபடும் போது " முன்னேற்றத் திட்டங்களில் மத்திய அரசாங்கத்தார் நமக்குப் பாகுபாடு செய்துவிட்டார்கள். அவர்கள் நம்மை வேறுவிதமாகக் கருதுகிறார்கள். நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கவேண்டிய அளவு முன்னேற்றம் இதனால் தான் ஏற்படவில்லை." என்று உணர்வோமானால், அப்போது நாம் எல்லோரும் சேர்ந்து நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற இயக்கத்தைக் கிளப்பலாம். அந்த இயக்கத்தை அனாவசியமாக இன்றைக்குக் கிளப்பி ராஜ்யத்தில் குழப்பத்தை உண்டுபண்ணும் காரணத்தினால், ராஜ்யத்திலுள்ள சக்தி வீணாக்கப்படுகிறது. ஆகவே, இன்றுள்ள சூழ்நிலையில் நமது வசதிகளைப் பெருக்கிக்கொண்டு முன்னேற்றமடைவதற்காக நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டும் என்று மிகவும் பணிவுடனும் வணக்கத்துடனும் என்னுடைய சகோதரர்கள் அனைவரையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அது தான் நாம் இன்று செய்யவேண்டிய முக்கிய பணி ஆகும். அதன் மூலம்தான் தமிழ்நாடு முன்னேற்றமடைய வேண்டும். ஆகவே நாம் எல்லோரும் ஒன்றுபட்ட சக்தியாக இருக்க வேண்டும். இதற்கு, நம்மிடையே உள்ள கொள்கை முறண்பாடுகள் நீங்கி truce ஏற்படவேண்டும். தற்காலீகமாகவாவது நம்மிடையேயுள்ள கொள்கை முறண்பாடுகளை ஒத்திவைக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய சக்தியையெல்லாம் திரட்டி நமது தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒன்று சேர்ந்து பாடுப[illegible] " தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு நாங்கள்தான் அக்க[illegible]த் கொள்கிறோம் " என்று சொல்பவர்கள் இந்த விஷயத்[illegible] நன்[illegible] கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ([illegible]). இந்தப் பிரச்னையைப்பற்றி அவர்கள் நன்றாக யோசிக்கவேண்டு[illegible] (குறுக்கீடு) அவசரப்பட்டு பதில் சொல்ல வேண்டாம் என்று அ[illegible]க் கேட்டுக் கொள்கிறேன்.

64764.

அதற்கடுத்தபடியாக, நமது ராஜ்யத்தில் தொழில் வளம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். தொழில் வளத்தை ஏற்படுத்துவதற்காக நாம் நெய்வேலித் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதற்கடுத்தபடியாக இரும்புத் தொழிற்சாலை வரும். (குறுக்கீடு) இரு[illegible]புத் [illegible]சாலை வந்துதான் தீரும். இரும்புத் தொழிற்சாலை இ[illegible] வராது என்று சிலர் எவ்வளவுதான் நினைத்துக் கொண்டிருந்தாலும் [illegible] தான் போகிறது. என்னுடைய பட்ஜெட் உரையில் ' வரலாம் ', ' எதி[illegible] பார்க்கலாம் ' என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ' வரும் ' என்று

குறிப்பிடவில்லை என்று சில அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் விஷயத்தில், "வடக்கு தடையாக இருப்பதால் நாங்கள் வடக்குக்கு 'ஆமாம்' போடுகிறோம்", என்பதில்லை. சேலத்தில் கிடைக்கும் இரும்பு எப்படிப்பட்டது, அதைக் கொண்டு இங்கேயுள்ள வசதிகளுடன் எப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதுபற்றி ஜாம்ஷெட்பூரில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்த ஆராய்ச்சிகள் நமக்குச் சாதகமாக வெற்றியடைய வேண்டும். ஆராய்ச்சிகள் வெற்றியானால்தான் இங்கே இரும்புத் தொழிற்சாலையை அமைக்கலாம். ஆகையால்தான் "லாம்" போட வேண்டியிருக்கிறது. அந்த ஆராய்ச்சியிலே நமக்குப் பாதகமாக முடிவு ஏற்பட்டுவிடுமானால் வேறு என்ன செய்வது என்பதும் பின்னர் யோசிக்கவேண்டியுமிருக்கிறது. செயல்படுகிற தொழில்களை வந்துவிட்டது என்று சொல்லிவிட்டேன். புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழில்களைப் பற்றி ஆராய்ச்சி இன்னமும் நடந்து கொண்டிருப்பதனால் "வரலாம்" எனச் சொல்லியிருக்கிறேன். இந்த தேசத்தின் அபிவிருத்திக்காகப் பல பரிசோதனைகள் ஆராய்ச்சிக் கூடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. வடநாட்டில் ஆரம்பிக்கப்படவேண்டிய தொழில்களுக்கு தென்னாட்டிலுள்ள காரைக்குடி எலெக்ட்ரானிக் ஆராய்ச்சி கூடத்தில் பல பரிசோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். எல்லாப் பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் நடத்துவது என்பது முடியாத காரியம். ஆகையால் பரவலாக இந்த ஆராய்ச்சிக்கூடங்கள் அமைந்திருக்கின்றன. இப்போது சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றிய பரிசோதனை ஜாம்ஷெட்பூரில் நடக்கிறது. ஜாம்ஷெட்பூரில் அந்த ஆராய்ச்சிக்கூடம் இல்லை என்றால், வடநாட்டைவிட்டு வெளிநாட்டின் உதவியை நாடி நிற்கவேண்டி இருந்திருக்கும். அதனால் காலதாமதம் அதிகமாகத்தான் இருந்திருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நாடு பலவகையிலும் முன்னேறவேண்டுமென்று விரும்புகிறவர்கள் கொஞ்சம் ஆழ்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். "நம்மிடமுள்ள மூலப்பொருள்கள் என்ன? அவை எந்த ரகத்தைச் சேர்ந்தவை? அவைகளிலிருந்து எப்படிப்பட்ட புதுப்பொருள்களை உண்டாக்கலாம்? அதற்கு வேண்டிய வசதிகள் நம்மிடம் என்ன இருக்கின்றன?" என்பதை எல்லாம் யோசித்துப் பார்க்காமல் எல்லா தொழிற்சாலைகளும் வரும் வரும் என்று சொல்ல வேண்டுமானால் அது வெறும் குருட்டுத்தனமாகச் சொல்லலாமே தவிர அப்படிச் சொல்வதில் அர்த்தம் இருக்காது.

"வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது" என்றெல்லாம் எடுப்பாகப் பேசுவது பொது மேடையில் எடுபடலாமே தவிர சட்டசபையில் எடுக்காது என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஸ்ரீ எ. கோவிந்தசாமி : இங்கும் எடுக்கும்) (கைதட்டல்) வெறும் கைதட்டலினால் அந்தப் பக்கத்தில் இருந்தே எடுபடலாம். உங்கள் பேச்சுக்கள் எங்களுக்கு எடுக்கும்படியாக இருக்க வேண்டும். நீங்கள் சொல்வது எங்களுக்கு எடுத்தால்தான் நாட்டுக்குப் பயன்படுமே தவிர உங்களுக்குள்ளேயே எடுபட்டால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் வெறும் கைதட்டலுக்காகப் பேசுவதில் பயன் இல்லை. ஆளும் கட்சியினருக்கு உதவியாகப் பேசினால்தான் பல காரியங்களைச் செய்வதற்கு அவர்கள் பேச்சுப் பயன்படும். இல்லாவிட்டால் பைசாக் கூடப் பிரயோஜனப்படாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைத் தெரிந்துகொண்டு எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு பெரிய தொழில்கள் ஏற்படவேண்டுமென்று நாம் சொல்லும் போது அந்தப் பெரிய தொழில்களினால் மட்டும் மக்கள் எல்லோருக்கும் வேலை கிடைத்து விடாது. அதுவும் முக்கியமாகப் பெரிய இயந்திரங்கள் மூலம் நடைபெறும் தொழிற்சாலையில் உற்பத்தி அதிகம் இருக்கும். ஆனால் அங்கே வேலை செய்கின்ற ஆட்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். ஆகையால் தான் பெரிய தொழில்களுக்கு அடுத்தபடியாக நாட்டில் சிறு தொழில்கள் அதிகம் வளரவேண்டும். அதற்காகவே





ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரி, காட்டேஜ் இண்டஸ்டிரி, மீடியம் இண்டஸ்டிரி என்பதாகப் பலவகையில் அவை வளர்ச்சி அடைவதற்குத் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறோம். அதிலேயுள்ள திட்டங்கள் என்ன என்பதைப் பற்றி உங்கள் முன்னிலையில் வைத்திருக்கிறோம். அந்தத் தொழிற்சாலைகளுக்கான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர்களை எல்லாம் அங்கே கொண்டுபோய் காட்டும்படியாக கனம் தொழில் மந்திரி அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினர்களுக்கு முன்பே இன்விடேஷன் அனுப்பியாகிவிட்டது.) அங்கத்தினர்கள் எல்லோரும் உண்மையிலேயே அங்கே போய்ப் பார்ப்பார்களேயானால் அவர்கள் மனதிலுள்ள அவநம்பிக்கை போகும். தைரியம் வளரும். (ஸ்ரீ கே. அன்பழகன் : அகில இந்தியாவிலும் இருப்பதைக் காட்டுங்கள்.) அகில இந்தியாவிலும் இருப்பதைப் பாருங்கள். இதர ராஜ்யங்களுக்கு நம்முடைய ராஜ்யத்தில் இருப்பது குறைவு இல்லை. இப்போது நாம் எதைப்பார்த்தாலும் அவநம்பிக்கை கொண்டிருக்கிறோம். வடநாடு வாழ்கிறது, நாம் சக்தியற்றவர்கள், நாம் தேய்ந்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் நினைந்து மனம் சோர்வு அடைந்து கொண்டிருக்கிறோம். அந்தத் தொழில்களை எல்லாம் பார்த்தால் அங்கத்தினர்களுடைய மனதிலுள்ள அவநம்பிக்கை, சோர்வு முதலியன எல்லாம் போய்விடும். புதிய நம்பிக்கையாகிய சக்தி வளரும் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. இந்தச் சிறு தொழில்களின் மூலமாக நாம் அதிகமாக முன்னேற்றம் அடையவேண்டும். இவைகளை எல்லாம் நிறைவேற்றும் பணி அரசாங்கத்தின் முன்னிலையில் இருக்கிறது. அதற்குப் பணம் வேண்டும். வரி போடவேண்டும். வரிப்பணத்தைக் கொண்டு அவற்றை எல்லாம் நிறைவேற்றியாக வேண்டும். ஆனால் எவ்வளவு திறமையாகச் செய்ய முடியும் என்பது அவ்வப்போது இருக்கக் கூடிய அரசாங்கத்தைப் பொறுத்தது. இன்றைக்கு மக்கள் எங்கள் பேரில் நம்பிக்கை வைத்து இந்த அரசாங்கத்தை அமைத்திருக்கிறார்கள். ஆகையால் எங்களுக்கு இருக்கக் கூடிய எல்லாச் சக்தியையும் பயன்படுத்தி எல்லாவகையிலும் முன்னேற்றம் ஏற்படும்படியாகச் செய்வோம். எங்கள் சக்தி வீணாகப் போகாதவாறு எவ்வளவுக்கு எவ்வளவு எதிர்க்கட்சிக்காரர்கள் எங்களுடன் ஒத்துழைக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அவ்வேலைகள் நன்றாக நடைபெறும். ஸ்ரீ சின்னதுரை அவர்கள் பேசும்போது மிகவும் வேகமாக, அழுத்தமாகப் பேசினார்கள். "பழைய அதிகாரிகள் தானே இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுடைய மனோபாவத்தில் என்ன மாறுதல் இருக்கப் போகிறது? நம்முடைய திட்டங்களை எல்லாம் அவர்கள் எவ்வாறு பயன் உள்ள வகையில் நிறைவேற்றப்போகிறார்கள்" என்று சொன்னார். நிர்வாக அநுபவம் இல்லாத காரணத்தினால் அவர்கள் அப்படிப் பேசினார்கள் என்று நினைக்கிறேன். சுதந்திரம் வருவதற்கு முன்பாக பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பணியாற்றிய அதிகாரிகளேதான் இப்போதும் இருக்கிறார்கள். சுதந்திரம் வந்துவிட்டது. சுதந்திரம் வந்தபிறகு அவர்களுடைய மனோபாவமும் மாறி சுதந்திர சர்க்கார் செய்கின்ற பணிகளுக்கு எல்லாம் அவர்கள் எத்தனை துணைபுரிந்திருக்கிறார்கள் என்பது நிர்வாக கேசியம் தெரிந்தவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். மனோபாவம் இன்னமும் மாறாத அதிகாரிகள் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம். எல்லா இடங்களிலும்தான் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியில் இல்லையா? சோஷலிஸ்டுக் கட்சியில் இல்லையா? இன்னும் பழைய பல்லவியிலேயே பாடிக்கொண்டிருக்கிறவர்கள் இந்தச் சட்டசபையில்தான் இல்லையா? பொதுவாக எங்கும் அப்படிப்பட்ட மனோபாவம் உடைய மக்கள் இருப்பது இயற்கை. அரசாங்க நிர்வாகத்திலும் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம். ஆனால் சட்டசபை முன்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். தங்களுடைய முழுத் திறமையையும் உபயோகித்து, ஆற்றலை உபயோகித்து, நீண்டகால அநுபவத்தை உபயோகித்து, அறிவை உபயோகித்து சுதந்திர சர்க்காரின் வேலைகளில் எல்லாம் மனப்பூர்வமாக ஒத்துழைக்கின்ற அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன். பலவித திட்டங்களைப் போடுவது அரசாங்கம், அந்தத் திட்டங்களுக்கு ஏற்ப அவர்கள் முழுமூச்சுடன் சேவை செய்து வருகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்று சோஷலிஸ சமுதாயத்தை

அமைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கிறது என்றால், அதை மற்ற கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் அந்த லட்சியத்தை நிறைவேற்ற அதிகாரிகள் முழுமூச்சுடன் வேலை செய்கிறார்கள். இதை விரும்பாதவர்கள் எல்லாக் கட்சிகளிலும் ஒருசிலர் இருக்கலாம். அதிகாரிகளும் அப்படியே இருக்கலாம். இதைக் குறை யாகப் பேசக்கூடாது.

அதற்கு அடுத்தபடியாக ஆடிடர்-ஜெனரல், அக்கவுண்டெண்ட்-ஜெனரல் முதலியவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் எங்களுக்கும் தெரியாது, எங்களை யும் மீறி நடந்துவிடுகின்ற தவறுகளை மாத்திரம்தான் சுட்டிக் காட்டு கிறார்கள். கோடிக்கணக்கான திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் நடந்துவிட்ட தவறுதல்களை அவர்கள் சுட்டிக்காட்டுவதை வைத்துக்கொண்டு "எங்கே பார்த்தாலும் லஞ்சம்; லஞ்சம் இல்லாத இடம் எங்கே" என்று பேசுவது சரியாகாது. இங்கும் லஞ்சம்தான் என்று சொல்லாது விட்டுவிட்டார்கள். அப்படிச் சொல்வத னாலே என்ன பிரயோஜனம் ஏற்படப்போகிறது என்று கேட்க விரும்பு கிறேன். இதுவரையிலும் லஞ்சம் வாங்காமல் உழைகின்றவர்களுக்கும் கூட "எங்கே பார்த்தாலும் லஞ்சம்தான். நாமும் ஏன் வாங்கக் கூடாது?" என்று நினைக்கத்தான் தோன்றும். எந்த இடத்தில் லஞ்சம் வாங்கப்பட்டது என்று குறிப்பாகச் சொன்னால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள உதவியாக இருக்கும். அப்படியில்லாமல் பொதுவாக எங்கும் லஞ்சம்தான் என்று பேசுவது லஞ்சம் வாங்காதவர்களையும் வாங்க வைக்கத் தூண்டும். கொஞ்சநஞ்சம் பயந்து கொண்டு வாங்குகிற வர்களுக்கும் "எங்கும் லஞ்சம்தான், இதில் என்னடா இருக்கிறது?" என்று தைரியமாக மேலும் வாங்கத்தான் தூண்டும். இந்தவகையில் தான் ஸ்ரீ சின்னதுரை அவர்களுடைய பிரசங்கம் அமைந்திருந்தது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகையால் லஞ்சத்தை ஒழிப்பது என்பது சமுதாயத்தைப் பொறுத்து இருக்கிறது. சமுதாயத்தில் இருக்கிறவர்கள் தம்முடைய காரியத்தை நிறை வேற்றிக் கொள்ளப் பணம் எதற்காகக் கொடுப்பது என்று எண்ண ஆரம்பித்துவிட்டார்கள் என்றால் உத்தியோகஸ்தர்களுக்கும் பணம் கேட்கக் கூடாது என்கிற பயம் வந்துவிடும். அவரவர்கள் அவரவர்களுடைய கடமையைச் செய்வார்கள். இதைவிட்டுவிட்டு லஞ்சம் வாங்குவதை ஒழிக்க லஞ்சம் வாங்கினார்கள் என்று சொன்னால் போதும், அவர்களை வேலையில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்று சொன்னால் இது நடக்கக் கூடிய காரியமா? இப்போது லஞ்சம் வாங்கப்பட்டதாகப் புகார் வந்தால் உடனே அதைப்பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்கிறோம். விசாரணையின் முடிவில் லஞ்சம் வாங்கியதாகவே நிரூபிக்கப்பட்டு அவர்களை வேலையில் இருந்து நீக்கினாலும் விசாரணை ஒழுங்காக நடந்ததா நடக்கவில்லையா என்பதற்கு அவர்களுக்குக் கோர்ட்டுக்குப் போகவும் அனுமதி அளிக்கப்படுகிறது. இவ் வாறு செய்யாமல் ஒரு பத்து பேர்கள் லஞ்சம் வாங்கியதாகப் புகார் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே அவர்களை வேலையை விட்டு நீக்குவது என்றால் எந்த அதிகாரியாலும் வேலை செய்ய முடியாது. அந்த அதிகாரியைப் பிடிக்காதவர்கள் உடனே லஞ்சம் வாங்கியதாகப் புகார் செய்வார்கள். இந்தமாதிரியான பயத்திற்கு உள்ளாகி அதிகாரிகள் சரிவரப் பணி செய்ய முடியாத நிலைமை உண்டாகக் கூடாது என்பதற் காகத்தான் இத்தனை உரிமைகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இதைவிடத் தீவிரமாக லஞ்சத்தை ஒழிக்க வேறு என்ன வழி இருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் யோசனை சொன்னால் அதையும் பரிசீலிக்க நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையினால் இன்றைக்கு அதிகார வர்க்கம் ஏதோ தடையாக இருக் கிறது என்று நினைப்பார்களேயானால் அது தவறு. அது நமது திறமை குறைவினால் இருக்கலாம். அதற்கு அதிகார வர்க்கத்தை குறை கூறுவது சரியல்ல. நான் இதைச் சொல்லும்போது நான் ஆபீஸர்களுக்காக வக்கா லத்து வாங்கிப் பேசுகிறேன் என்று யாரும் நினைக்கக்கூடாது. யார் தவறு செய்தாலும் அதை தைரியமாக எடுத்துச் சொல்லும் தைரியம் எனக்கு





இருக்கிறது. அதற்குள்ள சக்தி என்னிடம் இருக்கிறது. அந்த மனப்பான் மையும் என்னிடம் இருக்கிறது. ஆகவே யாருக்காக வேண்டியும், அவரது மனது நொந்து போகக்கூடாது என்று அவருக்கு ஆறுதல் சொல்லக்கூடிய முறையில் பேசுகிறவன் நான் அல்ல என்று சின்னதுரை அவர்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன். அனுபவபூர்வமான, நடக்கக்கூடிய நடவ டிக்கைகள் என்ன என்ன எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். லஞ்சத்தை ஒழித்துக் கட்டத்தான் மக்கள் இந்த சோஷலிஸ்டு களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் போலும், இரண்டு பேர்களை. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு இரண்டே இரண்டு பேர்கள் இங்கு வந்துவிட்டு எங்களைக் குறை கூறுகிறார்கள். அவர்கள்தான் ஏதோ நியாய மாய் நடக்கிறார்கள் என்றும் மற்றவர்கள் அப்படி நடப்பதில்லை என்றும் எண்ணுவது சரியல்ல. அதைக் கண்டு, அவர்கள் இப்படிப்பேசுவதைக் கண்டு யாரும் ஏமாந்துவிடமாட்டார்கள். தான் தான் ஏதோ நியாயமாக நடப்பதாகவும் தன்னையே உயர்ந்தவனாகவும் நினைப்பது தவறு. சில பேர்கள் நினைக்கிறார்கள், தாங்கள் இன்னொருவரைப்பற்றி ஒரு பெரிய குற்றம் சொன்னால் தாங்கள் பதிவிருதைகள் ஆகி விடுவார்கள் என்று. அந்த மனப்பான்மை மாற வேண்டும். தாங்கள்தான் நியாயமாய் நடப்ப வர்கள் என்றும் மற்றவர்கள் அப்படி நடப்பதில்லை என்றும் நினைப்பது தவறு. லஞ்சத்தை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் சிக்கல்கள் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல் கிறேன். இதை விட நல்ல முறையில் வேறு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று மாற்று யோசனைகள் கூறினால் அவைகளைக் கவனிக்கலாம் என்று உங்கள் முன்னிலையில் சொல்லிக்கொள்கிறேன். அதிகாரவர்க்கத்தை நாம் உபயோகப்படுத்தித்தான் தீரவேண்டும். மற்ற நாடுகளைப்போல் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தி எல்லாவற்றையும் அழித்துவிட்டு புதிய ஏற்பாடுகளை செய்திருந்தால் ஒருவேளை புதிய உத்தியோகஸ்தர்கள் வந்தி ருப்பார்கள். அதனால் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் மற்ற நாடுகளில் ஏற் பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இப்பொழுதுள்ள அதிகாரி களை எப்படி நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று யோசனை செய்து பேசவேண்டும். அந்த அடிப்படையில் இங்கு ஏதாவது மாற்று யோசனைகள் இருந்தால் கட்டாயம் அவைகள் கவனிக்கப்படும். அடுத்தபடியாக, வரி வசூலிப்பதிலும் ஒரு கொள்கை இருக்க வேண்டு மென்று சொன்னார்கள். பூர்ணமாக அதை ஒத்துக்கொள்கிறேன். ராம சுவாமி பிள்ளை அவர்கள் பேசும்போது சொன்னார்கள், கேரளத்தைப் பாருங்கள் என்று. எவ்வளவு நல்ல முறையில் அங்கு வரி விதிக்கப்பட்டிருக் கிறது, அதைப்பார்த்தாவது நாம் ஏன் திருந்திக்கொண்டிருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அவருக்கு சில புள்ளி விவரங்கள் சொல்ல விரும்பு கிறேன். அங்குள்ள வரி விகிதம் இங்குள்ள வரி விகிதத்தைவிடக் குறைவு என்று சொன்னார்கள். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது, நம் கணக்குத் தான் தப்பாய் போய் விட்டதோ என்று. ஆகவே கணக்கு தெரிந்தவர் களைக்கொண்டு கூட்டிப்பார்க்கச் சொன்னேன். அங்கே எவ்வளவு, இங்கே எவ்வளவு என்று பார்க்கலாம். கேரளத்திலே 1957–58 வருட பட்ஜெட் அடிப்படையில் முக்கியமான பகுதிகளைத்தான் எடுத்துக்கொண்டு சில பகுதி களைத்தான் கணக்கில் எடுத்திக்கொள்ள வேண்டும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : பட்ஜெட் சர்வேயா? ராண்டம் சர்வேயா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ராண்டம் சர்வே அல்ல. பட்ஜெட் சர்வே தான். கேரளத்தில் தலை ஒன்றுக்கு 15·2 ரூ. நமது ஊரில் 12·6 ரூ. வசூல் செய்கிறோம். எங்கே ஜாஸ்தி என்று பாருங்கள். எங்கே ஜாஸ்தி. கேரள சர்க்காரோடு நான் போட்டி போட வரவில்லை. அங்கு நல்லது நடக்கட்டும். அங்கு நல்லது ஏற்பட்டால் அது, கொஞ்ச மாவது இங்கும் பிரதிபலிக்காதா? அவர்களுடன் நான் போட்டி போட தயாரில்லை. நிலைமையை அங்கத்தினர்கள் நன்கு உணரவேண்டும். விகிதாசாரப்படி பார்த்தால் கேரளத்தில் 4·9 வருகிறது. நமக்கு 4·8 வருகிறது. ஆகவே இங்கு அதிகம் என்று சொல்வது தவறு.

(ஸ்ரீ ஜெகந்நாதன் எழுந்தார்.)

வருகிறேன், ஜகன்னாதன், வருகிறேன். கேரளத்தில் ஏழைகளுக்கு வரி கிடையாது என்றும் பணக்காரர்களிடமிருந்தே வரி வசூல் செய்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. முதலில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது கள், சாராயம் குடிப்பவர்கள் ஏழைகளிலும் ஏழைகள். பெரிய ரகத்தை விட்டு விடுகிறேன். முதலில் நான் சொல்ல விரும்புவது, ஹரிஜனங்களும் கூலியாட்களும், தொழிலாளி களும் சாப்பிடக்கூடிய கள்ளையும், சாராயத்தையும் பற்றிச் சொல்கிறேன். கேரளத்தில் இந்த கள்ளால் வரி மூலம் இரண்டு கோடி ரூபாய் கிடைக்கிறது. இத்தொகை குடித்துக் குட்டிச்சுவராகிற ஏழைகளிடம் இருந்துதான் கிடைக் கிறது. ஆனால் சென்னை ராஜ்யத்தில் ஏழைகள் இடமிருந்து இத்தகைய கொடுமைப்பணம் வசூலிக்கப்படவில்லை. பின்னர் கேரளத்தில் நபர் வரு மானம் 313 ரூபாய். ஆனால் சென்னையில் 256 ரூபாய்தான். கேரளத்தில் தேயிலை, ரப்பர், காப்பி தோட்டங்கள் இருக்கின்றன. அடுத்தபடி, விற்பனை வரியை எடுத்துக்கொள்வோம். நாம் உணவுப் பொருள்களின் மேல் ஒரு சதவிகிதம் விதித்திருக்கிறோம். ஆனால் கேரளத்தில் உணவுப்பொருள்கள் மீது வரி வசூலிக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி பின்னால் பேசுகிறேன். எங்கு பார்த்தாலும் உணவுப்பொருள்களைப் பற்றி அதன் மேல் உள்ள வரியைப் பற்றிப் பேசுகிறேன்.

**Sri N. K. PALANISAMI :** கேரளத்தில் . . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM:** கொஞ்சம் பொறுங்கள். பழனி சுவாமி அவர்களுக்கு கேரளத்தில் இருந்தால்தான் திருப்தி ஏற்படும். இங்கு இருக்கிற வரையில் அவருக்கு திருப்தி ஏற்படாது. அவருக்கு பதில் சொல்லி திருப்திப்படுத்தமுடியாது. அடுத்தபடியாக, இன்றைக்கு உணவுப் பொருள்கள்மீது விற்பனைவரி போடுவதைப் பற்றிச் சொல்கிறார்கள். உணவுப்பொருள்களின் மேல் உள்ள விற்பனை வரியை யார் கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நம் நாட்டில் வாழ்கிற மக்களில் 100க்கு 80 பேரும் விவசாயத்துறையில் ஈடு பட்டிருக்கிறவர்கள்தான். 100க்கு 80 பேர்கள் இன்று உணவுப்பொருள்கள் பேரில் இருக்கக்கூடிய விற்பனை வரி கொடுப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் கிராமங்களிலே தான்யத்தை கூலியாகப் பெறுகிறவர்கள். அல்லது அங்கேயே விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். அங்கு விற்கிற தானியத் திற்கு ஒரு பை கூட விற்பனை வரி போடுவதில்லை. விவசாயத்துறையில் வேலை செய்கிறவர்கள் இந்த விற்பனை வரி கொடுப்பது கிடையாது. அங்கி ருந்து தான்யம் 26 அல்லது 27 சதவிகிதமே வெளியே வருகிறது விற்பனைக் காக. சிறு சிறு கிராமங்களில் கடை வைத்திருக்கக்கூடிய அந்த கடை களுக்கு விற்பனை வரி கிடையாது. 10,000 ரூபாய்க்கு மேல் இருந்தால்தான் விற்பனைவரி. சந்தைகளிலோ அல்லது கிராமங்களிலோ விற்கும் கடைக ளுக்கு விற்பனை வரி கிடையாது. ஆகவே யார் இந்த வரி கொடுக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். அப்படிப்பார்க்குபோது, பெரிய நகரங்களில் பெரிய முனிசிபாலிடிகளில் இருக்கக்கூடியவர்களிடமிருந்துதான் இந்த விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. இதற்கு முன் கலால் வரி இருந்தது. கலால் வரி இருந்தபொழுது கள் சாராயம் குடிப்பவர்களிடம் இருந்துதான், அதாவது ஏழைகளிடமிருந்துதான், கள், சாராயம் இவைகளிலிருந்துதான், பெரிய வருவாய் சர்க்காருக்கு வந்தது. இன்றைக்கு சர்க்கார் அதை எடுத்தாய்விட்டது. இன்றைக்கு உணவுப்பொருள்களின் மீது கொடுக்கக் கூடிய வரி நகரப்புறங்களில் இருக்கும் தொழிலாளிகளிடமிருந்து என்று வைத்துக்கொள்கிறேன். நகரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கும் கிராமங்களில் இருக்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் உள்ள அவர்களது தரத்தை சீர்தூக்கிப்பாருங்கள். அப்படி சீர்த்தூக்கிப்பார்க்குமிடத்து கிராமங்களில் இருக்கிற தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானத்தை விட மூன்று அல்லது நான்கு பங்கு கூடுதல் கிடைக்கிறது. நகரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு இன்றைக்கு எல்லாம் சேர்ந்து இரண்டு கோடிக்கு மேல் வருவதில்லை. சிறிய அளவில்தான் வசூல் செய்யப்படுகிறது.





இந்த சோஷியலிஸ அடிப்படையில் அதிகமாகக் கல்வி கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர வரி அதிகமாகப் போட்டு விட்டோம் என்று பலர் சொன்னார்கள். கிராமப் புறங்களைவிட நகரபுறங்களிலுள்ள மக்களை எடுத்துக் கொள்ளுவோமானால் அவர்கள் இந்த விற்பனை வரியால் அதிகமாக பாதிக்கப்படமாட்டார்கள். இந்த வரி மாத்திரம் தான் அவர்கள் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதுவும் அதிகப்படுத்தாமல் 2 நயாபைஸா என்று தான் போட்டிருக்கிறது. இந்த விற்பனை வரி இரத்தத்தை உறிஞ்சுகிறது என்றும் ஏழைகளுடைய வாழ்க்கைத் தரத்தைக் கெடுக்கிறது என்றும் பலர் சொல்லுகிறார்கள். இந்த விற்பனைவரி விஷயமாக தேசீய கவுன்சில் கூட்டத்தில் பெரிய விவாதம் நடந்தது. கடைசியில் உணவுப்பொருள்களின் மீது விற்பனை வரி விதிக்கலாம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். நியாயவிலைக் கடைகளில் விற்கும் உணவுப் பொருள்களுக்கு அதிகமாக விற்பனை வரி விதிக்கக்கூடாது என்றும் "ஸ்ப்ஸிடி"யாக இருக்க வேண்டுமென்றும் பிரதம மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இப்போது விதித்து இருக்கும் விற்பனை வரி அவ்வளவாக கூடுதல் என்று சொல்லமுடியாது. இது ஜாஸ்தியான வரி அல்ல. நமக்கு இப்போது இதன் மூலம் ஏழரை லட்சம் ரூபாய் கிடைக்கிறது. இதை இன்னும் குறைத் தால் நம்முடைய வருமானம் கம்மியாகும். அதே மாதிரி தான் உரத்தின் மீதும் விற்பனை வரி போடாவிட்டால் இப்போது இருக்கிற நிலைமையில் நஷ்டம்தான் ஏற்படும். உரம் விஷயத்தில் நமக்கு இப்போது ஐந்தரை லட்சம் ரூபாய் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. ஆகையினால் இதிலிருந்து கிடைக்கும் வருவாய் இந்த இனத்திற்கே போய்விடுகிறது. நஷ்டப்பட்டால் இவ்வரியை வேண்டாம் என்று நீக்கிவிடலாம். இது அந்தந்த அரசாங்கத்தின் மனோநிலையை பொறுத்திருக்கிறது. ஆகையால் இவ்விஷயத்தில் எந்தவிதமான அநியாயமும் கிடையாது என்றுதான் நான் நினைக்கிறேன். அவ்விதமே உங்களுக்குத் தெரிவிக்கவும் ஆசைப்படுகிறேன். இருக்கக்கூடிய நிலைமையில் இப்போது இவ்விதமாக முடிவு செய்திருக்கிறோம். இதல்லாமல் கனம் அண்ணாதுரை அவர்கள் கூறினதுமாதிரி உணவுப் பொருள்கள் மீதுள்ள எல்லா வரிகளையும் குறைத்துவிட்டால் பொதுஜனங்கள் அவர்கள் சாப்பிடும் ஒவ்வொரு கவளத்திற்கும் வாழ்த்து கிடைக்கும் என்று சொன்னார்கள். நாங்கள் வெற்று வாழ்த்து பெறுவதற்காக மாத்திரம் இங்கு வரவில்லை. தற்காலிகமாகக் கிடைக்கும் வாழ்த்துகளுக் காக இவ்விதம் செய்தால் பொதுஜனங்களுடைய பிற்காலத்திய வாழ்வுக் காக செய்யவேண்டியதை செய்யாமல் விட்டுவிட்டவர்களாவோம் என்பதை தெரிவித்துகொள்கிறேன். அடுத்தபடியாக கல்வித்துறை, சுகாதாரத்துறை விவசாயத் துறை, வைத்தியத் துறை, இவைகளில் பல்வேறு காரி யங்களை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இதற்காக எல்லாம்தான் வரிபோட வேண்டியிருக்கிறது. எப்போதும் தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய வரும்படியை அதிகப்படுத்தி செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் சர்க்காருடைய கொள்கை அதுவல்ல. வருவாய் எவ்வளவு இருக் கிறதோ அதைவிட கூடுதலாக செலவு செய்யவேண்டும். இதுதான் சர்க்காரின் பொதுநிதிக் கொள்கை. இதன்மீதுதான் மற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இதல்லாமல் வேறு ஏதாவது வழிகள் இருந் தால் அதன்படி செய்வதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம். வேறு வழிகள் ஏதாவது இருக்கின்றனவா என்று நானும் யோசித்துப் பார்க்கி றேன். தற்காலிகமாக ஒரு வழியும் என் யோசனைக்கு எட்டவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஒன்றும் மறைக்க விரும்பவில்லை. அதனால் தான் தெளிவாக சொல்லுகிறேன். அடுத்த பட்ஜெட்டிலாவது ஏதாவது மாற்றவேண்டும் என்று நினைக்கிறேன். என்ன இருந்தாலும் அந்தந்த சமயங்களில் இருக்கின்ற நிதி நிலைமையையும் மற்ற காரியங்களையும் பார்த் துத்தான் ஒரு காரியத்திற்கு முடிவு செய்ய முடியும். இந்த சமயத்தில் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. அடுத்த பட்ஜெட்டில் நிதி நிலைமையைப் பார்த்து ஏதாவது வரிகளை நீக்குவதற்கு முயற்சிக் கின்றேன் என்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் தான் இப்போது இந்த அரசாங்கம் செயலாற்றி வருகிறது. அடுத்ததாக சில நண்பர்கள் விவசாய வருமானத்திற்கு வரி போடக்கூடாது என்று கேட்டார்கள். இந்த விஷயத்தில் இதை குறிப்பிட்ட தலைவர் அவர்களுக்கும்

[Sri C. Subramaniam] [5th July 1957

உப தலைவருக்கும் ஒற்றுமை இருக்கிறதா என்பதே சந்தேகம். இரண்டு பேருடைய கருத்தும் ஒன்றாக இருப்பதாக தெரியவில்லை. வேறு சிலர் நிலச்சீர்த்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த நிலச்சீர்த்திருத்தம் விஷயமாக நன்றாக ஆலோசித்து அகில இந்திய ரீதியாக கொண்டுவரவேண்டுமென்று ஆலோசித்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் இதன் முடிவு தெரிந்துவிடும் என்று நினைக்கிறேன். அதன்மீதுதான் நிலச்சீர்த்திருத்தம் விஷயமாக மேல் நடவடிக்கைகள் எடுக்க முடியும். இதற்கிடையில் இந்த வருமான வரியும் விதிக்க முடியாத நிலைமை இருக்கிறது. நிலச்சீர்த்திருத்தம் கொண்டுவருவதற்கு முன்னால் நில வருமான வரி போட்டால் நிலச்சீர்த் திருத்தம் வரும் என்று தெரிந்துதான் இந்த மாதிரியுள்ள வரியை போட்டு இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் பழனிசாமி போன்றவர்கள் கூறுவார்கள், அப்போதும் கனம் ராமசாமி பிள்ளை போலுள்ளவர்கள் இவ்விதம் அரசாங்கம் செய்துவிட்டது என்று கூறுவார்கள். இன்றைக்கு நிலப் பிரபுக்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் விஷயத்தில் மாறுதலை உண்டுபண்ண வேண்டும் என்ற அபிப்பிராயத்தைத்தான் அரசாங்கமும் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பல நில பிரபுக்களும் இதை இன்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ மிராசுதாரர்கள் எல்லாம் எங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள், விருதுநகரிலுள்ள வர்த்தகர்கள் எல்லாம் காமராஜுக்கு ஆதரவாக இருக்கிறார்கள், அதனால் அவர்களுக்கு வேண்டி சலுகை செய்கிறது என்றெல்லாம் கனம் அண்ணாதுரை அவர்கள் அவர்களுக்குரிய பாணியில் குறிப்பிட்டார்கள். நான் இது குறித்து வருத்தப்படுகிறேன். இன்றைய அரசாங்கம் அவர்கள் யாருடைய தயவையும் எதிர்ப்பார்த்து நிற்கவில்லை. இன்று அவர்கள் நிபந்தனையற்ற முறையில் உதவிகள் செய்துகொண்டிருக்கலாம். அவர்கள் முறைகேடாக ஏதாவது சலுகை கோரினால் அவர்களை எங்கள் பக்கத்தில்கூட வரவிடமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களிடையில் பெரிய நிலப்பிரபுக்கள் மிராசுதார்கள் எங்கள் முன்பக்கத்தில் இருக்கிறார்கள், பின்பக்கத்தில் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் இன்று நிலச்சீர்த்திருத்தம் வரும்போது அதை ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதோடு மாத்திரமல்ல, அவர்கள் இதை வரவேற்கிறார்கள், மேலும் வரவேற்பார்கள், என்பதில் எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அதுபோல் யாரும் சந்தேகப்படவேண்டியதும் அவசியம் இல்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளெல்லாம் நம் கொள்கை அடிப்படையிலேதான் இருக்கவேண்டும். கொள்கைகளை மனதில் வைத்துக்கொண்டு நாம் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. கொள்கை என்ன ? சோஷலிஸ சமுதாயம் ஏற்படுத்துவதுதான். உடனடியாக பங்கு போட்டுக் கொடுத்துவிட்டால் சோஷலிஸ சமுதாயம் அமைந்துவிடும் என்று சொல்கிறார்கள் சிலர். அமையாது. உற்பத்தியைப் போதிய அளவு பெருக்கி அதன் மூலமே சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியும். சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்றால் முதலில் உற்பத்தி பெருகவேண்டும். அதற்காகத்தான் திட்டம் போட்டிருக்கிறோம். சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க, மக்கள் எல்லோருக்கும் அத்யாவசியமான தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்குவதுதான் நல்ல வழி என்ற அடிப்படையில் திட்டம் போட்டிருக்கிறோம்.

இன்றைக்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆம் ; எதற்காக ? அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதற்காக. சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று சொல்லிய உடனே சில நண்பர்கள் ரஷ்யாவைப் பாருங்கள், சைனாவைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். சோஷலிஸத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் அமெரிக்காவை பார்க்கச் சொல்லுகிறார்கள். இரண்டு தேசங்களிலும் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பார்த்து அவைகளில் இருக்கக்கூடிய குறைகளை நீக்கி நல்ல வழியைப் பின்பற்றி நாம் பயனடையவேண்டும். நாம் போகக்கூடிய வழியிலே ஜனங்களுக்கு அதிகக்



5th July 1957] [Sri C. Subramaniam]

கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நம்முடைய கடமை. அமெரிக்காவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது என்றால், அங்கே பரவலான நிலம், ஜனத்தொகை கொஞ்சம். பெரிய அளவிலே உற்பத்தி பெருகிக்கொண்டிருக்கும் மத்தியிலே எங்கு பார்த்தாலும் வறுமை தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. இருபது வருஷங்களுக்கு முன்னாலேயே உற்பத்தி பெருகிக்கொண்டிருந்த காலத்தில் வறுமை ஒரு பக்கத்திலே பெருகிக்கொண்டிருந்தது. உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லுகிறபோது, இன்னொரு பக்கத்தில் வறுமை அதிகப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதன் மூலமாக ஒரு பகுதியினர் வருவாயை அதிகமாகப் பெற்று பணக்காரர்கள் ஆகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ரஷ்யாவில் 10, 12 வருஷங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளையும் சமீபத்தில் பத்திரிகையில் வந்த நிகழ்ச்சியையும் கவனிக்கவேண்டும். எதைத் தவிர்க்கவேண்டுமென்பது நமக்கு நன்றாகப் புலப்படும். ஏதேச்சாதிகார அடிப்படையிலே போகாமல் ஜனநாயக அடிப்படையிலே செல்லவேண்டும். தொழில் வளர்ச்சிபெருகவேண்டியது தான். ஆனால் அதன் மூலம் மனிதன் அழிந்து விடலாம். அதிலும் தப்பிப் பிழைக்கவேண்டும். தப்பிப் பிழைத்து அதன் மூலம் முன்னேறவேண்டும். அதனால்தான் இன்றைக்கு தனிப்பட்ட நபர்கள் தொழில் வைத்து நடத்திய போதிலும் அவர்களிடம் செல்வம் குவியக்கூடாது என்ற முறையில் வரி விகிதத்தை விதித்திருக்கிறோம். மாறுபட்ட வரிக்கொள்கையையும் மீறி அதிலே தப்பித்து பணம் சம்பாதிப்பவர்கள் அதை வேறு சொத்துகளில் போட்டு செலவிடவேண்டும். அதற்கும் வரி போடவேண்டுமென்ற முறையிலே அமைப்பு ஏற்படுத்தியிருப்பதால் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழில் அதிபர்களுடைய பணப்பெருக்கம் அதிகமாக ஆகாமல் இருக்கும். அதே சமயத்தில் தொழிலாளர்களுக்கு வேண்டிய உரிமைகளைக் கொடுத்து அவர்களுக்கு வசதிகள் உண்டாக்க பலவித நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். இரண்டு விதத்திலும் சரிசெய்வதற்காக திட்டம் போட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே தொழில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். இதிலே நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இதிலே முன்னேற்றம் கண்டு வருகிறோம். அமெரிக்கா, ரஷ்யா, சைனாவிலுள்ள நிபுணர்களையும் நாங்கள் போகின்ற வழியில் முன்னேற்றம் காணமுடியுமா என்று ஆலோசனை கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்களும் முன்னேற்றம் காணமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இதே பாதையில் செல்லுகிறோம். தவறுகள் இருந்தால் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். தவறு ஏற்படலாம். ஒரே பாதையிலேயே போகவேண்டுமென்பது அல்ல. இப்பொழுது இருக்கிற முறையிலே வெற்றி கண்டிருக்கிறோம், வெற்றி காணமுடியும்.

தனிப்பட்டவர்களிடத்தில் தொழில் ஸ்தாபனங்கள் இருப்பது பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அதற்கு வேண்டிய கட்டுப்பாடுகள் செய்திருக்கிறோம். அவசியம் ஏற்படும்பொழுது கட்டுப்பாடுகளை சட்டபூர்வமாக இறுக்கவும் தயாராக இருக்கிறோம். கவலைப்படவேண்டியதில்லை. தொழில் அபிவிருத்தி ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியும். இன்றைக்கு பிற்பட்டிருக்கிற தமிழ் நாடு முன்னேறவேண்டுமானால் இப்பொழுது இருக்கக்கூடிய தொழில்கள் 100-க்கு 100 பங்கு உற்பத்தியைப்பெருக்கவேண்டும். இதன் மூலம்தான் குறைகளைத் தீர்க்கமுடியும். எவ்வளவுக் கெவ்வளவு உற்பத்தி பாதிக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டின் பொருளாதார நிலைமை பாதிக்கப்படக்கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனால்தான் என் உரையில் சொன்னேன். தொழில் அதிபர்களும் தொழிலாளிகளும் 5 வருஷம், 10 வருஷங்களுக்கு ஒரு ஒப்பந்தத்திற்கு வரவேண்டும். தொழிலாளர்களின் நலனகளைப் பாதுகாப்பதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அதற்காக தொழில் கோர்ட்டுகள் அமைந்திருக்கின்றன. அதே போல தொழில் அதிபர்கள் கையில் பணம் அதிகமாகக் குவிந்து விடாமல் இருக்க வரித் திட்டங்கள் இருக்கின்றன. வேண்டுமென்றால் வரித்திட்டங்களை இன்னும் மாற்றி அமைக்கலாம். யாரும் தொழிலாளர்களைச் சுரண்டி அதிகப் பணம் சம்பாதிக்க முடியாது. உற்பத்தி அதிகமானால்தான் பொருளாதாரம் அபிவிருத்தியடைய முடியும். உதாரணமாக, மதுரையில் ஆலைகள் மூடப்பட்டால், அது தொழில் அதிபர்

[Sri C. Subramaniam] [5th July 1957

களுக்கு மட்டும் நஷ்டமல்ல, தொழிலாளர்களுக்கு மட்டும் நஷ்டமல்ல.
அது ஒரு தேசீய நஷ்டம், தமிழ் நாட்டிற்கே நஷ்டம். உற்பத்தி குறைந்
தால், நம்முடைய மூலதனம் குறையப்போகிறது, வசதி குறையப்போகிறது.
அவ்வளவுக்கவ்வளவு இன்னும் அதிகக் காரியங்கள் செய்வதற்குத்
தடை ஏற்படும். இன்றைக்கு தனிப்பட்டவர்கள் செய்யக்கூடிய தொழில்
அபிவிருத்தி அவர்களுக்கு மட்டும் உதவுவது அல்ல. நாடு முழு
வதிற்கும் பயன்படும். அதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள
வேண்டும். நமது நாட்டிற்கு அவசியமான அளவுக்கு மட்டுமல்ல, வெளி
தேசங்களுக்கு அனுப்பக்கூடிய அளவுக்கு உற்பத்தி பெருகவேண்டும்.
ஆகவே இதை மனதில் கொண்டு தொழில்களைப் பெருக்குவதற்கு நாம்
உதவ வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் சிறு கைத்
தொழில்கள் வளர வேண்டியது மிகவும் அவசியம். நாம் இன்னும் பிற்
போக்கான நிலையிலேயே இருக்கிறோம். போட்டி போட்டுக்கொண்டு கேரள
த்தில் பொருள்களை அதிக விலைக்கு விற்க முடிகிறது. நம்மை விட அங்கு
வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. ஆந்திரா, பம்பாய், வங்காளம்
போன்ற இடங்களிலும் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. அங்கே
தான் பொருள்கள் அதிக விலைக்கு விற்கும் என்று நினைக்கிறார்கள். நம்
முடைய ஏழை நாட்டில் குறைந்த விலைதான் கிடைக்கும். அந்தக் குறை
யைத் தீர்க்கவேண்டுமானால் உற்பத்தி பெருகவேண்டும். அதற்கு மத்தி
யிலே நம்மிடத்தில் கீழ்ப்பகுதியில் இருக்கக்கூடிய வறுமை நிலையைப்
பார்க்கவேண்டும். புயல் அடித்தபொழுது கனம் முதல் அமைச்சர் அவர்கள்
நிலைமையை நேரில் கண்டறிந்தார்கள். அதற்குப் பிறகு நாங்களும் சென்று
பார்த்தோம். அங்கே மக்களுடைய வாழ்க்கை மிகவும் பரிதாபகரமான
நிலைமையில் இருந்தது. ஒரு சிறிய நஷ்டம் ஏற்பட்டாலும் அவர்கள்
வாழ்க்கை நடத்துவதற்குத் தவிப்பது நன்றாகப் புலனாயிற்று.

இங்கு கதர் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறதென்றால், இங்கு
வேலை கிடைக்கவில்லை. குறைந்த கூலிக்கு வேலை செய்வதற்கு மக்கள்
தயாராக இருக்கிறார்கள், ஏழ்மையின் காரணமாக. இவைகளையெல்லாம்
பார்க்கும்பொழுது, இவ்வளவு ஏழ்மை நிலைமையில் இருந்தும்கூட நாம்
நல்ல வாழ்க்கைநடத்துகிறோம் என்று சிலர் நினைக்கிறார்கள். நம் பகுதி
யைச் சேர்ந்த சிலர் வெளியில் உயர்ந்த உத்தியோகம் வகிப்பதால்
சென்னை ராஜ்யம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று நினைக்கிறார்
கள். தொழில் துறையில் நாம் இன்னும் முன்னேற்றம் அடையவில்லை.
விலை வாசிகள் இங்கு அதிகமாக இருக்கிறது. நாம் எவ்வளவு பின்
தங்கியவர்களாக இருக்கிறோம் என்பதை இவைகளெல்லாம் வலியுறுத்து
கின்றன. இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது நம்முடைய முயற்சி
இன்னும் 2, 3, 4 மடங்காக அதிகரிக்க வேண்டும். ஒன்றுபட்ட சக்தியை
இன்னும் மேலும் மேலும் உருவாக்கவேண்டும். ஒன்றுக்கொன்று
மோதிக்கொண்டு வீணாகப் போகக்கூடிய சக்தியை பயன்படுத்திக்கொள்வது
எவ்வளவு அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

கதர் துணியை ஏன் ஆஸ்பத்திரிகளுக்கு விநியோகிக்கவேண்டும், ஏன்
கைத்தறித் துணியை விநியோகிக்கக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள்
கைத்தறியில் அக்கறை உள்ளவர்களுக்கு நூல் நூற்பவரிடம் கொஞ்ச
மாவது இரக்கம் வேண்டாமா ? நூல் நூற்று தினம் 4 அணா சம்பாதித்துக்
கஞ்சி காய்ச்சிக் குடிப்பவர்கள் மீது கருணை வேண்டாமா ? மாதம் ரூ 60
சம்பாதிக்கும் நெசவுத் தொழிலாளர் பேரில் இரக்கம் காட்டுபவர்கள் நாள்
ஒன்றுக்கு 4 அணா கூலி சம்பாதிக்கும் ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டக்
கூடாதா ? கதர் துணியை விநியோகிப்பதன் மூலம் கைத்தறியாளர்கள்
பாதிக்கப்படுவார்கள் என்று குற்றம் சாட்டுவதற்கு உண்மையை அறிந்த
வர்களுக்கு மனம் வருமா ? வராது. கதர் உற்பத்தி செய்வதன் மூலம்
ஏழை மக்களுக்கு வேலை கொடுக்க முடிகிறது. அப்படியிருக்கும்பொழுது
ஏன் கதர் துணியை ஆஸ்பத்திரிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கப்
படுகிறது. ஆஸ்பத்திரிகள் மட்டும் அல்ல. ரயில்வே நிலையங்களும் கதர்



5th July 1957] [Sri C. Subramaniam]

துணியை வாங்கி உபயோகப்படுத்துகின்றன. நாம் முதலில் கதரை உப
யோகப்படுத்தாவிட்டால், கதர் துணியை வாங்கவேண்டுமென்ற வாதத்தை
மற்றவர்கள் எவ்வளவு தூரம் ஒப்புக்கொள்வார்கள் என்பதை யோசிக்க
வேண்டும். கதர் நூலும் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் கொடுக்கப்
படுகிறது. அவைகள் மில்களுக்குக் கொடுக்கப்படவில்லை. வேறு அரசியல்
நோக்கத்திற்காக அல்லாமல், உண்மையிலேயே கைத்தறி நெசவாளர்களை
ஆதரிப்பவர்கள் நிச்சயமாக கதரை இன்னும் இரண்டு மடங்காக ஆதரிப்
பார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. (கரகோஷம்.)

அடுத்தபடியாக, இன்னொன்று குறிப்பிட்டார்கள். அதை நான்
வரவேற்கிறேன். திரு. அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள் ;
திரு. ஷண்முகம் அவர்களும் குறிப்பிட்டார்கள். சென்ற தடவை மூலதன
செலவுக்காக 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்து, அதிலே மூன்று கோடி
ரூபாய் குறைவு ஏற்பட்டது என்று சுட்டிக் காட்டினார்கள். வாஸ்தவம்.
குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முந்திய வருஷத்திலே ஓரளவு சரி
யாக நடந்திருக்கிறது. அது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷ
மாக இருந்தது. பல காரியங்களை முடிக்கவேண்டுமென்ற காரணத்தால்
முடிந்தது. ஒவ்வொரு வருஷமும் ஏற்படக்கூடிய நிகழ்ச்சி—எனக்கு ஏற்
பட்ட அனுபவத்தைச் சொல்கிறேன். அதற்கு என்ன மாற்று செய்து
கொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்காக நான் சொல்கிறேன்.

இப்பொழுது நாம் பட்ஜெட்டைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கி
றோம். வருஷா வருஷம் பிப்ரவரி மாதம் உட்கார்ந்து, மார்ச் மாதத்திலே
முடித்து விடுகிறோம். ஒவ்வொரு இலாகாவும் இன்ன இன்ன திட்டங்களை
நிறைவேற்ற வேண்டுமென்று அப்பொழுது முடிவு செய்கின்றோம். இது
செக்ரடேரியட்டுக்குப் போகிறது. அங்கிருந்து அந்தந்த துறைத் தலைவர்களுக்கு
போகவேண்டும். Departmental Heads ஒவ்வொரு மாதமும் கணக்குப்
போட்டு அனுப்பவேண்டும். செக்ரெடேரியட்டிலிருந்து துறைத் தலைவருக்குப்
போனவுடனே, அவர்கள் அதை ஒவ்வொரு பிரதேசவாரியாகப் பிரித்து, அவர்
களுக்குக் கீழ் இருக்கும் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். செப்டெம்பர்,
அக்டோபர் மாதத்திலே இங்கே போய்ச் சேரும். அதற்குப் பிற்பாடு வேலைகளைச்
செய்வதற்கு—கண்டிராக்ட் மூலமாக என்றால் டெண்டர் வரவழைத்தோ
அல்லது நேரிடையாகவோ—முற்படுவார்கள். அதற்குள் பிப்ரவரி மாதம்
வந்துவிடும். அதற்குள்ளே வருஷம் முடியப் போகிறதாக இருக்கும். மார்ச்சு
மாதத்திலே அவசரம் அவசரமாக, வேலை நடத்துவார்கள். வேலை நடக்கா
விட்டால், பணம் போய்விடுமே என்ற அபிப்பிராயத்தில் மார்ச்சு மாதத்
தில் அவசர அவசரமாக வேலையைச் செய்வார்கள். இந்த முறையில்
தான் பல வருஷங்களாக நடந்து வந்திருக்கிறது. இந்த முறையினால்,
வேலை செய்வதற்குத் தடை ஏற்படுவதோடு கூட, வீண் செலவும் ஏற்படு
கிறது என்பதில் சந்தேகமில்லை.

சென்ற நவம்பரிலிருந்து ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.
ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று பிப்ரவரி மாதத்திலே மந்
திரிசபை முடிவு செய்கிறது. அதற்குப் பின் சபைமுன் பட்ஜெட் ரூபத்தில்
வருகிறது. மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு
வந்து நிறைவேற்றினால்தான் திட்டம் கவிழ்ந்து போகும். அது சாதா
ரணமாக ஏற்படுவது இல்லை. அப்படி ஏற்பட்டாலும் வேலைத் திட்டத்தை
யாரும் மாற்றமாட்டார்கள். வரித் திட்டத்தை மாற்றலாம். புதிய வேலைத்
திட்டங்கள் மாறலாம். ஆனால், எடுத்திருக்கும் வேலைத் திட்டங்கள் அப்
படியே தான் நடக்கும். ஆகையால், அப்பொழுதிருந்தே துறைத் தலை
வர்களுக்கும், அங்கேயிருந்து மற்றவர்களுக்கும் ஏப்ரல் கடைசியிலே போய்ச்
சேர்ந்து விடும். அது மட்டும் அல்ல. ஒரு வேலையைச் செய்வது என்றால்,
முதல் மூன்று மாதத்தில் இவ்வளவு, அடுத்த மூன்று மாதத்தில் இவ்வ
ளவு, அதற்கும் அடுத்த மூன்று மாதத்தில் இவ்வளவு, கடைசி மூன்று
மாதத்தில் இவ்வளவு என்று வேலை பூர்த்தியாகவேண்டிய
வேலைக்கான திட்டத்தைத் தயார் செய்து கொண்டு, அந்த முறையில் வரு
ஷம் பூராவும் வேலை நடக்கவேண்டும். சில மாணவர்கள் மற்றக்

[Sri C. Subramaniam] [5th July 1957

காலங்களில் சரியாகப் படிக்காமல் இருந்து, பரீட்சைக் காலங்களில் மட்டும் அவசரம் அவசரமாகப் படித்து, பரீட்சைக்குச் சென்று பாதி சரியாகவும் பாதி தவருகவும் விடை எழுதுவது போல், நாம் வருஷக் கடைசியில் காரியங்களைச் செய்தால் அது நல்லது அல்ல என்பதை உணர்ந்து, அப்படிப் போல் இல்லாமல், நல்ல மாணுக்கன் எப்படி வருஷம் முழுவதும் கவனமாகப் படித்து வருவானே, அந்த முறையில் இப்பொழுது புதிய முறையிலே திட்டம் போட்டுக்கொண்டு வேலை செய்ய வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தியிருக்கிறேம்.

அப்படி அவர்கள் செய்கிருர்களா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை **Departmental Heads**-ஐக் கூப்பிட்டு, திட்டம் போட்டபடி முதல் மூன்று மாதங்களுக்கு என்ன வேலை நடந்திருக்கிறது/ என்பதையும், குறைவாக நடந்திருந்தால், அதற்குக் காரணம் என்ன என்பதையும், அதை நிறைவேற்ற முடியாமல் என்ன தடை ஏற்பட்டதென்பதைத் தெரிந்து, வேறு இலாகாவில் தடை இருக்கிறதா என்பதையெல்லாம் கண்டுபிடித்து, அந்தத் தடைகளையெல்லாம் நீக்குவதற்கான முயற்சி எடுத்து வர ஏற்பாடு செய்திருக்கிறேம். தடைகளையெல்லாம் நீக்கிக்கொடுத்து, அடுத்த மூன்று மாதங்களுக்குள் சரி செய்து விட வேண்டுமென்று சொல்லி அனுப்புவதாகவும் திட்டமிட்டிருக்கிறேம். இந்த முறையிலே நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறேம். நல்லதொரு வழியைக் கண்டு பிடித்திருக்கிறேம் என்பதை நான் சபையின் முன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வருஷக் கடைசியில் அவசரப்பட்டு வேலை செய்வதால், வேலையும் செம்மையாக நடக்காமல், பண விரயமும் ஆவதைத் தவிர்க்கும்பொருட்டு இப்பொழுதிருந்தே திட்டம் போட்டு வேலை செய்திருக்கிறேம்.

இம்மாதிரி செய்வதற்கு பருவ மழை முதலியன சரியாக இருக்க வேண்டும். இயற்கை விபரீதங்கள் போன்ற எதிர்பாராத சூழ்நிலை ஏற்படுமானல், அப்பொழுது ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றுவதிலே போட்ட திட்டத்தின் படி நடக்க முடியாமற் போகும். அதனுல், பணச் செலவும் திட்டப்படி நிற்காமல் சற்று அதிகமாகும். ஆகவே, பருவ காலங்கள் எல்லாம் சரியாக இருக்கிற வரை, ஒவ்வொரு மூன்று மாதத்திலும் எவ்வளவு வேலை நடக்கவேண்டுமென்ற இலக்குகளை வைத்துக்கொண்டு, அதன்படி நிறைவேற்ற ஏற்பாடு செய்திருக்கிறேம். இதன் காரணமாக, ஒவ்வொரு தலைமை அதிகாரியும் சர்வ ஜாக்கிரதையாக இருந்து, கவனித்துக் கொள்வார்கள். அவர்கள் கீழ் உள்ள அதிகாரிகளும் கவனித்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த வருஷத்திற்குள் திட்டமிட்டபடி விதைப் பண்ணைகள் ஏற்பட்டு விடுமா என்று சந்தேகமாக கனம் அங்கத்தினர் சொன்னுர்கள். இது விஷயத்தில் மூன்றுமாதத்திற்கு ஒரு தடவை நாங்களும் கண்காணிப்பாக இருந்து, விவசாய டைரக்டர் அவர்களும் கண்காணிப்புடன் நடந்துகொள்வார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களை மீறிய சூழ்நிலை காரணமாக, வேறு ஏதாவது தவிர்க்க முடியாத காரணமாக இத் திட்டம் எதிர்பார்த்தபடி முடியாமலிருக்கலாமே யொழிய, மனிதப் பிரயத்தனத்தால் செய்யக்கூடியதனைத்தையும் செய்து, இதனை திட்டமிட்டபடியே முடித்துத்தான் தீருவோம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேற்படி புதிய திட்டத்தை இதற்கு முன்னுலும் செய்திருக்கலாம். ஆனுல், அப்பொழுது இந்த அனுபவம் ஏற்படவில்லை. போகப்போகத்தான் அனுபவம் ஏற்படுகிறது. அந்த அனுபவத்தைப் பயன்படுத்தித்தான் இப்பொழுது புதிய முறையொன்றைக் கண்டு பிடித்திருக்கிறேம். "பழைய முறைகளையே வைத்துக்கொண்டு இருக்கிறேம்" என்று கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியல்ல. எங்களுடைய அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு, முறைகளை மாற்றிக்கொண்டு, எங்களுடைய சக்திக்கேற்றபடி செய்துகொண்டிருக்கிறேம் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



5th July 1957] [Sri C. Subramaniam]

ஆகையால், இந்த முறையில் பட்ஜெட் திட்டத்தைத் தயாரித்திருக்கிறேம் என்றுல், நான் நன்ருக உணருகிறேன். பட்ஜெட் திட்டம் தயாரிப்பது வேலையினுடைய ஆரம்பமே யொழிய வேலையின் முடிவு அல்ல என்பதை நான் நன்ருக உணருகிறேன். இன்ன இன்ன திட்டம் செய்யலாம் என்று இப்பொழுது நாம் முடிவு செய்திருக்கிறேம். இது நன்ருக நடந்திருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி வருஷ முடிவில்தான் தெரிந்து கொள்ள முடியும். திட்டத்தைப் பற்றி பாராட்டுபவர்கள் அந்தப் பாராட்டு உரையை நிறுத்தி வைத்துக்கொண்டு, வருஷக் கடைசியில் இதை முடித்திருக்கிறேமா என்று பார்த்து அப்பொழுது எங்கள் பேரில் பாராட்டுதலும் குற்றச்சாட்டுகளும் சொல்லுங்கள். ஆகவே, வருஷக் கடைசியில் இந்த பட்ஜெட்டைப் பற்றி முடிவு சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அத்துடன், ஒரு விஷயத்தை நான் மறந்துவிடக்கூடாதென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் எனக்கு ஞாபகமூட்டுகிருர்கள்; அதாவது, பாலாற்றைப் பற்றி. பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரும் பிரச்னையைப்பற்றி எங்களுக்கு ஓரளவு தெரியும். அதிலே இருக்கக்கூடிய பழைய ஒப்பந்தங்களை நான் படித்துப் பார்த்தேன். எந்த அளவுக்கு, நாம் அப்பொழுது செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு உட்பட்டு இன்னும் அதிகமாகத் தண்ணீர் கொண்டு வர முடியும் என்பதைப் பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. ஏதோ மைசூரிலே அதிகமாகத் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளுகிருர்கள், அதனுல் தான் நமக்குத் தண்ணீர் வரவில்லை என்ற ஒரு மனப்பான்மை மக்களிடத்திலே பரவியிருந்தது. நான் அந்த ஒப்பந்தங்களையும், அது சம்பந்தப்பட்ட கட்டு (file) முழுவதையும் புரட்டிப் பார்த்திருக்கிறேன். மைசூரை நிர்ப்பந்தப்படுத்தி அந்தத் தண்ணீரை கீழே கொண்டுவரக் கூடிய ஒரு ஷரத்து கூட அதில் இல்லை. அதனுல் தான் அதை விட்டு விட்டோமே தவிர, வறண்ட பிரதேசமாக இருக்கும் அப்பகுதிக்கு இரண்டு சொட்டுத் தண்ணீர் வருவதாக இருந்தாலும் நாம் விட்டிருக்க மாட்டோம். இருந்தாலும், இன்னும் பரிசீலனை செய்து, அடி ஊற்றுக்களை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதைப்பற்றி பிரதம இன்ஜினீரும் பரிசீலனை செய்கிருர்கள். அவர்கள் முதலிலே பரிசீலனை செய்து, பரீட்சார்த்தமாக நடத்திய முயற்சியில் எதிர்பார்த்த பலன் இல்லை. வேறு விதமாகச் செய்யமுடியுமா என்பதைப் பற்றியும் பரிசீலனை நடந்து வருகிறது.

இந்த விவாதத்தில் பல யோசனைகள் சொல்லப்பட்டன. அந்த யோசனைகளையெல்லாம் ஆராயாமல், இன்றைக்கே உடனடியாக பதில் சொல்வது இயலாது—நான் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தேனே அந்தக் கால வரையரையை நான் இப்பொழுதே மீறியிருக்கிறேன்—ஒவ்வொரு யோசனையைப் பற்றியும் இங்கு நான் எடுத்துக்கொண்டு, என்ன செய்யப்போகின்றேம் என்று இங்கு இப்பொழுது சொல்லமுடியவில்லையென்றுல், நான் அந்த யோசனையைக் குறைவாக மதிப்பிடுகிறேன் என்ற காரணத்தால் அல்ல. இந்த பட்ஜெட் விவாதத்திலே சொல்லும் ஒவ்வொரு யோசனையையும், இதிலிருந்து எடுத்து, அந்தந்த தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பி, அவர்கள் அவைகளைப் பரிசீலனை செய்து, அதில் என்ன செய்யப்போகின்றேம் என்பதைப்பற்றி சர்க்காருக்கு அவர்கள் சொல்ல வேண்டும். அந்த முறையில் அவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்து, அதில் என்ன முடிவு செய்யப்பட்டது என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க முடியும். ஆகையால், ஒவ்வொரு யோசனையையும் பரிசீலனை செய்து, அதற்காக என்ன பரிகாரங்கள் தேட முடியுமோ அந்தப் பரிகாரங்களைத் தேடுவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கடைசியாக நாம் எவ்வளவு தூரம் நம்முடைய நடவடிக்கைகளைத் தமிழிலே நடத்திக்கொள்ள முடியும் என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டு மூன்று வருஷங்களாக—இது மூன்ருவது உரை—நாம் மூன்று உரைகளைத் தமிழில் எழுதியுள்ளோம். இரண்டாவது

தடவையாக தமிழிலேயே சபை முன் படித்திருக்கிறோம். இதிலே இருகூடிய சிரமம் அதை எழுத முற்படும்போது தான் தெரிகின்றது. அதை நல்ல தமிழிலே, எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எழுதுவதற்கு எவ்வளவு. கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்பது அதை எழுத முற்படும்போது தான் தெரிகிறது. இதிலே கையாளப்பட்ட பல பதங்களைப் பற்றி கனம் அங்கத்தினர் திரு. ஆதித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். "100 லட்சம்" என்று சில கட்டங்களிலும், "கோடி" என்று சில இடங்களிலும் வேண்டுமென்றே நான் உபயோகித்திருக்கிறேன். பல சமயங்களில் லட்சக் கணக்கில் கணக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் கோடிக் கணக்கிலும் கணக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. எப்படிச் சொன்னாலும், கணக்கு நமக்குத் தெரிந்து கொள்ளக்கூடிய முறையில் இருக்கவேண்டுமானால், பழக்கப்படவேண்டும். "100 லட்சம்," என்பதை "கோடி கோடி" என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல என்றாலும், கணக்குகளைக் குறிப்பிடும்போது லட்சக் கணக்கில் சொல்வது வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, இரண்டு பதங்களையும் பழக்கத்தில் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் நான் வேண்டுமென்றே அந்த இரண்டு பதங்களையும் உபயோகப்படுத்தியிருக்கிறேன். ஒரு கருத்தைத் தெரிவிக்க இரண்டு மூன்று பதங்களை என் உபயோகப்படுத்தவேண்டும்? ஒரு கருத்தைத் தெரிவிக்க ஒரு பதத்தைத் தனியாக உபயோகிப்பது தானே பொருத்தம் என்று அங்கத்தினர் நினைக்கலாம். இவ்விரண்டு பதங்களையும், இன்னும் இது போன்று ஒரே கருத்துள்ள இரண்டு மூன்று பதங்களையும் இந்த பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம், இரண்டு பதங்களும் சபையில் உபயோகப்படும்போது நல்ல ஆழ்ந்துள்ள, கருத்துள்ளதாக எந்தப் பதம் இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான். இவ்விதமாக உபயோகப்படுத்தி, நல்ல முறையிலே இந்தப் பதங்களை வகுத்துத் தொகுத்து, அதன் மூலமாக இந்த பட்ஜெட் பிரசங்கமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு பிரசங்கங்களாக இருந்தாலும் சரி, அவைகளில் பொருத்தமாகக் கையாள வேண்டிய நல்ல பதங்களை (technical words) உபயோகப்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டுமானால், இங்கு இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் எல்லோரும்—அதிலும் முக்கியமாக தமிழிலே ஆர்வமுள்ள அங்கத்தினர்கள், அனுபவம் உள்ள அங்கத்தினர்கள்—இதிலே பெரும் உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பல அங்கத்தினர்கள் எந்தக் காலத்தில் தமிழ் நமது ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் வரப்போகிறது என்று கவலை தெரிவித்துப் பேசினார்கள். அது தான் எங்களுக்கும் கவலையாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கவலை என்று சொல்லும்போது அதிலுள்ள சிரமங்களைத் தான் குறிப்பிடுகிறேன். அந்த சிரமங்களைத் தவிர்க்க, தடைகளை நீக்க சர்க்கார் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்தக் காரியத்தை எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதைச் செய்யவேண்டுமென்பது தான் சர்க்கார் கொள்கை. கனம் அங்கத்தினர்களெல்லாம் பூர்ண ஒத்துழைப்பைக் கொடுத்தால் அதை சீக்கிரத்திலே செய்ய முடியும் என்று கருதுகிறேன். இந்த முறையிலே கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்வது ; இன்று நாம் எல்லோரும் பொதுக் கருத்து உடையவர்களாக இருக்கிறோம் ; அதாவது நம் மக்களுடைய வாழ்க்கை உயரவேண்டும், தமிழ் மொழி உயரவேண்டும், என்ற பொதுக் கருத்துக்களை நிறைவேற்றுவதிலே இந்தச் சபை பெரிதும் உதவவேண்டும். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER:** இந்தச் சபையை நாளை காலை 9 மணி வரை ஒத்தி வைக்கிறேன். The House will now adjourn and meet again at 9 a.m. on Saturday, the 6th July 1957.

**The House then adjourned.**



### IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

107. *Notification issued with G.O. Ms. No. 282, Home, dated 2nd February 1957, amending sub-rule (a) of rule 374 of the Madras Motor Vehicles Rules, 1950. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act (Central Act IV of 1939).]*

108. *Notification issued with G.O. Ms. No. 1724, Food and Agriculture, dated 3rd June 1957, amending rule 28 of the Madras Commercial Crops Markets Rules, 1948. [Laid on the table of the House under section 18 (4) (c) of the Madras Commercial Crops Markets Act, 1933.]*

109. *Notification issued with G.O. Ms. No. 683, Home, dated 18th March 1957, amending rule 278 of the Madras Motor Vehicles Rules, 1950. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act (Central Act IV of 1939).]*

[5th July 1957

APPENDIX.

[Vide answer to Starred question No. 64 asked by Sri K. Sattanatha Karayalar (on behalf of Sri M. Kalyanasundaram) at the meeting of the Legislative Assembly held on 5th July 1957, page 467 supra.]

[SUBJECT.—*Village officers—Grant of travelling allowance, educational and medical concessions—Recommendations of the Cabinet Sub-Committee—Orders passed.*]

*G.O. Ms. No.* 4732, *Revenue, dated* 31*st December* 1956.

The Cabinet Sub-Committee constituted by the Government in G.O. No. 2884, Revenue, dated 19th September 1955, to investigate into the grievances of village officers in general, with special reference to their conditions of service with a view to better their status, emoluments, leave facilities, etc., has submitted its recommendations to the Government. The Government have examined its recommendations and pass the following orders :—

(i) *Increase in dearness allowance.*—The Committee considers that the finances of the State cannot bear the heavy additional recurring expenditure involved on account of the increase in dearness allowance of village officers and servants and has, therefore, not recommended any increase in the dearness allowance of village officers and servants. The Government accept the recommendation of the Committee.

(ii) *Grant of educational concessions.*—The Committee has recommended that the children of village officers and servants should be given the same educational concessions as are given to the children of Non-Gazetted Officers as laid down in G.O. No. 1250, Education, dated 31st May 1952, as modified from time to time, i.e, remission of full fees up to Form III and remission of half-fees from Forms IV to Form VI and that the village servants may be given also the further concession given to peons, remission of full fees from Form IV to Form VI. The Government accept the recommendation of the Committee.

(iii) *Grant of medical concession.*—The Committee has recommended that the village officers and servants be given the same medical concessions as are given to the Non-Gazetted Officers in G.Os. No. 2628, Health, dated 1st April 1952, No. 246, Health, dated 21st January 1953, and No. 2589, Health, dated 17th September 1954. The Government accept the recommendation of the Committee.

The above concessions will apply to village officers and servants of all areas, i.e., settled ryotwari estates taken over by the Government and estates not taken over by the Government. They shall take effect from 1st January 1957.



5th July 1957]

(iv) *Grant of travelling allowance to village officers for their journeys to the taluk office.*—The Committee has recommended—

that a consolidated annual travelling allowance be given to all village officers of settled ryotwari villages and to the Karnams (including Triune Officers) of estate villages taken over by the Government at the following rates :—

| Distance from taluk headquarters. | Consolidated travelling allowance per annum. |
|---|---|
| | RS. |
| 5 to 12 miles ... ... ... | 15 |
| 12 to 20 miles ... ... ... | 20 |
| Over 20 miles ... ... ... | 25 ; |

that the village headmen of estate villages taken over by the Government may be granted travelling allowance for each journey, including the journey for jamabandi on the basis of actual bus-fare or III class railway-fare, plus a daily allowance of Re. 1 for the days on which they have necessarily to take one meal outside their village;

that no separate jamabandi allowance need be given to those village officers who are given this consolidated or ordinary travelling allowance;

that it is unnecessary to grant travelling allowance to the village officers in estate villages not taken over by the Government.

The Government accept the recommendations of the Committee and direct that these concessions be given effect to from the commencement of the current fasli (i.e. 1366).

2. The orders in paragraph 1 (ii) to (iv) will not apply to the village officers and servants of Madras City and Kanyakumari district.

T. K. SANKARAVADIVELU,
*Secretary to Government.*

64764

D
V 211, 31 N57